பதினாறு பக்கங்கள் விலை ரூபா நான்கு

நிரு ரியுசன் சென்ரர்
புகையிரத வீதி
கோண்டாவில்
A/L 91 Com.
Eco - Sat. Sun. 2.15
Com - 3.15
Acc - 4.15
Geo - 9.00

வார
முரசொலி

A/L 91 Sci.
Che - Sat. Sun. 2.30
Bot - 3.40
Zoo - Tue. Thu. 4.00
Phy - 3.00
Pure / App } Mat. Sat. San. 8-10
NIRU TUITION CENTRE
KONDAVIL

முரசு 03 ஒலி 248 ஞாயிற்றுக்கிழமை 17-09-1989 புரட்டாதி 01 லயர் 16

# இந்திய பொதுத்தேர்தலை பொறுத்தே அமைதிப்படை விவகாரம் அமையும்

இந்தியாவின் பொதுத்தேர்தலைப் பொறுத்தே இலங்கையுடனான தனது நிலைப்பாட்டை இந்தியா அமைத்துக் கொள்ளும் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் டிசெம்பர் 10-ம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது இதன் முடிவுகள் 15-ம் திகதிக்குள் வெளிவந்து விடும்.

இத் தேர்தலில் ராஜீவ் காந்தி வெற்றி பெறுவாராயின் இலங்கையுடனான நிலைப்பாட்டை மாற்றக்கூடிய அதிகாரம் அதிகமுள்ளவராகக் காணப்படுவார் என்பதால் செய்யப்படும் ஒப்பந்தம் மறுபரிசிலனை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

இதேசமயம் ராஜீவ் காந்தி அவர்கள் தோல்வியுறும் பட்சத்தில் அமைதிப்படைப் பிரச்சினையானது புதிதாகவரும் பிரதமருக்கு ஒரு தலையிடியாக

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## சுவிஸ் ரயிலில் வீழ்ந்து வடமராட்சி இளைஞர் பலி

(உடுப்பிட்டி)

வடமராட்சி வாலிபர் ஒருவர் சுவிஸ் ரயிலில் இருந்து விழுந்து மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது இமையாணன் குஞ்சர் கடையடியில் உள்ள ஆறுமுகம் குமார் வயது 35 என்னும் வாலிபரே மேற்படி அகால மரணமானதாக அங்கிருந்துவரும் செய்தி தெரிவித்துள்ளது. மேற்படி வாலிபர் ஒரு

— 16 ஆம் பக்கம் பார்க்க

## பயிற்சிக்கு அழைக்கப்பட்ட மாணவரில் ஒரு பகுதி விடுதலை

பயிற்சிக்கென அழைத்துச் செல்லப்பட்டவர்களில் சொந்தவிருப்பத்தின் பேரில் படிப்பைத் தொடர விரும்பும் மாணவர்கள் இன்று மாலை மூன்று மணியளவில் முதல் கட்டமாக வேலணையில் வைத்து விடுவிக்கப்படவுள்ளார்கள்.

யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர், அபிவிருத்திச்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் முஸ்லிம்களை புண்படுத்தும் பாடல்களை ஒலிபரப்பத் தடை

முஸ்லிம் மக்களின் மனதைப் புண்படுத்தக்கூடிய வேறு மொழிப்பாடல்களை வானொலி, தொலைக்காட்சியில் ஒலிபரப்பக்கூடாது என தகவல்துறை இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க பணித்துள்ளார்.

அண்மையில் ரூபவாஹினியில் இடம்பெற்ற சிங்களப்பாடல் ஒன்று முஸ்லிம்

—16 ஆம் பக்கம் பார்க்க

## வீடு கட்ட, திருத்த நிவாரணம் விண்ணப்ப இறுதித் திகதி 20

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் வீடு அமைத்தல், வீடு திருத்துதலுக்கான நிவாரண உதவி பெறுவதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 20ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது

இவ் அமைச்சினால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள

— 16 ஆம் பக்கம் பார்க்க

## தெற்கில் தொடரும் கொலைகள் 150 அரச கட்டிடங்கள் எரிப்பு

தென்பகுதியின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்ந்து சீரற்ற நிலையிலேயே இருந்து வருகின்றது கடந்த நான்கு தினங்களில் நூற்றி ஐம்பது கொலைகள் அறியக் கூடியதாக இடம்பெற்றுள்ளன. அத்துடன் பல கொலைகள் இரகசியமாகவும் நடைபெற்றுள்ளன.

வன்முறைச் சம்பவங்களின் உச்சக்கட்டமாக கடந்த நான்கு தினங்களில் நூற்றி ஐம்பதுக்கு மதிகமான அரசாங்கத்திற்கு சொந்தமான

— 16 ஆம் பக்கம் பார்க்க

## 19-ம் திகதி 6 கட்சிகள் கூட்டாக ஜனாதிபதியை சந்திக்கவுள்ளன

கடந்த புதன்கிழமை நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டைத் தொடர்ந்து எதிர்க் கட்சிகளுடன் ஜனாதிபதி நடாத்தவுள்ள கலந்துரையாடல்களுக்கான நேர அட்டவணை ஜனாதிபதி செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகமக்கள் முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய சோஷலிச முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், ஈ. பி. ஆர். எல். எப். ஆகியன கூட்டாக இம் மாதம் 19 ஆம் திகதி காலை பத்து மணிக்கு கலந்துரையாடலுக்காக அழைக்கப்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## அமைதிப்படைமீது தாக்குதல் ஜே. வி. பி. உரிமை கோருகிறது

இலங்கையிலுள்ள இந்திய அமைதிப்படையினர் மீது தாம் பல தாக்குதல்களை நடத்தியுள்ளதாக ஜே. வி. பி இயக்கம் தெரிவித்துள்ளதாக பி. பி. ஸி நேற்றுத் தெரிவித்தது.

இதுவரையும் 63 இந்தியத் துருப்புக்கள் கிழக்கில் தமது தாக்குதல்களில் மரணமடைந்ததாக ஜே. வி. பி தெரிவித்துள்ளதாகவும், இது சந்தேகத்திற்குரியது என்றும் பி. பி ஸி தெரிவித்துள்ளது.

இதேசமயம் திருமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்ணிவெடிக்கு யார் பொறுப்பு என்ற இன்னமும் தெரியவில்லை என்றும் தெரிவித்தது

## இலக்கியப்போட்டி தமிழில் இல்லை

எதிர்வரும் 1990 சர்வதேச இலக்கிய ஆண்டை முன்னிட்டு கல்விச்சேவையாளர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் பரந்தரிதியில் போட்டிகளை நடாத்த ஏற்பாடுகள் செய்துவருகின்றது

ஆனால் இப்போட்டியில் தமிழ்பேசும் ஆசிரியர்களுக்காக தமிழ்மொழியில் எவ்வித மான போட்டிகளையும் ஏற்

—16 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். ப. நோ. கூ சங்கங்களுக்கு நிறுத்திவைக்கப்பட்ட கடனுதவி மீண்டும் வழங்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த கடனுதவி மீண்டும் யாழ். செயலகத்தினால் வழங்கப்படவுள்ளது.

கொழும்பிலுள்ள சமூகசேவைத் திணைக்களத்தின் தலைமைப் பீடத்திலிருந்து யாழ். சமூகசேவைப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிவித்தலின் பிரகாரம் யாழ்ப்பாணத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீண்டும் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கான கடன் உதவி வழங்கப்படும் எனத் தெரியவருகிறது

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் வைத்திருக்கும் உணவு முத்திரையின் பெறுமதியில் (75%) எழுபத்தைந்து

—16 ஆம் பக்கம் பார்க்க

## மின்தடையால் இவர்களும் பாதிப்பு

நேற்று மாலை மூன்றுபேர் எமது முரசொலி அலுவலகத்தினுள் நுழைந்தனர். கந்தல் துணி, கையில் ஒரு பேணி; குலுக்கினார்கள் சத்தமே இல்லை. ஒட்டிய வயிறு மேலும் ஒட்டிப்போயிருந்தது. கண்கள் சோர்ந்து களைத்திருந்தன ஆனால் அவர்களைப் பார்க்கும்போது பிச்சை கேட்கும் நோக்கில் வந்ததாகத் தெரியவில்லை பிச்சைக்காரர் சங்கம் ஏதாவது ஆரம்பித்து பத்திரிகையில் அறிக்கைவிட வந்தார்களோ?- எண்ணியபடி என்ன விஷயம்? என்று கேட்டோம் "எப்ப ஐயா கறண்ட் வரும்?" எனக் கேட்டனர். "ஏன் கறண்டைப்பற்றி கேட்கிறீங்க?" என்றோம்

— 16-ம் பக்கம் பார்க்க

## அரச திணைக்கள கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில் வழங்க அரசு தயக்கம்

(கொழும்பு)

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அமைச்சுக்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்குவெளிநாட்டுப்புலமைப் பரிசில்கள் வழங்கும் விடயத்தில் அரசாங்கம் கடும் போக்கினைக் கையாள ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு இந்த விடயத்தின் முக்கிய கவனம் எடுத்து சம்பந்தப்பட்ட நிபுணர்களுடன் ஆலோசித்துள்ளதாக அறியப்படுகிறது.

நாட்டின் அண்மைய நிலைமைகளால் சமகாலத்தில் புலமைப் பரிசில் பெற்று வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் அங்கேயே தங்கிவிடக்கூடும்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## ஆசிய வங்கி உதவியுடனை

# பாடசாலைக் கட்டிட வேலைகளை துரிதமாக மேற்கொள்ள முயற்சி

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியால் கட்டப்பட்டு வரும் பாடசாலைக்கட்டிடங்கள் தெல்லிப்பழை, காங்கேசன்துறை, வயாவிளான், யாழ்ப்பாணம், அச்சுவேலி, கட்டுவன், இணுவில், உரும்பிராய்ப்பகுதிகளில் மிகவிரைவாகக்கட்டி முடிக்கப்பட்டு வருகின்றன.

கல்விப்பகுதியின் பொறியியல் பகுதியும் பாடசாலைவேலைப் பகுதியும் ஆசியஅபிவிருத்தி வங்கி அதிகாரிகளும் துரிதமாகச்செயற்பட்டு பாடசாலைக்கட்டிட புனருத்தாரண வேலைகளை மிகத்தரமானதாகவும் விரைவாகவும் செய்து முடிக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர்.

இப்பகுதியில் நடைபெறும் விரைவான வேலைகளை யாழ். பிரதிக்கல்விப்பணிப்பளர் செல்வி. தி. பெரியதம்பி அவர்களும் நேரில் மேற்பார்வையிட்டு வருவதும் அதிகாரிகளைப் பாராட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# விவசாய காப்புறுதி குறைப்பு; விவசாயிகள் ஏமாற்றம்

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு நெற்பயிர்க்காப்புறுதிப் பணம் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு மழையில்லாத காரணத்தால் காலபோக நெற்செய்கை முழுதாகப் பாதிக்கப்பட்டது. 1988/1989-ம் ஆண்டுக்குரிய நெற்பயிர்க் காப்புறுதிட்டணம் முழுவதும் செலுத்திய விவசாயிகள் காலபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டாலும் காப்புறுதிப்பணமாவது கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் இருந்தனர்.

ஆனால் தற்போது காப்புறுதிப்பணம் வழங்கப்படும்போது கூடுதலான விவசாயிகளுக்கு குறைந்தளவுடனமே வழங்கப்படவுள்ளது. அம்பன் செம்பியன்பற்று, மருதன்கேணி பகுதிகளில் காப்புறுதிப் பணம் கட்டிய எண்பத்தியொரு விவசாயிகளுக்கு இவ்வாண்டு காப்புறுதிப் பணம் எதுவும் கிடைக்கவில்லை.

இப்பகுதி விவசாயிகள் பல வழிகளாலும் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளனர். ஆகவே 1988/89-ம் ஆண்டு நெற்செய்கைக் காப்புறுதிப்பணம் செலுத்திய அனைத்து விவசாயிகளும் முழுக்காப்புறுதிப் பணத்தையும் பெற்றுக்கொள்ள உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதி விவசாயிகள், பொது ஸ்தாபனங்கள், சமநலச்சேவை திணைக்கள உதவி ஆணையாளர், அம்பன் பெரும்பாக உத்தியோகத்தர் ஆகியோருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்

# தென்னை உரம் சகாயவிலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்

(சங்கானை)

தொல்புரம் கமநலச் சேவை நிலையத்தில் இப் பிரதேச விவசாயிகள் நலன் கருதி சகாய விலையில் தென்னை உரமும் பழ மரக்கன்றுகளுக்கான உர வகைகளும் விநியோகிக்கப்படவுள்ளன.

அத்துடன்கால்நடைகளுக்கு ஏற்படும்நோய்களுக்கான மருந்து வகைகளும், உணவு வகைகளும் சகாய விலையில் இந்த நிலையத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இப்பகுதி விவசாயிகள் இவற்றை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் தொல்புரம் கமநலச்சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

# நல்லூர் வித்தியாலயத்தில் மாணவர் நிதியம் ஆரம்பம்

(பூநகரி)

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கிணங்க வறிய குடும்பங்களில் இருந்து இப்பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் தமது குடும்ப வறுமை நிலையில் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலும் தமது திறமைகளை பாடசாலை புற நிகழ்ச்சிகளில் கலந்து வெளிக்கொணர முடியாத நிலையிலும் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாக இருக்கும் நிலையை மாற்றி ஏனையமாணவர்களைப் போல் சந்தோஷமான சூழ்நிலையில் கற்கச் செய்யவே வறியமாணவர் நிதியம் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது

இவ்வாறு பூநகரி நல்லூர் அரசினர் வித்தியாலயத்தில் வறிய மாணவர் நிதியத்துக்கு தமது முதல் நன்கொடையை வழங்கி நிதியத்தை ஆரம்பித்துவைத்துப் பேசிய பாடசாலை அதிபர் திரு. பொன். தில்லைநாதன் குறிப்பிட்டார்.

நூற்றுக்கு மேற்பட்ட பெற்றோர்கள் நலன் விரும்பிகள் கலந்துகொண்ட விசேட பொதுக் கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளரும் இளைஞர் சேவை மன்ற அதிகாரியுமான கா. மகேஸ்வரன் உரையாற்றுகையில்; இன்று எமது அதிபரினால் ஆரம்பித்துவைக்கப்படும் இச் சிறப்பான பணியின் மூலம் எமது கிராமத்தில் மிகவும் வறிய நிலையில் வாழும் இருபது விதமான குடும்பத்தில் இருந்து வரும் மாணவர்கள் நல்ல பலனைப் பெறுவார்கள் இந்நிதியத்துக்கு வசதிபடைத்த எல்லோரும் உதவ வேண்டும் என்றார்.

இந்நிதியத்துக்கென அதிபர் தலைமையில் ஐவர் கொண்ட குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது. பொருளாளராக க. மகாதேவர் தெரிவுசெய்யப்பட்டார். உடனடியாக இந்நிதியத்திற்கு இரண்டாயிரம் ரூபாவரை சேர்ந்தது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலை சாரணர் குழுவும் இந்நிதியத்திற்கென தமது செயற்பாட்டின் மூலம் நிதிசேகரித்து உதவ உள்ளது.

பாடசாலை உப அதிபர் செல்வி. ஈ. ஆர். இராசநாயகம் நிறைவுரை வழங்கினார்.

## புதிதாகத் தாதிகள் நியமிக்கப்படுவர்

[பண்டத்தரிப்பு]

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு அடுத்தமாதம் இரண்டு தாதிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அம்புலன்ஸ் வண்டி விடுவதற்கான கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமெனயாழ். பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ். கனகசபை தெரிவித்துள்ளார்.

# வத்திக்கான் வானொலியின் தமிழ் ஒலிபரப்பு தினமும் இடம்பெறும்

வத்திக்கான் வானொலியின் தமிழ் மொழி ஒலிபரப்பு தற்பொழுது தினமும் இலங்கை நேரப்படி காலை ஏழு மணிக்கு சிற்றலை 25, 31, 41 மீட்டர் அலைவரிசைகளிலும் மாலை 8.10 மணிக்கு 16, 19, 25மீட்டர்அலைவரிசைகளில் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது.

றது.

திங்கட்கிழமைகளில் திருத்தந்தையின் மூவேளை ஜெப உரை, கதையும் கருத்தும், அஞ்சல் பெட்டி என்பனவும், வியாழக்கிழமைகளில் திருத்தந்தையின் பொதுப்பேட்டி பேராலய அறிமுகங்கள் என்று பல்வேறு பட்ட அம்சங்களும் நிகழ்ச்சிகளில் இடம்பெறுகின்றன. திங்கள் தவிர்ந்த ஏனைய தினங்களில் தினமும் நான்கு நிமிடங்கள் செய்திகள் ஒலிபரப்பப்படுகின்றன.

வத்திக்கான் வானொலியின் தமிழ்ப்பணியின் பொறுப்பாளராக தமிழ்நாட்டைச்சேர்ந்த இயேசு சபைக்குரு ஒருவர் பணிபுரிந்து வருகின்றார். தொடர்புகொள்ள விரும்பும் நேயர்கள் வத்திக்கான் வானொலி (தமிழ்ப்பணி) லொயோலா கொலிஜ், அ. பெ. எண் 716, சென்னை 600034 என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தனிநபர் கொள்ளை

இரத்தினபுரி ஹட்டன் நஷனல் வங்கியில் இருந்து ஆயுதம்தாங்கிய நபர் ஒருவர் எண்பது ஆயிரம் ரூபாவைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச்சென்றுள்ளார்.


## பதவி வெற்றிடங்கள்

1. தயாரிப்பு முகாமையாளர் (Project Manager)
2. குசினி முகாமையாளர்
3. சைவ உணவுச் சமையலாளர்கள்
4. குசினி உதவியாளர்கள்
5. கணக்காளர்கள்
6. பொது மெக்கானிக்ஸ்
7. களஞ்சியப் பொறுப்பாளர்கள்
8. களஞ்சிய உதவியாளர்கள்
9 காவலாளிகள்

உங்கள் முழுத்தரவுடன் (Bio - Data) தராதரம் Qualification) ஆகியவைகளுடன் 30.09.89 க்குபிந்தாமல் விண்ணப்பிக்கவும்.

சம்பளம் :-

தகுதியடிப்படையில் நேரில் முடிவுசெய்யலாம்

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-

தலைவர்

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**

**கலாசாலை வீதி, திருநெல்வேலி,**

**யாழ்ப்பாணம்.**

09150



**CLASSES IN ENGLISH**

**TYPING**

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3 RD. CROSS ST, JAFFNA.



## சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

விலைகள் அதிகரித்துள்ள நிலையில் மலிவாக Honda Raccoon சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்பு இல. 2, "அன்பகம்" இராச வீதி, நல்லூர். 09188

**வாடகைக்கு**

திருநெல்வேலி மணற்தறை லேனில் பெண்களுக்கு உணவுடன் கூடிய தங்குமிட வசதி உண்டு. இல282, மே/பா முரசொலி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 09201

**விற்பனைக்கு**

கிளிநொச்சி Town இலிருந்து வில்சன் றோட் 1-ம் கட்டையில், றோட் அருகில் மின்சார வசதியுடன் நல்ல சுற்றுடலில் நூற்றைம்பது காய்க்கும் தென்னைகளுடனும் இரண்டு கிணறுகளுடனும் 4 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு, வி. ப. இல. 285 மே/பா, முரசொலி, யாழ்ப்பாணம். 09191



**A/L MATHS**

**ஆசிரியர்: ரவிமோகன்**

யாழ்ப்பாணம்

[பெருமாள்கோவிலடி]



**விலை குறைவு! தரம் நிறைவு!**

**இருப்புக் குறைவு! இன்றே நாடுங்கள்!**

உங்கள் வசிப்பிடங்களை குளிர்மையாகவும் அழகாகவும் வைத்திருக்க

I மூன்றே வருடங்களில் இளநீர் தரக்கூடிய செவ்விளநீர் நாற்றுக்கள்.

II ஆறே மாதங்களில் நிறைந்த பழங்களைத் தரக்கூடிய தேசி நாற்றுக்கள்.

III நல்ல இனக் கொய்யா நாற்றுக்கள்

நாடவேண்டிய முகவரி:-

**சைவ வித்தியா விருத்திச்சங்கம்**

கலாசாலை வீதி, திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

09151



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பினை பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computer Programming in Basic Language

ஆரம்பம்: 18. 09. 89

(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)

பயிற்சிக் காலம்: 3 மாதம்

சேரும்பொழுது செலுத்த வேண்டியது 500/-

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I. B M (compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும். தமிழிலும் விளக்கம் அளிக்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.




**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, Power House Road

2-nd Lane, Jaffna

(Near Sub-Post Office)

09168




## தஞ்சம் நீர் தந்தருள்வீர்!

பல்லவி

ஆதரிப்பாய் எங்கள் அருள்மரியே! எம்மை
ஆதரிப்பாய் எங்கள் அருள்மரியே!

சரணம்

ஆதரிப்பாயே அம்மா! எங்கள் அல்லல்கள்
போயொழிய,
நீயிருப்பாயிங்கே! நல்ல நீதிகள் நிலைத்திருக்க,
ஆதரிப்.. ...
அன்பருள் அகத்திருக்க, இங்கே அடியவர்
வாழ்ந்திருக்க,
வன்பகை நீக்கியென்றும், இந்த வையகம்
பூத்திருக்க!
ஆதரிப்.....
தீமைகள் நினைத்திடாத நல்ல திவ்விய சிந்தை
தாரும்!
வாய்மையில் வாழ்ந்திருக்க, எமக்கு வல்லமை
பெற்றுத்தாரும்
ஆதரிப்......
பஞ்சம்பிணி அகன்று, இந்தப் பாரில் நாம்
சஞ்சரிக்க
தஞ்சம்நீர் தந்தருள்வீர், நற்தாயாக இருந்
தருள்வீர்!
ஆதரிப்......
தர்மம் தழைத்திருக்க, பெரும் சத்தியம்
ஓங்கிவர
நல்வழி பெற்று எங்கள் நல்நாட்டினர், வாழ்ந்திருக்க
ஆதரிப்......
வாசமலர் தொடுத்தோம் உமக்கு வந்தனை நாம்
புரிந்தோம்
நேசக்கரம் விரித்தே! நீண்டாசி நீரளிப்பீர்!!
ஆதரிப்......
அமல உற்பவி! ஆரோக்கிய அருள்மரி! கமலத்தாழடி!
கைதொழ இறைஞ்சும்.

**இன்று முகமாலை புனித ஆரோக்கிய மாதா பெருவிழா**

# பண்டிதமணியுடன் பதினைந்து நாள்

முருகையன்



பண்டிதமணியும் அவர் தொடர்பான நினைவுகள் பற்றியும் பலர் எழுதியுள்ளனர். அண்மையில் வெளியான 'நினைவு மலரிலும்' அவ்வகைப் பட்ட கட்டுரைகளுஞ் செய்யுள்களும் வந்துள்ளன.

அந்த மலரில் நானும் ஒரு பாட்டு எழுதினேன். அதிலே பண்டிதமணியின் பண்புகள் சிலவற்றையும் அவரது நினைவுகள் எழுப்பிய சில உணர்ச்சிகளையும் காட்டியிருக்கிறேன். ஆனல், அது போதாது. என்னுடைய பள்ளிப்பருவத்தில் ஒரு சமயம் பண்டிதரின் 'ஆசிரமத்திலே' அவர் உடனிருந்து சில நாள்கள் பழக வாய்த்தது. அந்த அரிய அநுபவத்தையும் பதிந்து வைப்பது நல்லது.

அது 1952- அந்த ஆண்டில் நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பிற் படித்தேன். மார்கழியில் இரண்டாவது தடவையாக 'என்ற்/றன்ஸ்' சோதனை எடுத்திருந்தேன். எஸ். எஸ். சி. படித்தது 1950 இலேதான், எஸ், எஸ், சி. இல் முதலாம் பிரிவுச்சித்தி கிடைத்ததால் உப அதிபர் ஆசைப்பிள்ளையின் அனுமதியுடன் அடுத்த ஆண்டே எச். எஸ். சி,(என்ற்/றன்ஸ்)சோதனையை எழுதினேன் ஆனல் அது சரிவரவில்லை. முதலாவது முயற்சி தோல்விதான் பிறகு இரண்டாவது தடவையாக அதே சோதனையை ஐம்பத்திரண்டாம் ஆண்டு மார்கழியில் எழுதினேன். என்ன மறுமொழி வருமோ தெரியாது. மார்கழியைத் தொடர்ந்து மறுமொழியை எதிர்நோக்கிக் கொண்டிருந்த இடைக்காலம்- அந்த இடைக்காலத்திலே தான் பண்டிதமணி வீட்டிலே தங்கியிருக்கும் வாய்ப்புக் கிட்டிற்று.

ஒருநாள் என்னுடைய ஐயா (தகப்பனர்) என்னைக் கேட்டார்-

'தம்பி, பண்டிதரிட்டைக் கேட்டுப் பாக்கிறேன்-நீ கொஞ்ச நாளைக்கு அவர் வீட்டிலை நிண்டு சைவ சித்தாந்தம் படியென் - சும்மா தானே இருக்கிருய்! பள்ளிக் குடமும் போறேல்லை...'

பண்டிதர் என்ருல், கணபதிப்பிள்ளைப் பண்டிதர்தான்; பெயர் சொல்லாமல், சும்மா பண்டிதர் என்ருல், அவர் தான். அந்த நாளிலே பண்டிதமணி என்று சொல்லும் பழக்கம் அதிகமாக நடைமுறைக்கு வரவில்லை. என்னுடைய ஐயா (இராமுப்பிள்ளை உபாத்தியார்) பண்டிதர் வீட்டுக்கு அடிக்கடி போவதுண்டு, அவருடன் உரையாடுவதும் உண்டு, ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கச் செயற்பாடுகள் சிலவற்றுடனும் ஐயாவுக்குத் தொடர்பு இருந்தது. அது சம்பந்தமாகவும் ஐயா பண்டிதரைச் சந்திக்க வேண்டி நேர்ந்திருக்கலாம். இவை பற்றிய விவரம் ஒன்றும் அப்போது எனக்குத் தெரியாது; அதிகம் அக்கறை கொள்ளவும் இல்லை.

ஆனல், பண்டிதரின் மேடைப் பேச்சை ஒரு சமயம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்ப்பள்ளிக்கூடமண்டபத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின் போது கேட்டிருந்தேன். அவருடைய மென்மையான தாழ்ந்த குரல் மேடைப்பேச்சுக்குப் பொருத்தமில்லை என்று நான் எனக்குள் எண்ணியதுண்டு. என்ருலும், அவருடைய பேச்சின் உயிரனைய பகுதி உலகாயதம் மாயாவாதம் என்பவற்றையிட்டு எச்சரிக்கை செய்யும் தொனியில் இருந்தமையை நான் கிரகித்துக் கொண்டேன். ''பிண்டிய மாயாவாதம் என்னும் சண்ட மாருதம்'', ''உலகாயதன் எனும் ஒண்டிறற் பாம்பின் கலாபேதத்த கடுவிடம்'' என்று வரும் திருவாசகப் பகுதிகளின் விருத்தியுரையாக அந்த மகாநாட்டு மேடைப் பேச்சு அமைந்தது.

மகாநாட்டு மேடைப் பேச்சுக்குப் பின்னர் பண்டிதரின் கட்டுரைகளை வாசிக்க நேர்ந்தது பள்ளி- கல்லூரிச் சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் அந்தக் கட்டுரைகள் வெளியாகியிருந்தன. பிரதானமாகத் தினகரன் பத்திரிகையில் அவற்றைக் காணலாம்.

சித்தாந்தம் படிப்பதற்காகப் பண்டிதரிடம் போகும்படி என்னுடைய ஐயா சொன்ன போது நான் தயங்கினேன். கூச்சம் எனது குணம். பெரியவர்களிடம் உள்ள மரியாதையும் அவ்வித நேரடி ஊடாட்டத்துக்குத் தடங்கலாக இருந்தது போலும்!

''சித்தாந்தம் என்னத்துக்கு? தமிழ் படிக்கிற தெண்டாற் போவம்'' இப்படி நான் ஐயாவிடம் சொன்னேன். ஐயா சிரித்தார் என்ன நினைத்துச் சிரித்தாரோ தெரியாது.

ஐந்தாறு நாள் சென்றபின் ஒரு நாள் அவர் சொன்னர் ''நான் பண்டிதரோடை கதைச்சநான் தமிழ் படிக்கிறத்துக்கு வரட்டாம்...படிக்கிறதுக்கெண்டும் இல்லை தனியாய் அவர் ஒரு பாடமும் சொல்லித் தரமாட்டார். அதுக்கு நேரமும் இல்லை தானே! கட்டுரையள் சிலது இருக்காம். அதுகளைக் கொப்பி பண்ண வேணுமாம். உன்ரை எழுத்தும் நல்லது தானே... போய்ப் பிரதிபண்ணிக் குடு: பண்டிதர் வீட்டை எத்தினை பேர் வருவினம், போவினம்! அவையளோடை பண்டிதர் பல விஷயங்களையும் கதைப்பார். அதுகளைக் கேட்டாலே போதும். புத்தகங்களும் ஏதேன் வாசிக்கத் தருவார். நீ போய் ஒரு இரண்டு கிழமை அவர் வீட்டிலை நின்டிட்டு வாவேன்...''

நான் சம்மதித்தேன். சைவ சித்தாந்தம் படிப்பதில் அந்த நேரத்தில் ஏன் நான் அவ்வளவு ஈடுபாடு காட்டவில்லை? காரணம் எனக்கே தெளிவாகத் தெரியாது.

ஒரு சங்கதி நினைவுக்கு வருகிறது. அந்த நாள்களிலேதான் திராவிடக் கழக, திராவிட முன்னேற்றக் கழகப் பிரசுரங்கள் பெருவாரியாக இலங்கைக்குள் நுழைந்து கொண்டிருந்தன. 'ஆரிய மாயை' 'தீ பரவட்டும்' பரமசிவனுக்குப் பகிரங்கக் கடிதம், 'புராண போதை' 'மாஜி கடவுள்கள்' என்றெல்லாம் புத்தகங்கள் கருமையான கண்ணை உறுத்தும் நிறங்களிலே அட்டைப் படங்கள்; கெட்டித்தனமான அடுக்கு மொழி அலங்கார நடையிலே சமய எதிர்ப்புப் பிரசாரம்; புராண எதிர்ப்புக் கேலிக்குரல்கள்; கண்டனங்கள்; நையாண்டிகள்; சவால்கள்; தர்க்கங்கள். புத்தகங்களின் தொகையோ அதிகம், விலையோ மிகவும் குறைவு. எங்கள் பள்ளிக்கூடத்திலே, வாசிப்புப் பழக்கம் மிகுந்த மாணவர்கள் கணிசமான தொகையினர். இந்தப் பிரசுரங்களையெல்லாம் அநேகமாக நம்மிற் பலர் படித்திருந்தோம். 'வேலைக்காரி' 'பணம்', 'பராசக்தி' மந்திரிகுமாரி முதலான திராவிட இயக்கச் சார்புள்ள திரைப்படங்களையும் நாங்கள் பாத்திருந்தோம் இவற்ருல் எல்லாம் சமயஞ் சார்ந்த அக்கறை தேய்வடைந்து போய்க்கொண்டிருந்தன.

இவற்றின் விளைவாக, அன்று இளஞ் சிறுவர்களின் நெஞ்சங்களிலே உறுதியான சமய நாட்டம் இடம் பெறுவது கடினமாயிற்று.

அத்துடன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே, பொதுவுடமை மணமும் நன்கு கமழ்ந்து கொண்டிருந்தது. அங்குள்ள ஆசிரியர் குழாத்திலே, குறிப்பிடத்தக்க சொற்சாதுரியமும் அறிவாழமும் உள்ள சிலர் இடதுசாரிப் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்புவதில் வல்லோராய் இருந்தனர். இந்தக் கருத்துக்கள் கலந்த காற்றைத்தான் எங்களிற் பலர் சுவாசித்துக் கொண்டிருந்தோம்.

இப்படிப்பட்ட சூழலின் வசப்பட்ட எனது மனப்போக்குகள் பற்றி என்னுடைய தந்தையார் அறிந்திருக்க நியாயமில்லை. ஆனல் அக்கால கட்டத்துச் சிறுவர்கள் இவ்வாருன எண்ணச் சூழல்களினிடையே தளம்பிக்கொண்டிருந்தனர் என்பது உண்மை

இது ஐயாவுக்குத் தெரியாதென்ருலும், பண்டிதருக்கு ஓரளவு தெரிந்திருக்கும். பண்டிதருடன் உரையாடும் சிலர் அவருக்கு இந்த நாத்திகப் பிரசார ஏடுகளைப் பற்றிச் சொல்லியிருப்பார்கள் சில சமயம் கனக செந்திநாதனே பண்டிதருடன் இந்த நவீன வெளியீடுகள் பற்றிச் சொல்லியிருக்கலாம். இது வெறும் ஊகம்தான். கனக செந்திநாதன் என்று ஒருவர் இருப்பதே எனக்கு அப்பொழுது தெரியாது.

எது எவ்வாருயினும், ''சைவம் வேண்டாம்; தமிழ் என்ருற் படிக்கலாம்'' என்று நான் சொன்னது பண்டிதருக்கு நகைப்பை உண்டாக்கியிருக்கலாம். ஏனென்ருல், பண்டிதரைப் பொறுத்தவரையில் தமிழ் வேறு சைவம் வேறு என்பதில்லை. அவை அத்துவிதம். பண்டிதரைச் சந்தித்த பிறகு இதை நான் நன்கு அறிந்து கொண்டேன். அவர் அருகில் இருந்து அவர் சொன்னவற்றைக் கேட்ட இரண்டு மூன்று மணித்தியாலங்களின் உள்ளேயே அவர் தம்முடைய இந்த நிலைப்பாட்டை உணர்த்திவைத்துவிட்டார்.

பண்டிதருடைய அந்த நிலைப்பாடு அவரைச் சந்திப்பதற்கு முன்பே எனக்கு இலேசாகத் தெரியும். அவருடைய தமிழ் விழாப் பேச்சைத் தொடர்ந்து 'இந்துசாதனத்திலும்' இந்த வேறுகளங்களிலும் 'அவித்துதப்பிரச்சினையைச்சிலர்வாதித்துக் கொண்டிருந்தனர்.

(வளரும்)

## இயற்கையின் ஆற்றல்

வேம்பிலிருந்து உருவாகும் 123 வகைப் பொருள்கள் பூச்சிகளை கிருமிகளை விரட்டும் பயன் கொண்டவை. சேமிக்கப்படும் தானியங்களை தாக்கும் பூச்சிகளை அண்டவிடாமல் செய்ய வல்லன இவை. பெட்ரோலியத்திலிருந்து தயாராகும் பூச்சிக்கொல்லிகள் கண்டு பிடிக்கப்படாத பலநூறு ஆண்டுகளுக்குமுன்பே இந்தியத் துணைக்கண்ட உழவர்கள் இயற்கையான பூச்சி, கிருமி விரட்டிகளை வேப்ப மரத்தின் பழங்கள், இலைகள் ஆகியனவற்றில் இருந்து உருவாகித் தங்கள் பயிர்களைக் காத்து வந்தனர். கம்பளங்களைப் பூச்சிகள் அரிக்காமல் காக்க அவற்றின் மடிப்புக்களிடையே உலர் வேப்பிலைகளை கொத்தாக வைக்கும் வழக்கத்தை மக்கள் பின்பற்றி வந்துள்ளனர்.

இலங்கையில் அரிசி, பருப்புவகை, கிழங்குகளில் அவ் உணவுப்பண்டங்கள்பூச்சியைப்போக்க களஞ்சியங்களில் வேப்ப இலையைப் பரவ விட்டனர். மூட்டைகளில் சேகரிக்கப்படும் தானியங்களுடன் வேப்பிலைகளையும் கலந்து வைக்கும் பழக்கம் பாகிஸ்தான் பகுதியில் இருந்துள்ளது

உலகத்தின் ஊடாக

# கிழக்கும் மேற்கும் சந்திக்கின்றன

# பிரிந்தவர்கள் கூடினால்

# பேசவும் வேண்டுமா?

வி.என்.எஸ்.உதயசந்திரன்

அண்மைக் காலமாக சர்வதேச அரங்கில் வியத்தகு மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. நாம் எதிர்பார்த்திராத மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் காணும் போது எதிர்கால அரசியல் நிலைமைகள் எப்படிச் செல்லும் என்று ஊகிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

இரண்டாம் உலகமகா யுத்தத்திற்குப் பின்னர் கம்யூனிசத்தைத் தழுவிக் கொண்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இப்போது ஜனநாயக சுதந்திரம் வேண்டி மேற்கத்தைய கலாசாரத்தைப் பின்பற்றத் தொடங்கியுள்ளன.

கம்யூனிஸ நாடுகளில் தற்போது அதிகளவு சுதந்திரம் வேண்டும் என குரல் கொடுக்கப்படுகின்றது. இன்று இந்த நிலை ஏற்படுவதற்குசோவியத் தலைவர் கொர்பச்சேவ் அவர்களே காரணம் என கடும் போக்குடைய கம்யூனிஸ்ட்டுக்கள் கூறிவருகின்றார்கள்.

கம்யூனிஸ்ட் நாடாக இதுவரை இருந்து வந்த போலந்து 45 வருடகால சரித்திரத்தில் முதற் தடவையாக கம்யூனிஸ்ட் அல்லாத அரசு ஒன்றின் கைகளில் சிக்கிவிட்டது

அங்கு தற்போது பாரிய மாற்றங்கள் ஏற்படக் கூடிய நிலை தோன்றி விட்டது. போலந்தில் கத்தோலிக்கதிருச்சபைகள் சட்டபூர்வமாக இயங்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

கம்யூனிஸக் கோட்பாடுகளை அங்கு தகர்க்கும் முயற்சி ஆரம்பமாகிவிட்டது. அமெரிக்கா மெல்ல மெல்ல போலந்துக்குள் அடியெடுத்து வைக்கத் தொடங்கிவிட்டது.

இப்போது கிழக்கு ஜேர்மனியில் இருந்து மேற்கு ஜேர்மனிக்கு மக்கள் தப்பியோடத் தொடங்கி விட்டார்கள் இதற்கு ஹங்கேரி உதவி புரியத் தொடங்கியுள்ளது.

ஹங்கேரியும் கம்யூனிச நாடுதான். அந்த நாட்டிலும் ஜனநாயக சீர் திருத்தங்கள் நடைபெறுகின்றன சோவியத் யூனியன் ஹங்கேரியில் நடைபெறும் மாற்றங்களைத் தடுக்க எந்த ஒரு முயற்சியையும் மேற் கொள்ளவில்லை

ஹங்கேரி மேற்குலக கலாசாரத்தைப் பின்பற்றத் தொடங்கிவிட்டது. இதனால் கிழக்கு ஐரோப்பாவில் பல மாற்றங்கள் ஏற்படுவதற்கு காரணகர்த்தாவாக இருந்து வருகின்றது.

கிழக்கு ஜேர்மனி மக்கள் மேற்கு ஜேர்மனிக்கு தப்பிச் செல்லும் விடயம் உலக அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது.

ஜேர்மனி ஒருபலம் பொருந்திய சாம்ராஜ்யமாக ஒரு காலத்தில் இருந்தது ஜேர்மனியசர்வாதிகாரி ஹிட்லரின் ஆணவ வெறியில் இரண்டு உலக மகாயுத்தங்களை அது கண்டது இந்த யுத்தங்களால் விரிந்து பரந்து காணப்பட்ட ஜேர்மன் சாம்ராஜ்யம் இரண்டாக பிரிகின்ற அபாய நிலை ஏற்பட்டது.

பலம் பொருந்திய ஜேர்மனிய சமுதாயம் இரண்டாகப் பிரிந்ததால் பலவீனமடைந்தது. கிழக்கு ஜேர்மனி சோவியத் அணியின் ஆக்கிரமிப்பிற்கும் மேற்கு ஜேர்மனி மேற்குலக அணியின் ஆக்கிரமிப்பிற்கும் உள்ளாகியது.

ஜேர்மனி இரண்டாகப் பிரிக்கப்படுகின்றபோதுதாயும் தந்தையும் ஒரு பக்கமும் பிள்ளைகள் மறுபக்கமும் பிரிந்தார்கள். கணவன் கிழக்கு ஜேர்மனியிலும் மனைவி மேற்கு ஜேர்மனியிலும் வாழ வேண்டிய பரிதாப நிலை காணப்பட்டது.

மேற்கு ஜேர்மனிய மக்கள் அதிக சுதந்திரத்தை அனுபவித்தார்கள். கிழக்கு ஜேர்மனிய மக்கள் கம்யூனிஸ ஆட்சியின் கீழ் நசுக்கப்பட்டார்கள். அவர்கள் உரிமைகள் வரையறைக்கு உட்பட்டன.

ஜேர்மனியர்களின் பாச உணர்வை பெர்லின் என்ற சுவர் தடுத்தது. பாச உணர்வு மேலிட்ட போது பெர்லின் சுவரைத் தாண்டிச் செல்ல முயன்ற கிழக்கு ஜேர்மன் மக்கள் பலர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியானார்கள்.

பெர்லின் சுவர் மட்டும் மேற்கையும், கிழக்கையும் பிரிக்கவில்லை கொள்கைகளும் இரு பகுதியினரையும் ஒன்று சேரவிடாமல் தடுத்தது இத் தடையை மக்கள் மீறமுயன்றார்கள் இறுதியாக துப்பாக்கி அவர்களைத் தடுத்தது.

கடந்த ஐந்தாந் திகதி நள்ளிரவு ஹங்கேரி ஆஸ்திரியாவுடனான எல்லையைத் திறந்து விட்டது. ஆயிரக்கணக்கான கிழக்கு ஜேர்மனியர்கள் மேற்கு ஜேர்மனிக்குத் தப்பி ஓடிவிட்டார்கள்.

முதன் முதலில் எல்லையைக் கடந்து மேற்கு ஜேர்மனிக்குச் சென்றவர்கள் மூன்று சோடி தம்பதிகளாவர். இவர்கள் தமது கார்களில் ஆஸ்திரியாவின் ஊடாக பயணம் செய்து மேற்கு ஜேர்மனியைச் சென்றடைந்தனர்.

ஹங்கேரியில் தற்போதுள்ள சுமார் 60 ஆயிரம் கிழக்கு ஜேர்மனியர்களில் எவராவது மேற்கு ஜேர்மனி செல்ல விரும்பினால் போகலாம் என ஹங்கேரியில் வெளிவிவகார அமைச்சர் ஹுலா ஹேர்ன் அறிவித்துள்ளார்.

1969 ஆம் ஆண்டு ஹங்கேரி கிழக்கு ஜேர்மனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி தகுந்த அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாமல் மற்ற நாட்டின் பிரஜைகள் மேற்கு நாடுகளுக்குப் போவதைத் தடைசெய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது ஹங்கேரி ஒப்பந்தத்தை மீறியுள்ளது. தொடர்ந்தும் ஹங்கேரி ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்க மாட்டாது எனவும் அறிவித்துள்ளது.

ஹங்கேரியின் இந்த முடிவு கிழக்கு ஜேர்மனியின் ஆட்சியாளர்களை ஆத்திரமடையச் செய்துள்ளது.

இச் செயல் மனிதர்களை வியாபாரம் செய்யும் திட்டமிட்ட நடவடிக்கை எனவும் உள்நாட்டு விவகாரங்களில் அப்பட்டமான தலையீடு எனவும் கிழக்கு ஜேர்மனி கண்டித்துள்ளது.

யாரையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்பதற்காக எங்களது கொள்கைகளை நாம் மாற்றத் தயாராக இல்லை என ஹங்கேரி வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஹங்கேரி மனிதாபிமான முடிவை' எடுத்தமைக்காக மேற்கு ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் ஹான்ஸ்-டீய்ரிச் ஜென்ஷர் நன்றிதெரிவித்துள்ளார். இவர் பத்திரிகையாளர்கள் மத்தியில் கருத்து வெளியிடுகையில்ஹங்கேரியின் இந்த நடவடிக்கை உலக நாடுகளின் மத்தியில் தனியான மதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

ஹங்கேரியின் செயலைசோவியூனியன் கண்டித்துள்ளது. சோவியத்யூனியன் கண்டனம் செய்வதால் எந்தவித பிரயோசனமுமில்லை. சோவியத்தலைவரின் கொள்கைகளே கம்யூனிஸ நாடுகளின் அரசியல் வரலாற்றில் மாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாயிற்று.

சோவியத் தலைவர் கொர்பச்சேவ் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரை எதிர்வரும் நவம்பர் மாதப் பிற்பகுதியில் வத்திக்கானில் சந்தித்துப்பேசவிருக்கிறார். சோவியத் வரலாற்றில் பாப்பரசர் ஒருவரைச் சந்திக்கும் கிரெம்ளின் தலைவர் கொர்பச்சேவாவர்.

சோவியத்தலைவரின் இந்த மாற்றங்கள் கம்யூனிஸ நாடுகளின் மக்களின் உணர்வுகளில் மாற்றத்தை ஏற்படுத்த முனைந்துள்ளதென்பதில் வியப்பில்லை.

உலகில் கம்யூனிஸ நாடுகளில் மட்டுமே பிரச்சினைகள் இல்லை என்று பேசிய காலம் ஒன்று இருந்தது. இன்றுபாரிய பிரச்சினைகள் கம்யூனிஸ நாடுகளிலேயே உருவாகி வருகின்றன என்று பேசுகின்ற நிலை உருவாகிவிட்டது.

ஜேர்மனி பலம்பெற்ற நாடாக மாறிவிட்டால் அது ஆபத்து என்று கருதியே இந்த நாட்டை இரண்டாகப் பிரித்தார்கள் இன்றுகிழக்கு மேற்கு ஜேர்மனியர்கள் ஒன்றுசேரத் துடிக்கின்றார்கள்.

ஒரே இனத்தை நீண்ட காலத்திற்கு எவராலும் பிரித்துவைக்க முடியாது. ஒவ்வொருவரும் தங்களது கொள்கைகளையே நிலைநிறுத்த முனைகிறார்களே தவிர மக்களைப் பற்றி எவரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

எங்களுக்கு மக்கள் முக்கியமல்ல கொள்கையே முக்கியம் மக்கள் மீது பலவந்தமாக கொள்கைகளைத் திணிக்கின்றபோது மக்களால் எவ்வளவு காலத்திற்கு சகித்துக்கொள்ள முடியும்

கிழக்கு ஜேர்மனிய மக்கள் மேற்கு ஜேர்மனிக்கு தப்பிச் சென்றபோது மேற்கு ஜேர்மனியர்கள் மலர்கள் தூவி வரவேற்றார்கள். இது அவர்களின் பாச உணர்வையே வெளிப்படுத்துகின்றது

ஒரு இனத்தை நீண்டகாலம் பிரித்துவைக்க முடியாது என்பதை ஜேர்மனி மக்கள் உலகிற்குப் புகட்டும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

---

# வியர்வை சிந்தும் "ரொபட்"

அமெரிக்காவில் 'பட்டலே ஆய்வு கூடம் (Battelle Laboratories) 'ரொபட்' எனப்படும் விசித்திர இயந்திர மனிதனைத் தயாரித்துள்ளது. வாய், மூக்கு, முள்ளந்தண்டு, மூட்டு ஆகியவற்றுடன் அசல் மனிதனைப் போல் காணப்படும் இவனது மார்பு, மூச்சு விடும் போது விரிந்து சுருங்குகிறது. இவ் இயந்திர மனிதனுக்கு தோல் உண்டு வியர்வையும் சுரக்கிறது.

இந்த 'ரொபட்' உயரம், அவையங்களின் அமைப்பு ஆகியவற்றில் மனித உடலை ஒத்ததாக உள்ளதால் அதற்கு 'மென்னி' என்று பெயர் இடப்பட்டுள்ளது 'மென்னி' நடப்பதுடன் கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்காருவதுடன் தரையில் சம்மானம் போட்டுக் கொண்டும் உட்கார முடியும்; தவழ்ந்து செல்ல முடியும், அதன் உடல்வெப்ப நிலையையும் கண்டறிய முடியும் அமெரிக்கஇராணுவ உபயோகத்திற்காகக் தயாரிக்கப்பட்ட 'மென்னி' சுமார் 20 இலட்சம் டொலர் செலவில் உருவாக்கப்பட்டதாகும். அமெரிக்க இராணுவ வீரர்களுக்குப் பாதுகாப்பான தகுந்த உடையைத் தயாரிக்க இராணுவத் தலைமையகம் விழைந்தமையால் அதற்கான பரிசோதனைகளைமேற்கொள்ள 'மென்னி'பயன்படுத்தப்படும்.

கடும் குளிர் கடும் வெப்பம் ஆகியவற்றைத் தாங்கிக் கொள்வதற்உயிராபத்து மிக்க இராயனப் பொருட்களில் இருந்து காத்துக் கொள்ளவும் மிகமோசமான நிலமைகளை சமாளிக்கவும் தயாரிக்கப்படும் உடைகள் எந்த அளவிற்கு நடைமுறையில் வெற்றி அளிக்கும் என்பதை இவ் இயந்திர மனிதனைப் பயன்படுத்திச் சோதித்தறிந்து கொள்ள முடியும். இவ்வகையில் மென்னிக் அப்பாதுகாப்பு உடைகளை அணிவித்து பரிசோதனை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

'பட்டலே' நிறுவனத்தின் பயன் முறை இயற்பியல் கேந்திரத்தின் தலைவர்டேவிட் பென்னட் இது பற்றிக் குறிப்பிடும் போது அமெரிக்காவின் யூடா மாநிலத்தில் உள்ள ஆயுத சோதனைக் தளத்திற்கு 'மென்னி' கொண்டு செல்லப் பட்டுள்ளதாகவும் இச்சோதனைத்தளமானது ஆபத்தான இரசாயனங்களையும், உயிரியல் ஆயுதங்களையும் பரிசோதிப்பதற்கு பயன்படுத்தப்படுவதும் ஆகும், 'மென்னி' சோதனைத் தளத்திற்கு அருகில்உள்ள அறையில் இருக்கும் கம்பியூட்டருடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் அங்க அசைவுகள் மற்றும் வெப்ப நிலை மாற்றங்களை இக்கம்பியூட்டர்தான் கட்டுப்படுத்தி அறிவிக்கின்றது.

மென்னியின் உடலில் நாற்பது மூட்டுக்கள் உண்டு. இம் மூட்டுக்கள்தான் அது மனிதன் போல் இருக்கவும் தவழவும் உதவுகின்றது பன்னிரண்டு வெப்ப மூட்டிக் கருவிகள் இருப்பதனால் அதன் தோல் சீரான வெப்ப நிலையில் இருப்பதற்கு உதவுகின்றது.

சாதாரண மனிதன் உடல் களைப்படையும் வண்ணம் ஏதாவது வேலையில் மூழ்கினால் உடல் சூடேறுகிறது, வியர்வை அரும்புகிறது. அது போலவே 'மென்னி'யும் பல்வேறு பணிகளைச் செய்யும் போது அதற்கும் வியர்வை ஏற்படுகின்றது. இன்னென்ன மணிகளுக்கு இந்த இந்த அளவுகளிலேயே வியர்வை வெளிப்பட வேண்டும் என ரொபட்டில் கட்டுப்பாட்டுக் கருவிகள் உண்டு மிகமிக நுண்ணிய குழாய்களில்நிரப்பப்பட்டுள்ள நீர்தான் இவ்வாறு வியர்வையாக வெளிப்படுகின்றது. இவ்வித நுண்ணிய குழாய்களின் செயற்பாட்டின் பயனுகத்தான் 'மென்னியின்' மார்பு சுருங்கி விரிந்து வாயினாலும், மூக்கினாலும் சுவாசிக்கின்றது. மென்னியின் எலும்புக்கூட்டிற்கு மேலாகப் பொருத்தப்பட்டுள்ள நுண்ணிய கருவிப் படலம்தான் தோலின் வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துகின்றது இப்படத்துடன் தோல் இணைக்கப்பட்டுள்ளது.

பட்டலே ஆய்வு கூட நிர்வாகம் இவ்வித ரொபட்டை தயாரிப்பதற்கான தொழில் நுட்பத்தை தனியார் துறைக்கு அளிக்க விரும்புவதனால் விளையாட்டுப் பொருள்கள் உற்பத்தியாளரும், ஆடை தயாரிப்பாளர்களும் போட்டியிட்டுக் கொண்டு இவ்வெப்பத்தை தாம் பெற்றிட பல விதங்களில் முயற்சி மேற்கொள்கின்றார்கள். ஆனால் அமெரிக்க இராணுவத் தலைமையகம்இவ்வகை ரொபெட்டின் தொழில் நுட்பத்தை தனியாரிடம் ஒப்படைத்தால் தமது இராணுவ இரகசியங்கள் வெளிப்பட்டுவிடும் என்ற அச்சத்தை கொண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எஸ்.பி.ஜோன்சன்

# சில மனப்பதிவுகள்

யாழ்ப்பாணத்தின் புறச்சூழலால் ஒவ்வொரு மனித மனத்திலும் நிறைந்து போய்க் கிடக்கும் 'இதய இறுக்கம்' கொஞ்சமாவது குறையாதா என்று ஏங்கிப் போய்க் கிடந்தமுகங்கள் பல, 10-ம் தேதி காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் கொஞ்சம் மலர்ந்த முகங்களுடன் எதையோ எதிர்பார்த்துக் காத்திருந்தன.

'நுழைவு' சீட்டுக்கள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டிருந்த போதும் அதையும் ஒருவாறு சமாளித்துப் பலர் நுழைந்து... அரங்கு முற்றாக நிரம்பிய நிலை!

ஒரு மழைகால அருணோதயத்தைப் பார்க்க வந்த இந்த முதலாவது குழு - பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டவர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், விமர்சகர்கள், பேச்சாளர்கள், இலக்கிய நாடக அமைப்புக்களின் உறுப்பினர்கள் – ஒரு மேல்மட்டப் பார்வையாளர் என்று சொல்வதில் தவறில்லை என்று தோன்றியது!

நாடகம் தொடங்கி முடியும் வரை – நாடகத்தோடு ஒட்டி அவ்வப்போது சிறுசிறு சிரிப்பொலிகள் – 'தற்செயலாய்' என்பது போல் முன் பக்கம் வந்து விழுந்த ஒரே ஒரு கடதாசி அம்பு – இவை தவிர வேறு எதுவிதக் குழப்பமும் இல்லாமல் – பூரண அமைதி காத்து எல்லோரையும் ரசிக்க விட்ட – நல்ல அவை!

அரங்கின் மணிக்கூடு 9–30ஐத் தாண்டி ஓரிரு நிமிடங்களின் பின் – கலாநிதி மௌனகுரு அவர்கள் ஒரு 'பைலுடன்' மேடைக்கு வருகிறார்.

துணைவேந்தர் துரைராஜா, பேராசிரியர் பாலகிருஷ்ணன், பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோரை 'சம்பிரதாயச் சடங்கு'க்கு அழைக்கிறார். அந்த அறிமுகம் ஒரு இருபத்தைந்து நிமிடம் நீடிக்கிறது. இவர்கள் மூவரும் குறிப்பிட்ட நாடகம் மேடை ஏறுவதற்கு எவ்விதம் உதவினார்கள்என்று கூறிஅவர்களுக்குநன்றி தெரிவிக்க நெறியாளர்விரும்பியிருந்தால்',அந்த நன்றியை–அவையில் விநியோகிக்கப்பட்ட சிறு பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றியது.

நல்லதோர் நாடகத்திற்கு முன்னே– பின்னே– நிகழும்– மேடைப் பேச்சுக்கள் பார்வையாளர்களால் வெறுக்கப்படுகின்றன என்பது ஒரு சாதாரண உளவியல் உண்மை!

மணி 9.55!

நாடகம் ஆரம்பமாகிறது. புதுவெளிச்சம், புதுத்திருஷ்டி, புதுமெருகு, புதிய படிமங்கள்– மகாகவியின் கவிதைகளை மனதால் படிக்கிற போதே வியப்பாயிருக்கும்! ஆனந்தமாயிருக்கும்!

ஆகவே நாடகம் முழுவதும் ஒலித்த அந்தக் கவிஞனின் மனம்– அவை பாடப்பட்ட போதும் சரி பேசப்பட்ட போதும் சரி– அற்புதமாயே இருந்தது என்பது குறிப்பிடத் தேவையற்றது.

அதில் உச்சமாய் அமைந்து– மனதில் பசுமரத்தாணிபோல் தைத்த ஓரிரு இடங்களைக் குறிப்பிடுதல் தேவையானது.

சரியாய்த்தான் நடந்து கொண்டீர்! சரியாய் ஏன் நடக்க வேண்டும்?' என்று மறைக்காடர் கேட்பார்,

'சரியான கேள்வி முந்திச் சக்கடத்தாராம் எல்லே' என்று கண்ணாத்தை சொல்வாள்,

,சரி என்ன வென்றே சரியாக விளங்கவில்லை!' என்று மாசிலன் திணறுவான்,

'சரி சரி கேட்டுக் கொண்டு தக்கதோர் முடிவைக் கூறன்' என்று கண்ணாத்தை அவசரப் படுத்துவாள்.

அற்புதந்தான் போங்கள்! இன்னொரு இடம்!

'பிழையினைக் கடவுள் செய்தால், சரியாக்கல் மனிதன் வேலை' என்று மறைக்காடர் சொல்லும்போது. அந்த வசனத்தின் 'ஆழம்' காரணமாய், நாங்கள் நாடகத்தைத் தொடர்வதைக் கூடமறந்து... அந்த வசனத்தின் பின்னே நெடுநேரச் சிந்தனையில் இழுத்துச் செல்லப்படுவதை...

அது ஒரு அருமையான அநுபவம்! நாடகத்தின் கதையை முழுவதுமாய்ப் பார்க்கிற போது... அது பார்வையாளனிடம் ஏற்படுத்தும் தொற்றல் என்ன?

நாடக ஆரம்பத்தில் இருந்த மனப்பாங்கு நாடக முடிவில் ஏதாவது முறையில் மாற்றமடைகிறதா?

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுவது போல 'மயிலி என்ற ஏழை மீனவப் பெண்ணினதும் மாயன் என்ற சாதாரண உழைப்பாளியினதும் வாழ்வில் ஏற்படும் அசாதாரணமான ஆனால் மனிதசாத்திய வட்டத்துக்குள் நிற்கும் நெருக்கடி நிலை...!'

கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் குறிப்பிடுவது போல் 'அவர்கள் அதை வாழ்ந்து கடக்க நினைக்கும் தன்மை...!' அவர்களின் வாழும் ஆசை... எமது மனதிலும் ஒரு பிடிப்பையும் வாழும் உறுதியையும் தருகிறது.

அது தான் மகாகவி எம்மிடம் விட்டுச் செல்லும் செய்தி நடிகர்களில்பார்வையாளரின் ஏகோபித்த பாராட்டைப் பெறுபவர் மன்னவனாக நடித்த சிறுவன் சபேசன் தான்!

## வீ. கே. சௌமியன்

அவருடைய வயதை மனதில் மறக்காது வைத்துக் கொண்டு பார்க்கிற போது... அந்த நடிப்பில் காணப்பட்ட நேர்த்தி – அபாரம்! 'சோப்பு நுரைக்கும்'பாடலுக்கு அவன் ஆடிய ஆட்டமும் கூட்டல், கழித்தல், குறைத்தல், பெருக்கல்கள் என்று கைவிரலை மடித்து மடித்து எண்ணி, எட்டுப்பெர் ஒன்பது நாட்கள் எடுத்துழைத்துக்கட்டிய வீட்டை இரண்டு பேர் கட்டுவதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும் தெரியுமே?' என்று தனது திறமையைக் காட்ட மாயனைக் கேட்டு இடையில் 'அம்மா எப்பிடிப் பேசிறவ?' என்ற கேள்விக்கு அலட்சியமாய் ஆனால் இயல்பாய்ப்பதில் கூறி மீண்டும் முன்னைய உற்சாகத்துடன் 'கட்டிய வீட்டைமறுபடியும் கட்டுதற்கு யாரால் இயலும்? இடிக்கலாம் வேண்டுமென்றால்......!'

என்று குறும்புகாட்டிய முறையும் 'சபாஷ்' பெறத் தகுதியுடையன! அந்த இடங்களில் சபை மெதுவாகச் சிரித்து, ரசித்து அதைஉறுதிசெய்தது.

மாயனாகப் பிரதான பாத்திரமேற்ற கிருபாகரனின் முகத்தில்..... ஆரம்பம் முதல் இறுதிவரை தெரிந்த சோகம் விரக்தி...... அவர் தனது பாத்திரத்தை உணர்ந்து நடித்தமைக்குச் சான்று ஆனால் தன் மகனைக்காண நேர்ந்தபோது அவரிடம் காணப்பட்டிருக்கக் கூடிய அதி உந்நத மகிழ்வு, பரவசம், மயிலியைக்காணப் போகிறோம் என்ற நேரத்தில் இருந்திருக்கக்கூடிய ஆர்வம், கனவு..... இவற்றை எல்லாம் கூட அந்தச் சோகமும் விரக்தியும் மிஞ்சியே நின்றதுபோல்... ஒரு தோற்றம்!

பரதநாட்டிய பாவங்களும் அசைவுகளும் நன்கு கைவரப் பெற்ற மாலினி, மயிலி என்ற தனது பாத்திரத்தில் அந்த அசைவுகள், முத்திரைகள்,

# புதியதொரு வீடு

பாவங்கள் பளிச்சிடாமல் அடக்கமாய் நடித்தது ஒரு திறமை! மிகவும் 'சீரியஸ்' ஆக...... நாடகம் முழுதும் நடமாடிய மயிலி...... சில இடங்களில் கோயில்விபூதியை மாசிலனிடம் தரும்போது...... அல்லது திருமண ஏற்பாடுகள் நடைபெறும்போது, மன்னவனிடம் "நீ நண்டைப்போல் ஊர்ந்து திரியாதொரு புறத்தில் கொஞ்சம் இரு......" என்று கூறும்போது...... அந்த 'சீரியஸ்' தன்மையில் இருந்து கொஞ்சம் விடுபட்டு மெல்லமாய் ஒரு சிரிப்புச் சிரித்திருந்தால் அவரது நடிப்பு இன்னும் ஒரு படி மெருகேறி இருக்குமோ?

மாசிலனாய் வரும் ஜெய்சங்கர் இயல்பாய் இருக்கிறார். பல்வேறு நாளாந்தச் செயற்பாடுகளையும் ஊமமாய் நடிப்பதில் தன்னை யாரும் வெல்ல முடியாது என்று நிறுவி விடுகிறார். அந்த நிரையில் அவர் சாப்பிடுவதும், வாய் கொப்பளிப்பதும், கோப்பை கழுவி ஊற்றுவதும் ரொப்!

தான் சொல்லுகிற கதையை மயிலி கவனமாய்க் கேட்கவில்லை என்று, அவள் கூட்டிக் கொண்டிருந்த விளக்குமாற்றைப் பிடுங்கி எறியும் (ஊமை நடிப்பில்) இடத்திலும் ஜமாய்த்து விடுகிறார்.

'இன்னும் அழாமல்எழும்பு' என்று மயிலியிடம் சொல்வது போன்ற இடங்களில் அவளிடம் கொஞ்சம் பரிவு காட்டியிருக்கலாம். 'பெண்களுக்கெல்லாம் குடுமி பிடரியிலே' எனும்போது முகத்தில் ஒரு ஏளனச்சிரிப்பு அல்லது குறும்புச் சிரிப்பு வந்திருக்கலாம்.

யாழ்ப்பாணத்து நாடக மேடைகளில் ஆண்களும் பெண்களும் கலந்து நடிக்கும் போது ஏற்படும் ஒருவகைத் தயக்க உணர்வில் இருந்து இவர்களும் முற்றாக விடுபடவில்லையோ?

மாயனும் மயிலியும் மாசிலனும் 'சீரியஸ்' ஆன பாத்திரங்கள் தான் உண்மை. ஆனால் அந்தப் பாத்திரங்களின் முகத்தில் பொருத்தமான இடத்தில் தோன்றும் மலர்வு. பெறுமதி மிக்கது என்பதும் உண்மையானதே! அந்த மலர்வுக்குப் பஞ்சம் இருந்தது.

கண்ணாத்தையாக நடித்த ஹேமா நாடகம் முழுவதிலும் பேணிய அசைவு சுப்பர்! அவரது மணிக்கட்டின் அசைவில் தெரிந்த தளர்வு..... அவரை நல்ல நடிகை என இனங்காட்டிற்று!

13ஆம் பக்கம் பார்க்க

# புதியதோர் அநுபவம்

தற்காலத் தமிழ்க்கவிதையின் கொடுமுடியைத்தொட்ட மிகச்சிலருள் ஒருவர் மஹாகவி. கோடை, புதியதொரு வீடு என்ற பா நாடகங்கள் படைத்த புகழாளர் அவர். பேச்சோசைப்பண்புக்கு அவர் கவிதையை உதாரணமாகக் காட்டுவதுண்டு. மொழியின் நெளிவு சுழிவுகளை (Subtleties) நன்கறிந்தவர் மஹாகவி. சொல்லவரும் கருத்தை எந்தச் சிரமமுமின்றிச் செப்பமான வடிவமைப்புக்களிற் கொண்டு வந்து விடுவார் அவர்.

'நல்ல கவிதை அதன் பொருளையும் முந்திக்கொண்டு நம் நெஞ்சைத் தொட்டு விடுகிறது.' (A good poem communicates itself ever before its meaning is understood) என்றார். ஓர் ஆங்கிய விமர்சகர். மஹாகவி அந்த ரகம். இல்லாவிட்டால்,

"சிறுநண்டு மணல் மீது
படமொன்று கீறும்
சிலவேளை அதை வந்து
கடல்கொண்டு போகும்"

என்ற கவிதை எல்லோர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுமா?

ஷேக்ஸ்பியர் அரங்குபற்றி ஆராய்ந்தவர்களுக்குத் தெரியும்; அவர் விஸ்தாரமான காட்சி ஜோடனைகளை நம்பியிருக்கவில்லை என்பது ஷேக்ஸ்பியர் நாடகங்கள் பெரும்பாலும் பகலில் நடந்தன. அவர் பாத்திரங்கள் இரவை-நிலவைப் பற்றியெல்லாம் பேசின. இது எப்படிச் சாத்தியமாயிற்று? ஷேக்ஸ்பியர் என்ற கவிஞனின் ஆற்றல் மிக்க கவிதை அடிகள் செய்த ஜால வித்தையால்!

யாழ், பல்கலைக்கழக நுண்கலைத்துறை வழங்கிய 'புதியதொரு வீடு' ஒரு சாதனை; ஐயமில்லை.

கவிதை கடவுள் போல; தன்னை அணுகும் பக்தனுடைய பக்குவ நிலைக்கேற்றபடி அருள்பாலிக்கும். நாடகம் அப்படியல்ல. அது பலர் ஒருங்குகூடி இருந்து பார்த்துக்கேட்டு இன்புறும் கலை; அநுபவம்! பா வடிவிலுள்ள கதையை கட்புலக் கலையாக்கம் செய்வதே ஒரு சவால். அதை ஏற்று வெற்றி கண்டுள்ளார்கள் மௌனகுருவும் சண்முகலிங்கமும்.

தான் கையாளும் ஊடகத்தைப் பற்றிய பூரணஞானம் (Mastery) ஒரு கலைஞனுக்கு மிகஅவசியம் அந்த நோக்கில் அரங்கின் உச்சப் பயன்பாட்டுக்கு 'புதியதொரு வீடு'உதாரணமாகிறது. மேடை முழுவதும் நன்றாகப் பயன்படுத்தப் பட்டது. எடுத்துரைஞர்களும் மீனவர்களும்– லயத்தோடு– சுறுசுறுப்பாக இயங்கினார்கள். சுவைஞர்களுடைய கண்ணையும் கருத்தையும் கட்டிப் போட்டுவிடுகிறது. நெறியாளர்களின் கலையாக்கம்.

"வெறுவான வெளிமீது
மழைவந்து சீறும்
வெறிகொண்டு புயல் நின்று
கரகங்கள் ஆடும்..."

புயலையும் மழையும் இடியையும் மின்னலையும் நம் கண்முன் கொண்டுவந்து விடுகிறார்கள். இந்தப் பகுதி மிகவும் (Effective) ஆனால் இதுவே சற்று அளவுக்கு அதிகமாகப் போகும்போது?... குறிப்பாக, இறுதிக்கட்டத்தைச் சொல்லலாம் மீண்டும் தொடக்கும் மிடுக்குடன் மாயன் மன்னவனை அழைத்துச் செல்வதோடு திரையை விடலாம். அதற்கப்பால் நீட்டுவது, சுவைஞர்களைக் குறைத்து மதிப்பிடுவதாகும்.

ஆட்ட அம்சத்தை எந்த அளவுக்குச் சேர்க்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ஒரு நெறியாளருக்கு நிச்சயம் உண்டு. ஆனால் கதைத் தொடர்பு, விறுவிறுப்பு என்பவற்றிலும் அவர் கண்ணாய் இருக்கவேண்டும். மயிலிக்கு ஏற்படும் சிக்கல்–நெருக்கடி– முதன்மைப்பட வேண்டும்.

கூத்து மரபுகொண்டு அற்புதமான கோலங்களை மேடையில் போடுகின்றார் மௌனகுரு; பிரமித்து விடுகின்றோம்! ஆனால் பரதநாட்டியக் கோலமோ மிகையாகவும் அந்நியமாகவும் கிடந்து நெருடுகின்றது; இணைய மறுக்கின்றது!

ஆறு பாத்திரங்கள் இயங்கும் சிறியதொரு பாநாடகம் இது. ஆனால் அதன் தொனிப்பொருள் அகிலம் முழுவதுக்கும் பொருந்துவது–universal நண்டு கீறிய படத்தைக் கடல் கொண்டு போகிறது. மயிலி–மாயன் வாழ்க்கையும் புயலால் சின்னாபின்னமாகி விடுகின்றது–இது ஒரு குறியீடு. 'எங்கே என் வீடு?' என்று கேட்டுக்கொண்டு வரும் மாயன் புதியதொரு வீடு அங்கு எழுந்து நிற்பக் காண்கிறான்–அதாவது மயிலி நடத்தும் புதுவாழ்க்கை! முடிவில் அவன், தன் மகனோடு புதியதொரு வாழ்க்கை தொடங்கிறான்; "எங்கள் கரையில் எனக்கோர் துறையிருக்கும்!

மயிலிக்கு ஏற்படும் நெருக்கடி சீதை, கண்ணகி முதலிய காவிய நாயகிகளுக்கு ஏற்படும்நெருக்கடிக்கு எந்தவிதத்திலும் குறைந்ததல்ல" என்பார் பேராசிரியர் சிவத்தம்பி. மனமறிந்து எந்தக் குற்றமும் செய்யாத மயிலி ஓர் அவல நாயகி– (tragic character) அவளே இந்த நாடகத்தின் மையப்புள்ளி, அடக்கமான –உருக்கமான நடிப்பால் உள்ளத்தைத் தொடுகின்றார் மாலினி.

மாயனாக நடித்த கிருபாகரன் முதலில் இருந்து முடிவு வரை அநுதாபத்துக்குரிய

## சோ. பத்மநாதன்

பாத்திரமாகச் சோபிக்கிறார். மாசிலன் வேடம் ஏற்ற ஜெயசங்கரிடம் பண்பட்ட நடிப்பு பளிச்சிடுகின்றது. ஒவ்வோர் அசைவிலும் மெருகு தெரிகிறது.

சிறுவன் சபேசன் பற்றி நிறையச் சொல்லலாம், குறும்பு, விவேகம்,குதூகலம், சுறுசுறுப்பு என்றெல்லாம் அவன் கொட்டும் உணர்ச்சிகள் தாம் எத்தனை! கவிதையை அவன் சொல்லும் அழகு!

கண்ணாத்தையின் நடையும் உடையும் நடிப்பும் பேச்சும் எவரையும் கவரவல்லன. மறைக்காடருக்கு வேஷப் பொருத்தம் பிரமாதம் (சபாஷ்) அரசு இவ்விரு பாத்திகளும் சோபிப்பதற்கு அவை இயற்பண்பு (realistic) வாய்ந்தவையாக இருப்பதும் ஒரு காரணம்.

பாநாடகத்தில், பாத்திரங்கள் பாவைத் தெளிவாகச் சொல்ல வேண்டியது அவசியம். பாடுவோர் உரத்து, தெளிவாகப் பாடவேண்டும். சில கட்டங்களிற் பாட்டிலே தொய்வு தெரிந்தது. தெளிவாக ஓதப்பட்ட பாவுக்கு நல்லதோர் உதாரணம்; எடுத்துரைஞர் குருபரன்பாடிய,

"கடல் மடியில் அவன்
புரண்டான் கையிற்பட்ட
கட்டையுடன் அவன் மிதந்
தான்...:"

என்ற பா!

ஒளி நுட்பத்தை (lighting-effects) பயன் படுத்த இயலாத நிலையில் நெறியாளர்களுக்குக் கைகொடுத்துதவிய

13ஆம் பக்கம் பார்க்க

# களஞ்சியம்

## இரண்டு பரிசுகள்

ஒருநாள் பிரபல கவர்ச்சி நடன நடிகை ஒருவர் உல்லாச ஹோட்டல் ஒன்றுக்குச் சென்றிருந்தார். அங்கு மது போதையிலிருந்த ஒருவர் நடிகையை ஆபாச வார்த்தைகளால் 'கன்ன, பின்ன' வென்று திட்டத் தொடங்கினார். அங்கமெல்லாம்ஆபாசத்தைக்காட்டும் அந்த நடிகையால் கூட அவரின் பேச்சுக்களைத் தாங்க முடியவில்லை. கண் கலங்கின.

இதைக் கண்ணுற்ற இரு சட்டிளங் காளையர் மது போதையிலிருந்தவரை நையப் புடைத்து ஹோட்டலை விட்டு வெளியேற்றினர்.

உடனே நடிகை நன்றியுணர்வோடு காளையரை யணுகி அவர்களில் ஒருவனை 'அந்த வெறியனை எவ்வாறு தாக்கினீர்' எனக்கேட்டார்.

அதற்கு அவன் 'இந்தக் கையால் அவன் முகத்தில் ஒருஅடி கொடுத்தேன்' என்றான்.

உடனே நடிகை அவன் கையைத் தூக்கி அதில் ஒரு முத்தம் கொடுத்தார். பின்னர் அடுத்த இளைஞனைப் பார்த்தார்.

உடனே அவன் 'நான் அந்த வெறியனை என் வாயால்கடித்தேன்'என்றான்

முதலாளி: நான் சொன்ன படியே அவரிடம் அடித்துப் பேசினயா?

தொழிலாளி: ஆமாங்க ஐயா.

முதலாளி: அதற்கு அவர் என்ன சொன்னார்.

தொழிலாளி: எதுவும் சொல்லலீங்க, அவரும் பதிலுக்கு என்னைத் திருப்பி அடித்து விட்டாருங்க.

(வீடு வாடகைக்குக் கேட்டு வந்தவர்)

வந்தவர்: ஐயா இங்கே 'தங்க' வீடு இருக்கிறதா?

வீட்டுக்காரர்: இல்லீங்க செங்கல் வீடுதான் இருக்கு.

தாய்: குழந்தையை போட்டோ எடுக்க போனீர்களே நன்றாக விழுந்தானா

தந்தை: ஓம், மேசையிலேயிருந்து நன்றாக விழுந்தான் தலையிலே நல்ல அடி.

தாய் ஏண்டா மாமாவை தொட்டிலை ஆட்ட வேண்டாம் என்கிறாய்?

மகன்: மாமாவுக்கு தொட்டிலை ஆட்டி விட்டு குழந்தையைக் கிள்ளுற பழக்கம் உண்டு என்று பாட்டி சொன்னா அதற்குத் தான்.

தொகுப்பு:-

**வண்ணை சி. சேனாதிபதி**

## பொன் மொழிகள்

● நட்புக் கொள்ளும் விஷயத்தில் அவசரப்படாதீர், நிதானமாக இருங்கள். நட்புக் கொண்டபின் நிலைத்து நிற்க வழி தேடுங்கள்.

—சோக்ரடீஸ்

● சின்னஞ் சிறு செலவானாலும் கவனமாக இருங்கள். அடித்தளத்தில் உள்ள சிறிய ஓட்டை கப்பலையே கவிழ்த்துவிடும்.

—பிராங்ளின்

● இலகுவாகக் கெடக்கூடியது, அதிககாலத்திற்கு வைத்துக் கொள்ள முடியாததுமான கோடைகாலத்துப் பழங்கள் போன்றது உடல் அழகு.

—பேகன்

தொகுப்பு: **தமிழாளன்**

## பிரெஞ்சு தினசரியின் ஆசிரியர்ஹியூபேர் பேவ்-மெரி

பிரான்ஸின் மாலை வெளியீடு, 'ல மொன்ட்' பத்திரிகையின் தாபக ஆசிரியர், ஹியூபேர்பேவ்-மெரி (87 வயது), 1989.ஜூலை ஆரும் திகதி ஃபொன்ரென்புளோ வைத்திய சாலையில் காலமானார். இவர் தமது இல்லத்தில் விழுந்ததை அடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பெற்று, பத்துநாட்களின் பின் மரணமானார்

பேவ்-மெரியின் தலைமையின்கீழ், தாராள மனப்பான்மை கொண்ட பத்திரிகையாளர் அறிவாளிகள் ஆகிய சிலர் பாரிஸ் தலைநகரில் 'ல மொன்ட்' (உலகம்) நாளிதழை 1944இல் தாபித்தனர். சரியாக இருபத்தை ஆண்டுகளாக அதன் பிரதம ஆசிரியராக சிறப்புச் சேவையாற்றிய பின்பு, அவர் இளைப்பாறினார். 'சிறியுஸ்' எனும்புனைபெயரில் கனம் தரமான கட்டுரைகளைக் கிரமமாக எழுதிக் கற்றோர், மற்றோரது நன் மதிப்பை ஈட்டிக் கொண்டதோடு, அவர் தமது நாளிதழுக்கும் தனித்துவமான ஓர் ஆளுமை உருவாகவும் காரணர் ஆனார். இன்று பிறநாட்டுச் செய்தி வெளியீட்டில்'ல மொன்ட்' தலைசிறந்து விளங்க அவர் ஆற்றிய பங்கு மகத்தானது.

'ல மொன்ட்'டில் இன்று கூடப்புதினப் போட்டோப் படம் வெளிவருவது கிடையாது. இது அவர் அனுசரித்த கொள்கையின் ஓர் அம்சம். அவர் அறிமுகப் படுத்திய இன்னுமொரு வழக்கம் இன்றும் நிலவக் காணலாம். தினமும் காலையில் கூடும் ஆசிரிய பீட கலந்துரையாடல் மாநாட்டில் பெரும்பாலும் அனைவரும் நின்றுகொண்டே பங்குபற்றுவதே அவ்வழமை.

'ஒரு பத்திரிகையின் ஆசிரியர் ஓரளவு பள்ளியாசியர் போன்றவரே. அதிகாரம் செலுத்துவது அவரது உரிமை என்பதில் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு...... பத்திரிகையாசிரியர் என்பவர், பொதுசன, அல்லது அரசாங்க சேவையின் சுதந்திரமான ஒரு முகமையாளரே.' இவை ஹியூபேர் பேவ்-மெரியின் அபிப்பிராயங்களிற் சில.

1985இல் நிதிப்பிரச்சனைகள் 'ல மொன்ட்'டை நிலை குலையவைத்தன. அவற்றை வெற்றிகொள்ள பேவ்-மெரியின் ஆழ்ந்தபத்திரிகா ஞானம், மன உறுதி என்பன உறுதுணையாக நின்றன. இந்நாளிதழின் இன்றைய பிரதம ஆசிரியர் ஒந்ரே ஃபொன்ரேன் முற்பக்கக் கட்டுரையாக அவருக்குப் பாராட்டு வழங்கியுள்ளார்.

இன்று 'ல மொன்ட்'டின் 500,000 பிரதிகள் நாள் தோறும்மாலையில்பிரான்ஸ் நாட்டில் விற்பனையாகின்றன.

**ராய்ட்டர்**

## எண்பது வயதுக் குழந்தை

அந்தச் சனசமூக நிலையத்தில் ஒவ்வோர் காலையும் அவ்வூர்க் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் வழங்குவது வழக்கம். ஒரு நாட் காலையில் பால் வாங்க குழந்தைகளோடு வந்த தாய்மாரின் கியூ வரிசையில் ஒரு 80 வயதுக் கிழவரும் சேர்ந்துகொண்டார். பால் வழங்கும் பெண்மணி அவரை நோக்கி ''இங்கே குழந்தைகளுக்கு மட்டும் பால் கொடுக்கப்படும்'' என்றார். உடனே கிழவர் ''நானும் என் அப்பா அம்மாவின் குழந்தை தானே'' என்றார். பெண்மணி சற்றும் தயங்காது ''அப்படியானால் உங்கள் தாயாரைக் கூட்டி வாருங்கள்'' என்று பதில் கொடுத்தார்.

## சுவையான செய்திகள்

✶ 1,25,000 சொற்களைக் கொண்ட பிரமாண்டமான ஒரு குறுக்கெழுத்துப்போட்டியை, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த றெனே கார்ப்பொந்தியே அமைத்துள்ளார். அதன்பரப்பளவு, 270 சதுர மீட்டர்கள் ஆகும்.

✶ குத்து விடவும் குத்துக்களினின்றும், தப்பித்துக் கொள்ளவும் (றூபோ) இயந்திர மனிதன் ஒருவரை ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு விஞ்ஞானிகள் உருவமைத்துள்ளார்கள்.

★ மத்திய அமெரிக்க நிக்கரகுவா எனும் சின்னஞ் சிறிய நாட்டில், மொமோதொம்போ எரிமலை உள்ளது. அது கக்கும்உருகியகல், மண் குழம்பினின்றும் சக்தி ஈட்டப்படுகிறது. இச்சக்திப் பிறப்பாக்கத்திற்கு என, அங்கு ஒரு மின்சக்தி நிலையம் நிறுவப்பட்டு உள்ளது

✶ ஒரு சைபீரிய மலை ஆடு சராசரி ஒன்றரை மீட்டர் நீளமான உடலை உடையது அதன் கொம்புகளோ அதைவிட இருபது சென்ரி மீட்டர் மட்டுமே நீளம் குறைவானவை.

★ உலகியே உயரம் மிக்க சூரியகாந்திச் செடியின் உயரம் ஏழுமீட்டர் பதினெட்டு சென்ரி மீட்டர் ஆகும். அதனை வளர்த்தவர் ஆங்கிலேய கமக்காரர் ஃபிறுங்க் கெலன்ட் ஆவர்.

## நிறைவான உணவு

கி. மு. 4,000 ஆண்டு தொட்டே பசுப் பாலை உணவாகக் கொள்ள மனிதன் பழகி இருந்தான். அக்காலத்திற்தான் இந்த உயிர் தரும் பாலைப் பெற்றுக்கொள்ளப் பசுமாடு மனித சமுதாயத்திற்கு முதலில் பயன்பட்டது, என்கிறது வரலாறு.

குழந்தைகள் பாலை உட்கொண்டு வளர்கின்றனர். மனிதரின் உணவுப் பண்டங்களுள் 'கடந்த ஆறு ஆயிரம் ஆண்டுகளாக நிரந்தரமாக இடம்பெற்று வரும் ஒரேயொரு ஊண், பசுப்பாலே.

பசுப் பால் ஒரு நிறையுணவு ஆகும். எம் உடலுக்கு வேண்டிய அத்தனை அத்தியாவசிய ஊட்டச்சத்துகளும் அதனுள் அடங்கும். வளர்ச்சிக்கும், சதா தேய்ந்துபோகும் உடற் பகுதிகளைப் புதுப்பித்தற்கும் புரதங்கள்; சக்திதர மாஉணவு அல்லது காபோவைதரேற்; கண், தோல், முரசு, இரத்தம் என்பன சிறப்புற அமையவும், பேணப்படவும் விட்டமின் ஏ, பி,பி2,பி12, ஆகியன; எமக்குச் சக்தி ஊட்டவும், கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய எம் உடல் கலங்களின் அமைவில் தகுந்த சமநிலை பேணப்படுதற்கு என, உறையும், உறையாத கொழுப்புச் சத்து முதலானவையும் பாலில் உள்ளன.

பலமுள்ள, சௌக்கியமான பல்லும், எலும்பும் எம் வாழ்நாள் முழுவதும் எமக்கு வாய்த்திருக்க மிக அவசியமான சுண்ணும்புச் சத்தும் பாலில் உண்டு.

## சிரிப்பெண்ணும் தேள்ளமுது



நண்பன்-1: பெயரளவில் என் அப்பாஎன்னிலும்இளையவர்!

நண்பர்-2: எப்படி?

நண்பன்-:1 என் பெயர் பெரியதம்பி, என் அப்பா பெயர் சின்னத்தம்பி!

✶

அன்பர்-: உங்க மகன்மார் எல்லாரும் வெளியாலை என்று சொன்னீர்களே, எந்தெந்த ஊரில்?

நண்பர்-: மூத்தவன் கொழும்பிலை, நடுவிலான் கண்டியிலை, இளையவன் மட்டக்களப்பிலை!



கனகா:- என்னுடைய கணவர் தூங்கும்போது பேசுகிறார்; அதற்கு என்ன செய்யலாம்.

மாலினி:- ஒன்று செய்யுங்கள்; அவர் முழித்துக்கொண்டிருக்கும் போது பேச அனுமதியுங்கள்



ஒருத்தி-: உன் மகனைக் கொஞ்சம் கண்டிச்சுவை அவன் தினமும் சயிக்கிளில் வந்து படலையில் நின்று கொண்டு 'பெல்' அடிக்கிறான்... நாங்கள் கடிதக்காரனுக்கும் என்று ஓடிப்போய் ஏமாந்து போறம்!

மற்றவன்: மன்னிச்சுக் கொள்ளுங்கோ... அவன் போஸ்ட் பீயோன்வேலைக்கு 'பிரக்டீஸ்' எடுக்கிறான்!



'உங்கள் காரினால் எப்போதாவது விபத்து ஏற்பட்டிருக்கிறதா?'

'நான் என் பனைவியை முதல் முதலில் பார்த்தது, ரிப்பேர் செய்வதற்காக என் காரை ஒரு சப்பெனிக்குக் கொண்டு போன போது தான்'

✶



வயோதிபர்-1: உங்கள் வீட்டில் நின்ற நாயைக் காணேமே எங்கே?

வயோதிபர்-2: கொடுத்து விட்டார்கள்...எனக்கு 60 வயது வந்து விட்டதாம்' இனிமேல் வீட்டுக்கு நாய் வேண்டாமாம்!

'குளத்திலிருந்து உடனே வெளியே வந்து விடுங்கள், அதில் குளிக்கக்கூடாது'

'மன்னிக்கவேணும் நான் குளிக்கவில்லை, மூழ்கிக்கொண்டிருக்கிறேன்.'

'மாணிக்ஸ்'

**2**

### திருச்சியில்தமிழ்ப்படுகொலை

டி.கே.சி. சிதம்பரநாத முதலியார் சிரிக்கத் தூண்டி சிந்திக்கத்தக்க கருத்துக்களைத் தெரிவித்தவர். அவர் ''இந்தியர்கள் ஆங்கிலத்தைப் பின்பற்றும் முறையைப் பார்த்தால் இவர்களுக்கு நாம் ஏன் ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுத்தோம் என ஆங்கிலேயர் கவலைப்படுவார்கள் என ஒரு சமயம் குறிப்பிட்டார்.

மைப்பாட்டு அமைப்பு (Uniformity) குறைந்து வருவது தெளிவாகத் தெரிகின்றது.

### மதுரைத் தென்றல் வந்தது காணீர். :

மதுரைத் தென்றல் வந்தது காணீர் எனச் சிலப்பதிகாரம் மதுரையைப் பெருமைப்படுத்துகின்றது. தென் தமிழ் மதுரை என மணிமேகலை மதுரையைச் சிறப்பித்துக் கூறும் தண்டத்தமிழ் வேலித் தமிழ் நாட்டகமெல்லாம் நின்று நிலை இப் புகழ் பூத்தல் அல்லது குன்றுதல் உண்டோ மதுரை'' எனப் பரிபாடல் மதுரையைச் சிறப்பித்துக் கூறும்!! அவ்வாறான மதுரையில் இன்று நல்ல தமிழைக் கேட்க முடிகின்றதா? இல்லவே இல்லை. திருச்சியிலிருந்து

# தமிழ் நாட்டில் தமிழ் சிதைகிறது

திருச்சியில் நடக்கும் தமிழ்ப் படுகொலைகளுக்கோ ஓர் அளவில்லை. திருச்சி பஸ் நிலையத்திலிருந்து 'மெயின் காட் கேற்' என்ற இடம்வரை அடிக்கடி பஸ் வண்டிகள் ஓடுகின்றன. இந்த இடப் பெயர் பிரிட்டிஷ் காலத்தின் அடிமைச் சின்னம். இதிலுள்ள மூன்று சொற்களும் ஆங்கிலச் சொற்கள் அப்படியே அவை தமிழ் உருவப்படுத்தப்பட்டுள்ளன.

திருச்சி பஸ் நிலையத்திலிருந்து அடிக்கடி ஓடும் இன்னொரு பஸ் வண்டி பாய்லர் தொழிச்சாலை (BoilerFactory) இந்த ''(Boiler'' என்ற ஆங்கிலப் பதம் தமிழ்ப்படுத்தப்டாது அப்படியே''பாய்லர்'' எனத் தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளது. பேருந்துகள் பல்லவன், சோழன், கட்டப்பொம்மன் போன்ற பெயர்களில் ஓடினாலும் அங்கு தமிழ்ப்படுகொலையே நடந்து வருகின்றது.

திருச்சியில் எழுதப்பட்டு வரும் தமிழ்ப் பதங்கள் காலப் போக்கில் தமிழைச் சிதைத்து விடும் என்பதில் ஐயம்இல்லை.

திக்கவயல்

**சி. தர்மகுலசிங்கம்**

இங்கு விளம்பரப் பலகைளிலும், தமிழர் வாய்களிலும் வரும் சில தமிழ்ப் பதங்கள் பின்வருமாறு.

**திருச்சித்தமிழ்**

றைஸ்மில்-
கிறைண்டிங் மில்-
டிராவல் ஏஜன்சி-
பியூட்டிப்பார்லர்-
ஆப்டிகியன்-
கட்பீஸ்-
அடிசரக்கு-
மில்க்பார்-
கூல்ஸ்பரட்
பஜார்-
கெடிகார ரிப்போர் சென்டர்-

**தமிழ்ப்பதம்**

1. அரிசிஆலை
2. அரைக்கும் ஆலை
3. பிரயாண முகவர்
4. முடிதிருத்தும் நிலையம்
5. கண்பரிசோதிப்பவர்
6. அறுவைத்துணி
7. மருந்துப் பொருட்கள்
8. பாற்சாலை
9. குளிர்பானசாலை
10. சந்தை
11. மணிக்கூடு திருத்துமிடம்

அவர் சொல்வதுபோல புரிவது-அறிவது இதில் எது சரியென வாதிட நான் வரவில்லை. ஆனால் தமிழின ஒரு

மணப்பாறை வழியாக மதுரையை நான் அடைந்து திருப்பரங்குன்றம், பூம்புகார் மதுரை மீனாட்சியம்மன் ஆலய வீதி. ஆகிய இடங்களில் தமிழ் படும்பாட்டை அவதானித்தேன். அவ்வாறு அவதானித்தபோது தமிழில் தென்றல் வீசவில்லை. சிதைந்த தமிழே என்னை வரவேற்றது மதுரை மீனாட்சியம்மன் கோயில் தெற்கு வீதியில் துணிக்கடைகள் இருக்கின்றன. இவற்றைக் 'கட்பீஸ்' கடைகள் என அழைக்கின்றார்கள். ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்து இந்தியர்கள் துணி நெசவு செய்யும் கலையைப் பார்த்துப் பொறாமை கொண்டு அவர்களின் கைவிரல்களை வெட்டினார்களாம்! நிலைமை இவ்வாறு இருக்க வெட்டப்பட்ட துணிகளை அழைப்பதற்கு 'கட்பீஸ்' என்ற ஆங்கிலப் பதம் எதற்கு?

உள்ளூரில் செய்யப்பட்ட உடுபுடைவைகளைக்கூட்டுறவுக் சங்கக் கடை மூலமாக மதுரையில் விற்பனை செய்கின்றார்கள் இக் கடைக்குப் பெயர் 'கோ- ஆப்டெக்ஸ்' இப்பதத்துக்கும். தமிழுக்கும் எதுவித மான சம்பந்தமும்கிடையாது. கூட்டுறவு நெசவாளர் கடை என இதற்குப் பெயர் வைத்தால் குறைந்தா போய்விடும். இவ்வாறு தமிழ் நாட்டில் தமிழ் சிதைத்து வருவது துலாம்பரமான ஓர் உண்மை. இது உதாரணத்துக்காக எடுத்துச் சொல்லபட்ட சில சொற்கள் நூற்றுக்கு அறுபதுக்கு மேற்பட்ட சொற்கள் ஆங்கிலச் சொற்கள். தமிழ் மொழியில் நிரந்தர பேச்சுத் தமிழில் இடம் பிடித்துக் கொண்டது வேதனைக்குரியது.

### கோடிக்கரையில் கேட்ட தமிழ்

காட்டுத் திணைக்களம், அல்லது காட்டு இலாகா என்பது பொதுவாக இலங்கையில் (Forest Department) என்பதற்குப் பாவிக்கப்படும் தமிழ் மொழிப் பெயர்ப்பு. கோடிக்கரை தமிழ்நாட்டில் உள்ளது அங்கு பற்றைக்காடுகள் உண்டு. மான் அங்கு காடுகளில் பாதுகாக்கப்படுகின்றது. கோடிக்கரையில் உள்ள கோயிலுக்கு அப்பால் காடு ஒன்றில் நுழைந்து அதன் அழகை நான் ரசித்தேன். அப்போது அங்குவந்த படிக்காத வயதான ஒரு கிழவர் (அங்கு வந்து) அதிகதூரம் போகவேண்டாம் 'பாறஸ்ற் டிப்பாட்மெண்ட் ஆபிஸாகள் நிற்பதாகவும் கூறினர். ஒரு ஆங்கிலப் பதம் படியாதவர்கள் மத்தியிலும் எப்படி

(13 ஆம் பக்கம் பார்க்க)

## எழுத்துச் சீர்திருத்தம்

# சொல்லாக்கத்துக்குப் புதிய எழுத்துக்கள் தேவையில்லை

இன்று உலக நாடுகள் பலவற்றிலும் பரந்து ஏறத்தாழ ஆறுகோடி தமிழர்கள் வாழுகிறார்கள். இவர்களுக்கெல்லாம் தமிழ் எழுத்துக்கள் பொதுவானவை. இவர்களில் எத்தனை தமிழர் தட்டச்சுப் பொறியில் எழுதுபவர்? தட்டச்சுப் பொறியெழுத்தில் வெளிவரும் ஆக்கங்கள் எத்தனை? அவற்றின் தகைமையென்ன? அவை எவ்வளவு காலத்துக்குப் பயன்படுவன அல்லது பேணப்படுவன? என்ற வினாக்களுக்கெல்லாம் விடைகாணின், 'மிகக்குறைவு' என்பதே விடையாகும்!

மிகச் சிலராயுள்ள தட்டெழுத்தாளர், தட்டெழுத்தில் எழுதும் எளிய முயற்சியை மேலும் எளிமைப்படுத்த வேண்டுமென்ற நோக்கில், பண்பட்ட-பழைமை வாய்ந்த-அருமந்த மொழியான தமிழ் மொழியின் அடிப்படைப் பண்பையே (இயல்பு) அழித்துவிடக்கூடிய எழுத்துச்சீர்திருத்தங்களை முன் வைக்கும் மாக்களின் அறிவை என்னென்போம்?

''பேதைமை யென்பதொன்றியாதெனின் ஏதங்கொண்டுதியம் போக விடல்'' என்று வள்ளுவனார் கூறிய இயல்பு சாலப் பொருந்துவது இவர்க்கேயாம்!

கையெழுத்து முயற்சியை எளிமைப்படுத்தவே தட்டச்சுப்பொறி உருவாக்கப்பட்டது தட்டச்சுப்பொறியில் எழுதும் முயற்சியை எளிமைப்படுத்த வேண்டினால், மேலும் ஓர் எழுத்துப் பொறியைக் கண்டு பிடித்தல் அன்றோ அறிவியல் (விஞ்ஞானம்) வளர்ச்சியாகும்? இவ்வுண்மையை உணராமல், உருவாக்கப்பட்ட ஒரு பொறிக்கேற்ப, எழுத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கூறுகின்றவர், காலுக்கு அளவாக செருப்பைச் செய்யாமல், செய்த செருப்புக்கு அளவாகக் காலைத்தறிக்க வேண்டும் என்பார் போலும்!

எளிமை கருதி சீராக்கம் வேண்டினால், எல்லா மொழிகளிலும் அத்தகைய சீராக்கங்களுக்கு மேலும் இடமுண்டு இவ்வுண்மையை பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள், தமது கட்டுரையில் பல எடுத்துக் காட்டுக்களோடு விளக்கியுள்ளமையை நாம் கருத்திற்கொள்ளல் வேண்டும். திருத்த இடமுண்டென்பதற்காக, திருத்தம் செய்யக்கூடாது, அத்தகைய திருத்தம் இன்றியமையாத தேவையா? திருத்துவதால் தீமை இல்லையா? என்பவற்றை நன்கு எண்ணியே எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படல் வேண்டும்!

இனி, ஐகார ஔகாரங்களை நீக்கி. அவற்றிற்கு மாற்றாக முறையே அய், அவ் என எழுதலாம் என்னும் கருத்துப்பற்றி ஆராய்வோம்.

ஐகார ஔகாரங்களுக்கு முறையே அய்யும் அவ்வும் போலிகளாகும் என்றே தொல்காப்பியனாரும், பவணந்தி முனிவரும் கூறியுள்ளார்கள். போலி என்பதற்கு உண்மை போன்றிருப்பது என்பது பொருள் போன்றிருப்பதே யொழிய, உண்மையாகாது. உண்மைக்குச் சமனுமாகாது! அஃதாவது; உண்மையோடு ஒரு புடை (ஓரளவு) ஒப்பு தலன்றி முழுமையும் ஒவ்வாது

ஐகார ஔகாரங்களால் பெறப்படும் ஒலிவடிவங்கள், முறையே அய், அவ் என்பவற்றால் பெறப்படும் ஒலி வடிவங்களை விட வேறானவை. இவ்வுண்மை, எஃகு செவியுடையார்க்கு நுண்ணிதின் புலப்படும். ஆங்கிலத்தில், Wa - Va இவற்றிற்கிடையே எத்தகைய வேறுபாடு தோன்றுகிறதோ அஃதே போன்று உச்சரிப்பு (ஒலி) வேறுபாடு ஐ-அய், ஔ - அவ் வுக்களுக்கிடையில் உண்டு. ஐகாரத்தில் இகரக்கூறும் (இகர ஒலியின் ஒரு பகுதி) ஔகாரத்தில் உகரக்கூறும் உண்டு; அய்-அவ்களில் முறையே இகர உகரக் கூறுகள் இல்லை.

ஐகார ஔகார நெட்டுயிர்கள் தனித்தனி இரண்டு மாத்திரையைப்பெறும். ஆனால் அய்-அவ் என்பன தனித்தனி ஒன்றரை மாத்திரையையே பெறும். இவ்வாற்றாலும் ஒலி வேறுபாடுண்டென்பது புலப்படும்.

போலியைஉண்மையென்றோ உண்மைக்குச் சமனென்றோ பயன்படுத்துதல் தவறாகும். போலி அய்; அவ்வுக்கள் யாண்டுப் பயன்படுமோவெனின், அது செய்யுளிடத்து ஒரே வழிப் பயன்படும் என்பதறிக.

ஆகவே, போலி, உண்மையாகாதாதலால், ஐ, ஔ வுக்களுக்கு மாற்றாக எல்லா இடங்களிலும் அய், அவ்வுக்களைப் பயன்படுத்துதல் தவறானதாகும்.

இனி புதிய ஒலிகளைத் தமிழிற் சேர்த்தல் வேண்டுமென்ற கருத்துப்பற்றி ஆராய்வோம்.

இப்பொழுது தமிழில் உள்ள எழுத்துக்களே ஆங்கிலத்துக்குச் சமமாக இல்லை, தொகையில் மிகுதியாக உள்ளன என்று கூச்சல் போடுபவர்கள். மேலும் எழுத்துக்களைத் தமிழில் சேர்க்க வேண்டுமென்று கூறுதல் நகைப்பைத் தருவதாகும்! எதுவும் ஆங்கிலம்-ஆங்கிலேயர் பண்பாடு - ஆங்கிலே

பண்டிதர்

**வீ. பரந்தாமன்**

யர் கலை முதலியவற்றுக்குச் சமமாக இருத்தல் வேண்டுமென்று எண்ணும் நம்மவர் மனப்பான்மையை என்னென்பது?

ஆங்கிலத்தில் நெட்டுயிர்கள் இன்மையாலும் ஒரே உயிர், வெவ்வேறு சொற்களில் வெவ்வேறு முறையாக உச்சரிக்கப்படுவதாலும் ஆங்கிலத்தைக் கற்பதில் உள்ள இடர்ப்பாட்டை இவர்கள் அறியாரோ?

எந்த இரண்டு மொழிகளிலும் ஒன்றில் உள்ள எல்லா ஒலிகளும் மற்றையதில் இருப்பதில்லை; பல ஒலிகள் பொதுவானவையாகவும் (பொதுவெழுத்து) சில ஒலிகள் அவ்வம் மொழிகளுக்குச் சிறப்பானவையாகவும் (சிறப்பெழுத்து) காணப்படும். இச் சிறப்பியல்பே மொழிகளை வேறுபடுத்துகின்ற முதன்மையான காரணமாம். ஒரு மொழியில் இல்லாத எழுத்தொலிகள் அம்மொழியில் சொல்லாக்கத்துக்கு பயன்படா; தேவையுமில்லை.

எடுத்துக்காட்டாக தமிழிலுள்ள ழ் - ற் - ன் என்னும் மெய்கள், ஆரியத்தில் (சமக்கிருதம்) இல்லை. ஸ – ஷ – ஜ-ஹ என்பன தமிழில் இல்லை அஃதே போல் தமிழிலுள்ள நெட்டுயிரும் ங்- ஞ் – ண் – த் ழ் – ள் இவை போன்ற மெய்களும் ஆங்கிலத்தில் இல்லை, b-f-g-h- j – w – x – z இவை போன்ற மெய்கள் தமிழில் இல்லை.

சில வேளைகளில் சொற்களிலே ஓரெழுத்து முன் பின் உள்ள எழுத்துக்களின் சார்பினால், அம்மொழியில் இல்லாத ஒலியாக இசைக்கப்படுதலுண்டு. தேர் - தேங்காய் வெந்நீர் – பந்து இச் சொற்களிலேமுன்னையவற்றிலேஉள்ள தே, ந் என்னும் எழுத்துக்கள் பின்னுள்ளவற்றுள்ளே வேறாக ஒலிப்பதைக் காண்க. சில எழுத்துக்கள் தம்முட்கூடி (கூட்டெழுத்து) அம்மொழியில் இல்லாத ஒலிகளைத் தருதலுமுண்டு. ஆங்கிலத்தில் gn, th ஆகிய கூட்டெழுத்துக்கள் முறையே ஞ். த். ஆகிய ஒலிகளாக உச்சரிக்கப்படுகின்றன. இம் முறைகளாலும் எழுப்பப்படாத-இல்லாத ஒலிகள், அம்மொழிக்குத் தேவையில்லை. ஒருமொழி தன்னிடத்தில் சில ஒலிகளை வேண்டாத தன்மை, அம்மொழியின் சிறப்பியல்புக்கு (தனித்தன்மை) ஒரு காரணமாகும்.

ஒரு பயன் கருதி பிறமொழிச் சொற்களைத் தமிழில் ஆள வேண்டினால், அச்சொல்லிலுள்ள-தமிழில் இல்லாத ஒலிகளை கூட்டெழுத்துக்களால் தோற்றுவித்து ஆளலாம். f=ஃப், ஹ=ஃக இவ்வாறாக ஆளலாம், அன்றேல், சான்றோர் வடசொல்லாக்கம் செய்ய உரைத்த கட்டளையைக் கொண்டு, தமிழ் ஒலி மரபைப் பேணி திசைச் சொல் (பிறமொழியிலிருந்து தமிழில் வழங்கும் சொல்) ஆக்கம் செய்தும் ஆளலாம். oxygen=ஒட்சிசன் என எழுதப்படுதல் காண்க. இம் முறையிலேயே ஆங்கிலேயர் தம் மொழி ஒலி மரபுக்கேற்ப 'யாழ்ப்பாணம்' என்ற சொல்லை 'யாவ்னா' (Jaffna) எனத் திரித்து வழங்குதலையும் ஈண்டு நோக்குக.

ஆகவே, தமிழில் புதிதாக ஒலிகளை உருவாக்குதல் என்ற கருத்தும் தேவையற்ற-போலியான கருத்தாகும் என்பதை உணர்ந்து எழுத்துச் சீராக்கம் என்ற பேச்சையே கைவிடுக.. தமிழில் உள்ள எழுத்துக்களினால்பேணப்பட்டு வரும் தமிழருடைய பழைய வரலாறு பண்பாடுகளின் கூறுகளை சிதையாது காப்போமாக. ●

# கதிர்காமக் கடவுள(ர)ர்?

கடவுளர்களுள் கதிர்காமக் கந்தன் ஆற்றல் படைத்தவராகவும், பக்தர்களால் ஆர்வத்தோடு வழிபடப் பெறுபவராகவும் விளங்குவது எப்படி?

உண்மையில் கதிர்காமத்தில் எழுந்தருளியிருப்பவர் யார்? இந்துக்கள் நம்புவது போல, சிவனுக்கும் பார்வதிக்கும் அவர் பிள்ளையா? அல்லது கதிர்காமத்தைத் தலைநகராகக் கொண்டு உறுகுணையை ஆண்டமகா சேனனா?

டையொனிஸியஸ் தசில்வா என்ற பத்திரிகையாளர் இந்தக்கேள்வியை எழுப்பியுள்ளார்

மகாசேனன் உறுகுணையை ஆண்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டென்றும்—

அவன் ஆட்சிக்காலத்தில் புத்தபெருமான் கதிர்காமத்துக்கு விஜயம்செய்து தம்ம போதனை செய்தார் என்றும்—

மகாசேனன் இறந்த பின் கடவுளாகப் போற்றப்பட்டான் என்றும்—

இந்த 'ஆராய்ச்சி' நீளுகிறது

சோ. ப

# காதல் இலக்கியங்களில் தமிழர் நாகரிகம்

இளங்கன்

தமிழ்க் காப்பியங்களிலும், தனிப்பாடல்களிலும் சமுதாய ஒழுக்கம் பற்றியும், அது பேணப்பட வேண்டிய அவசியம் பற்றியும் அதிகம் வலியுறுத்தப் பட்டிருக்கின்றது. நேரடியாகச் சொல்லியும், மறைமுகமாகச் சொல்லியும் மனிதனின் சிந்தனைக்குச் செழுமையூட்டக் கூடிய கருத்துக்களை வழங்கிய பெருமை தமிழ்க் கவிதைகளுக்குண்டு.

தமிழனின் பண்பாட்டை—நாகரிகத்தை தமிழ்க் காப்பியங்களிலே அதிகமாகக் காணலாம். காதற் காட்சிகள் மூலம் இரு புலவர்கள் தமிழர்களின் நாகரிகத்தை எப்படிக் காட்டுகிறார்கள் என்பதை இங்கு நோக்குவோம்.

## நளவெண்பாவில்

நளவெண்பா என்று ஒரு சிறு காப்பியத்தைப் புகழேந்திப் புலவர் மிக அற்புதமாகப் பாடியிருக்கின்றார். 'வெண்பாவிற் புகழேந்தி' எனப் போற்றிப் புகழப்பட்டவர் புகழேந்திப் புலவர். தமிழிலே மிக மிகச் சிறப்பான வெண்பாக்களைப் பாடியவர் இவரே எனத் துணிந்து கூறலாம்.

மகாபாரதத்தில் வரும் ஒரு உபகதையான நளன் கதையை இவர் வெண்பாக்களால் அருமையாகப் பாடியிருக்கின்றார். இது நளவெண்பா எனப்பட்டது

நளவெண்பாவிலே ஒரு காட்சி. நளன் தமயந்தியைத் திருமணஞ் செய்த பின் தனது நாட்டுக்கு அழைத்து வரும் போது, தனது நாட்டுப் பூஞ்சோலை ஒன்றைக் காட்டுகிறான். பலப்பல வர்ணங்களில் அழகழகான பலப்பல வகைப் பூக்கள் மலர்ந்திருக்கின்றன

சோலையிலே ஒரு காட்சியைக் கண்டு அக்காட்சியைத் தமயந்திக்குக் காட்டுகிறான் நளன். காதலித்துப் பின் சுயம்வரத்தில் மாலையிட்டு மணந்து கொண்டு வந்த தன் மனைவிக்கு நளன் ஒரு காதற் காட்சியையே காட்டுகிறான். அக்காட்சி காதற்காட்சி மட்டுமல்ல. அந்நாட்டின் உயர்ந்த நாகரிகத்தின் மாட்சியும் கூட.

பெண்ணொருத்தி ஒரு மலரைக் கொய்வதற்காகச் சோலையினுள் செல்கின்றாள். எக் குறையும் இல்லாமல் எல்லாம் நிறைந்த வளம் பொருந்திய நாட்டின் இளம் பெண் அவள். அதனால் பூரண சுதந்திரத்தோடு ஆடி, ஆடி தனது மகிழ்ச்சியையும், சுதந்திரத்தையும் நடையில் காட்டி, காட்டுமயில் போல அச்சமின்றி நடந்து செல்கிறாள். திடீரென அவளது நடை மாறுகிறது. அவளது கண்கள் எதையோ கண்டுவிட்டதாலே தான் அந்தத் திடீர்மாற்றம் அவளது கண்கள் அப்படி எதைத்தான் கண்டு விட்டன?

அவள் கொய்யச் சென்ற மலரிலே இரண்டு வண்டுகள் இருக்கின்றன. அவை காதற் களி வண்டுகள், கருவண்டுகள் வண்டுகள் இரண்டும் சோடி சேர்ந்து, சொர்க்க போகம் அனுபவிக்கும் காதல் லீலையில் ஈடுபட்டு காதல் மயக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றன. அக்காட்சியைக் கண்டாள் காரிகை. உடனடியாக அவளது உள்ளம் நெகிழ்ந்துவிட்டது.

இன்பம் அனுபவிக்கும் இரு வண்டுகளின் இன்பத்திற்கு இடையூறு செய்ய அவ்விளம் பெண்ணின் உள்ளம் ஒருப்படவில்லை. திடீரெனத் திரும்பினால் அந்த ஒலியில் வண்டுகளின் காதல் மயக்கம் கலைந்து விடும் என்று அஞ்சினாள். அதனால் காலிலே இருக்கும் சிலம்புகளின் சத்தம் சிறிதும் வெளியிலே கேட்காதவாறு காலை மெதுவாகத் தூக்கித் தூக்கி வைத்து, வைத்து, மெல்ல, மெல்ல, நடந்து சென்று, அந்த மலரைக் கொய்யாது அருகே இருந்த ஒரு தளிரைக் கொய்து கொண்டு திரும்புகிறாள். இக் காட்சியைத்தான் நளன் தமயந்திக்குக் காட்டுகிறான்,

புல்லும் வரிவண்டைக் கண்டு<br>
புனமயில்போல்<br>
செல்லும் மடந்தை<br>
சிலம்பவித்து-மெல்லப்போய்<br>
அம்மலரைக் கொய்யா<br>
தருந்தளிரைக்<br>
கொய்வானைச்<br>
செம்மலரின் தேனே தெளி

என்று இந்தக் காட்சியைக் கவிதையிலே காட்டுகிறான் புகழேந்தி. இங்கே தெளி என்று கூறுவது வெறுமனே பார் என்று சொல்லாமல், அக்காட்சியின் தாற்பரியத்தை —அப்பெண்ணின் மனப்பாங்கை – நாகரிகத்தைத் தெளிந்து கொள் என்று கூறுவதாக அமைகிறது.

வண்டுகளின் சந்தோஷத்தில் அந்தப்பெண் எவ்வளவு அக்கறை காட்டுகிறாள் வண்டுகளின் சுதந்திரத்தில் தலையிட அவளுக்கு மனம் ஒப்பவில்லை. அதனால் அவள் தனதுமகிழ்ச்சியையும், தனது நோக்கத்தையும், துறந்துவிடுகிறாள். அதாவது சூழலின் தன்மைக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் தன்மை, மற்றைய உயிரினங்களின் சுகத்துக்காக தனது சுகத்தைத் துறக்கத் தயாராக இருக்கும் தியாக மனப்பான்மை போன்றவற்றை இக்காட்சி மூலம் காட்டுகிறார் புகழேந்தி

நளனது நாடான நிடத நாட்டின் ஒழுக்கத்தையும், காதல் மகத்துவத்தையும், நாகரிகத்தையும், தியாகச் சிந்தனையையும் ஒருங்கே காட்டி விடுகிறார் புகழேந்தி. தமயந்திக்கு இக் காட்சி மூலம் தனது நாட்டின் நாகரிகத்தைச் சொல்லாமற் சொல்லி விடுகிறான் நளன்.

## புறநானூற்றில்

இன்னோர் அற்புதமான காதற்காட்சி, புறநானூற்றில் வருகிறது: ஒரு அரசனின் தானைத் தலைவன் போரிலே வெற்றிபெற்று மிகுந்த செல்வத்தை அரசனிடம் பெற்றிருக்கிறான். அவன் ஒரு கொடையாளி. அதனால் அவனிடம் பரிசில் பெறப் பாணனொருவன் செல்கிறான். அப்பாணனை ஆற்றுப் படுத்துகிறார் வீரை வெளியனார் என்ற புலவர்.

அப்பாணனை அந் நாட்டில் உள்ள வேடுவர் வசிக்கும் காட்டுப்பகுதியில் சென்று தங்கி விருந்துண்டு செல்லுமாறு கூறி, அந்த வேடுவக் குடும்பத்தில் நடைபெறும் நிகழ்ச்சியொன்றினைச் சொல்லோவியமாகத் தீட்டுகிறார் புலவர்.

முல்லைக்கொடியும், முசுண்டைக்கொடியும் வீட்டு முற்றத்திலேயுள்ள பலாமரத்திலே படர்ந்து பந்தர் வேய்ந்தது போல நிழல் செய்து கொண்டிருக்கின்றது. மான்களைப் பிடிப்பதற்காக வேடுவன் வளர்க்கும் பெண்மான் முற்றத்தில் நிற்கின்றது. அந்தப் பார்வைப் பிணைமானுடன் காட்டிலிருந்து வந்த கலைமான் காதல் செய்து தழுவுகின்றது.

ஆண்மானும், பெண்மானும் அன்பிலே ஒன்றி இன்பக் காதல் லீலையில் ஈடுபட்டு மகிழ்ந்து கொண்டிருக்கின்றன. வீட்டு வாசலிலே வந்து பார்த்தாள் வேடுவனின் மனைவி அவளுக்கு மகிழ்ச்சி ஒருபுறம். கவலை மறுபுறம் என்ன செய்வதென்றே தெரியவில்லை. கணவன் முற்றத்திலே நன்றாக நித்திரை செய்து

13ஆம் பக்கம் பார்க்க

---

இரண்டுவாரக் கட்டுரை

இரண்டாம் பகுதி



# பூமி உயிர் வாழிடமாய் நிலைக்குமா ?

கே. எஸ். குகதாசன் M Sc.

புரிந்துணர்வு அங்கிகளுக்குண்டா? சிந்தித்துச் செயலாற்றுந்திறன் இனிய அங்கிகளுக்குண்டா? என்று விஞ்ஞானிகள் ஐயப்படுகின்றார்கள் சிந்தித்துச் செயலாற்றும் திறன் மனிதனுக்கு உண்டென்றால் ஏனைய அங்கிகளுக்கு ஏன் இருக்கக் கூடாது? சாதாரணத் தாவரங்கள் சம்பந்தமான முழுமையான அறிவு மனிதனுக்கு உண்டா? சாதாரணத் தாவரங்களும், ஒரு மனிதன் அவற்றை அணுகும் போது, என்ன நோக்கத்துடன் வருகின்றான் என்பதை உய்த்தறிந்து உணர்ச்சிகளை வெளிக்காட்டும் என்று இன்றைய அறிஞர்கள் கூறுகின்றார்கள். ஆயினும் அதை அறிந்து கொள்ளும் திறன் சாதாரண மனிதனுக்கு இல்லை. நீரில்லாத போது தாவரங்கள் 'கூக்குரலிடும்' அதை உணர்ந்து கொள்ளும் பகுத்தறிவு மனிதனுக்கு இல்லை. தாவரங்கள் தம்மை வளப்பவர்களையும் அழிப்பவர்களையும் வேறு பிரித்து அறியும் தகைமையுடையவை. இன்னும் எத்தனை புதுமைகள், இங்ஙனம் நோக்கும் பொழுது சிந்தித்துச் செயலாற்றும் திறன் ஏனைய அங்கிகளுக்கும் ஏன் இருக்கக் கூடாது? வேண்டுமென்றால் 'சிந்தனை' என்ற பதத்திற்கு புதிய வரைவிலக்கணம் கற்பித்துக் கொள்ளலாம்

அர்த்தமற்ற வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து, ஒரு முன்னேக்குடைய சிறந்த, அர்த்தமுள்ள சூழற்றொகுதி உருவாக முடியுமென்பதை லவ்லொக் ஆய்வுகள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். சூழலியலாளர்கள், பல சந்ததிகளாகச் செய்ய வேண்டிய ஆய்வுகளை, கணனிக்குரிய மாதிரிகளைப் (Computer Model) பயன்படுத்தி, விரைவாகச் செய்து முடிப்பார்கள். உதாரணமாக, ஒரு கற்பனைக்குரிய சூழலில் உள்ள நரிகளினதும் முயல்களினதும் தொகைகளில், பல ஆயிரம் சந்ததிகளின் பின் என்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதை, கணனிகளுக்கு ஏற்ற தரவுகளைக் கொடுத்து, மிகக் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்வார்கள். இதே முறையைத்தான் லவ்லொக்கும் பயன்படுத்தினார் அவர் ஆய்வுக்கு உட்படுத்தியது கருமையான டெயிசிகளையும், வெண்மையான டெயிசிகளையும் (கற்பனை எண்ணிக்கைகள்) பல் ஊழி காலமாக சூரியனின் உக்கிரம் அதிகரிக்கும் போது வெண்ணிற டெயிசிகளின் தொகை அதிகமாகவும்; சூரியனின் உக்கிரம் குறைவடையும் போது கருமையான டெயிசிகளின் தொகை அதிகமாக இருப்பதையும் கணனி மூலம் கண்டறிந்தார். இதற்குப் பழைய விளக்கம், சூரியனின் உக்கிரம் அதிகரிக்கும் போது வெப்பக் கதிர்களைப் பிரதிபலிக்கச் செய்யும் வெண்மையான டெயிசிகள் வாழ்க்கைப் போரில் வெற்றி காணும், வெப்பக் கதிர்களை உறிஞ்சும் இயல்புடையகருமையான டெயிசிகள் வாழ்க்கைப் போரில் தோல்வியடையும். இதே அடிப்படையில் கதிர்வீச்சு குறையும் போது கருமையான டெயிசிகள் வெற்றிகாணும். ஆனால், லவ்லொக்கின் விளக்கமோ. டெயிசிகள் வெறுமனே சூழலுக்கு இசைவாக்கம் பெறுவதில்லை, அவை சூழலைக் கட்டுப்படுத்தும். வெப்பம் குறையும் போது கருமையான டெயிசிகள் கூடுதலாக முளைத்து வெப்பத்தை உறிஞ்சி சூழலின் வெப்பத்தை அதிகரிக்கச் செய்யும்; அதே போல, வெப்பம் அதிகரிக்கும் போது வெண்ணிற் டெயிசிகள் அதிகமாகத் தோன்றி, வெப்பத்தைப் பிரதி பலித்து, சூழலின் வெப்பத்தைக் குறைக்க உதவும். சூழல் இவ்வளவு எளிமையானதல்ல, பல தரப்பட்ட காரணிகளையும், பல தரப்பட்ட அங்கிகளையும் கொண்டது. ஆயினும் சிக்கற்றன்மை எவ்வளவிற்கு அதிகமாகவுள்ளதோ அவ்வளவிற்கு சூழற்றொகுதி நிலையானதாயிருக்கும் என்பது லவ்லொக்கின் கருத்து. பொதுவாக எளிய சூழற்றொகுதிகளைக் காட்டிலும் சிக்கலான பல இனங்களைக் கொண்ட, சூழற்றொகுதிகள் நெடுங்காலம் நிலைக்கும், அதற்கு இயற்கையான அழிவு இல்லையென்றே சொல்லலாம்.

காலநிலையுடன் தொடர்பாக மனிதனின் நடவடிக்கைகளையும் அவர் குறிப்பிடாமலில்லை. மழையை வரச்செய்வது மழையைத் தடுப்பது, முகிற் கூட்டங்களைக் கலைப்பது போன்ற நடவடிக்கைகள் வேறுவிடயம். கடந்த மூன்று பில்லியன் வருடங்களாக சூரியனின் வெப்பம் 25% அதிகரித்துள்ளது. ஆயினும், அதிர்ஷ்டவசமாக வெப்பத்தை உறிஞ்சும் காபனீர்ரொட்சைட்டு வளியில் குறைவாக இருப்பதனாலும்; ஒசோன் படை, முகிற் கூட்டங்கள் போன்றவற்றின் உதவியினாலும் உலக வெப்பநிலையில் பெருமளவில் மாற்றம் ஏற்படவில்லை. ஆயினும் மனிதன் செய்வது என்ன? அவனின் எரிபொருள் பயன்பாடு காரணமாக சூழலில் காபனீரொட்சைட்டின் செறிவு கூடுகின்றது. காடுகளை அழிப்பதனால் காபனீரொட்சைட்டு அகற்றப்படும் செயல் குறைகின்றது. அதனால் உலகளாவிய ரீதியில் வெப்ப அதிகரிப்பு ஏற்படுகின்றது. இது தொடர்ந்து நிகழுமேயானால் முதலில் அழியப் போவது மனிதன் மற்றும் பலவுயிரினங்களும் அழியும். 99% உயிரினங்கள் அழிந்துபடலாம். ஆயினும் சில இனங்கள் அழியாது நிலைக்கும். பூமிக்கு அழிவு ஏற்படாது. தொடர்ந்து புதிய சூழற்றொகுதிகள் புதிய இனங்கள்தோன்றும் (அர்த்தமுள்ள சூழற்றொகுதி தோன்றவேண்டுமானால் மீண்டும் மனிதன் தோன்றாமலிருப்பது நல்லது)

மனிதன் மாறுவானோ, அல்லது சூழலியலாளர்களின் அச்சம் நிலைக்குமா? ஆண்டாண்டு தோறும் சைபீரியாவிலிருந்து. தொண்டைமானாறுக்கு சில இனப்பறவைகள் பல எண்ணிக்கையில் வந்து திரும்புகின்றன: இதே போல உலகின் பல பகுதிகளிலும் நடைபெறுகின்றது 'பாஸ்போட் இல்லை', 'விசா' இல்லை 'பிச்சல் பிடுங்கல்' இல்லை, இனவேற்றுமையில்லை, 'வந்துகளும்' 'இருப்பதுகளும்' ஒற்றுமையாக, சமுகமாக, காலத்தைக் கழிக்கின்றன மேற்படி தடைகளெல்லாம் ஆறறிவு படைத்த மனிதனின் கண்டு பிடிப்புக்களாகும். உலகம் முழுவதும் பரந்து வாழும் மனிதன் ஒரு இனத்துக்குரியவன், ஒரு தாய் மக்கள், என்பதை மனிதன் இன்னமும் உணர்ந்து கொள்ளவில்லை எங்ஙனம் சூழலை உணர்ந்து அதைப் பாதுகாக்கப் போகின்றான். மனிதனில் உள்ள பெரிய குறைபாடு, தான் சூழலின் ஒரு அங்கம் என்பதனைப் புரிந்து கொள்ளாது, சூழல் தனது சொந்தம் என்று கர்வங் கொண்டு அலைவதாகும்.

# சிங்கத்தின் அச்சம்

ஒரு காட்டிலே சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அது ஒருநாள் ஒருவழியால் சென்று கொண்டிருந்த போது அங்கே ஒரு ஒணானைக் கண்டது ஒணானைத் தன்னருகே அழைத்து ஏய் அற்ப பிராணியே என்னுடன் சண்டைக்கு வருகிறாயா? எனக் கேட்டது. அதற்கு ஒணான் "ஐயா மகாராஜாவே நீங்கள் எவ்வளவு பெரியவர் நானோ ஒரு சிறு பிராணி உங்களுடன் எவ்வாறு சண்டையிட முடியும்" எனச்சொன்னது. அதற்குச் சிங்கம் நாளை இதே இடத்தில் நீ சண்டைக்கு தயாராக நிற்க வேண்டும் இல்லாது விட்டால் உன்னை எங்கு தேடியும் கொன்று விடுவேன் எனக் கூறிவிட்டுச் சென்றது.

ஒணான் சிறிது சிந்தித்து விட்டு அருகேயுள்ள வற்றிய குளம் ஒன்றுக்குச் சென்றது அங்கு சேற்று மண்ணை தன் உடல் முழுவதும் பூசிக்கொண்டது, மறுநாள் அதே இடத்துக்கு சிங்கம் வந்தது, ஒணானும் வந்தது, இரண்டுக்கும் சண்டை ஆரம்பமாகியது. சிங்கம் ஒணானைத் தன் வாயினால் கடித்தது, ஒணானின் மேல் பூசப்பட்ட மண்தான் சிங்கத்தின் வாயினுள் சென்றது ஒணான் தன் கால் நகங்களால் சிங்கத்தின் முகம் முழுவதும் கீறியது, இதனால் அதன் முகத்திலிருந்து இரத்தம் சிந்தியது. அது மிகவும் களைப்படைந்து விட்டது. இதனை அவ்வழியே வந்த ஒரு மனிதன் கண்டுவிட்டான். அவனுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது. அவன் பலமாக சிரித்தான். அப்பொழுது சிங்கம் ஏய் மானிடனே இங்கு நடந்தவற்றை ஒருவருக்கும் கூறாதே சொன்னால் உன்னைக் கொன்று விடுவேன் எனக்கூறி விட்டு அது சென்று விட்டது. அந்த மனிதனும் தனது வீட்டுக்கு சென்றான்.

இரவாகியது சிங்கம் காட்டிலிருந்து கிராமப் பக்கம் வந்தது. அப்போது பெரும் மழை பெய்தது அது மழைக்கு ஒரு வீட்டின் தாவாரத்தில் ஒதுங்கியது. உள்ளே அம் மனிதன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கு அன்று காட்டில் நடந்த சம்பவத்தை நினைக்கச் சிரிப்பு வந்தது. சிரித்துச் சிரித்துச் சாப்பிட்டான். அவனது மனைவி சிரிப்புக்கான காரணத்தைக் கேட்டாள்– அதற்கு அவன் அன்று பகல் தான் காட்டுக்கு சென்றதாகவும் அங்கே ஒரு சிங்கமும், ஒணானும் சண்டையிட்டதாகவும் சிங்கம் அந்தச் சிறு ஒணானிடம் தோல்வியடைந்ததாகவும் கூறினான். இதனைக் கேட்டதும் அவன் மனைவியும் சிரித்தாள். அதனைச் சிங்கம் கேட்டுக்கொண்டு கிடந்தது. அவன் ஒரு கட்டிலில் படுத்துத் தூங்கினான். அவனது மனைவியும் தூங்கி விட்டாள். அப்போது சிங்கம் உள்ளே சென்று அவனைக் கட்டிலுடன் தூக்கிச் சென்றது. நடுக் காட்டுக்கு கொண்டு சென்றது ஒரு மரத்தின் கீழ் கட்டிலுடன் வைத்தது.

அவன் நித்திரை விட்டு எழவில்லை. சிங்கம் கட்டிலுக்கு அருகே கிடந்து நித்திரை செய்தது. அவன் நடு இரவு விழித்து பார்த்த போது தான் கட்டிலுடன் காட்டில் கிடப்பதையும் அருகே சிங்கம் கிடப்பதையும் கண்டான். உடனே பக்கத்தில் நின்ற மரத்தில் ஏறிக் கொண்டான் தன் இருகைகளுக்குள்ளும் அந்த மரத்தின் இலைகளைபிடிங்கி வைத்துக் கொண்டு இருந்தான். சிங்கம் விழித்துச் கொண்டது. கட்டிலில் அவனைக் காணவில்லை அங்கும் இங்கும் பார்த்தது பின் மரத்தை அண்ணாந்து பார்த்தது அன்று நிலவுஎன்பதால் அவன் இருப்பதை அது கண்டு விட்டது உடனே இறங்கும்படி அவனைக் கூறியது. அவன் தன் இரண்டு கைகளையும் பொத்தியபடி இறங்காது இருந்ததைக் கண்ட சிங்கம் இருகைகளுக்குள் என்ன இருக்கிறது எனக்கேட்டது. அதற்கு அவன் இருகைகளையும் காட்டி இதற்குள் பெரிய ஒணான் இதற்குள் சிறிய சிறியஒணான். விடப்போறன் விடப்போறன் எனக் கூறினான்உடனே சிங்கம் திரும்பியும்பார்க்காது ஓடத்துவங்கியது அவன் மரத்திலிருந்து இறங்கி வீடு சென்றான்.

த.ருகாஸ்ந்த
அங். இல 141

# சாஸ்திரியின் வாழ்வில்....

லால் பகதூர் சாஸ்திரி முன்னைநாள் பாரதப் பிரதமர். அவர் ஆறு வயதாக இருந்தபோது ஒரு நாள் மாலை நேரம் நண்பர்களுடன் விளையாடச் சென்றிருந்தார். எல்லோரும் விளையாடியவாறே அருகிலிருந்த பழத் தோட்டத்துக்குள் நுழைந்தனர். அவர்கள் பழம் பறித்துத் தின்றனர். ஆனால் சாஸ்திரி தின்னவில்லை. அங்கிருந்த மலர்ஒன்றைப் பறித்தார். அதன் அழகைப்பார்த்தவாறு இருந்து விட்டார்.

தோட்டக்காரன் அங்கே வந்தான். சிறுவர்கள் ஓட்டம் பிடித்தனர். ஆனால் சாஸ்திரிக்கு அவன் வந்தது தெரியாது. தோட்டக்காரன் அவரைப் பிடித்தான். சாஸ்திரி தன் நிலையைக் கூறிக் கெஞ்சினார்! தோட்டக்காரன் சாஸ்திரியை விட்டுவிட்டான். 'தம்பி உன்னைத் திருத்தத் தந்தை இல்லை. நீ உன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும்' என்றான். அந்த அறிவுரை சாஸ்திரியின் மனதில்பதிந்தது. இனிமேல் தவறு செய்வதில்லை' என்றுஉறுதி எடுத்துக்கொண்டார்.

கி. ம: பிரவீணன்

# வண்ண வண்ணப் பூக்களே!

வண்ண வண்ணப்
பூக்களே
வாசனை தரும் பூக்களே
வண்ணத்து பூச்சி என்றும்
வட்டமிடும் பூக்களே!
கண்ணைக்கவரும் பூக்களே
கடவுள் விரும்பும் பூக்களே
எண்ண இனிக்கும் பூக்களே
எம்மைக்கவரும் பூக்களே!

பா. முரளிதரன்
அங். இல. 417




# வண்ணத்துப்பூச்சி

வண்ணத்துப் பூச்சி பறக்குதுபார்
வண்ணச் சிறகை அடிக்குதுபார்
பறந்து பறந்து பூக்களின்மேல்
பக்குவ மாக இருக்குதுபார்

செம்ப ரத்தம் பூவினிலே
சிவப்பு வண்ணப் பூச்சிகளாம்
மல்லிகைப் பூக்கள் முழுவதிலும்
மஞ்சள் வண்ணப் பூச்சிகளாம்

சதீஸ் பாலமுருகன்

# கலைவாணர் சொன்னகதை

ஒரு நோயாளி நோய்க்கு மருந்துவாங்குவதற்காக வைத்தியரிடம் சென்றான் வைத்தியர் அவனுக்கு லேகியம் கொடுத்தார். அப்போது நோயாளி "இந்த லேகியத்தைச் சாப்பிட என்ன பத்தியம்" என்று கேட்டான், வைத்தியர் சொன்னார்:"பத்தியம் ஒன்றும் இல்லை. ஆனால் இந்த லேகியத்தைச் சாப்பிடும் பொழுது குரங்கை நினைக்கக் கூடாது" நான் குரங்கை நினைக்கவே மாட்டேன்" என்று கூறிய நோயாளி லேகியத்தை வீட்டுக்குக் கொண்டுசென்றான், அதைச் சாப்பிட முயன்றான் ஆனால் இறுதிவரை அவன் அதைச் சாப்பிடவே இல்லை.

எமது மனம் குரங்கு மனம் ஒன்றை நினைக்கக் கூடாதென்று நினைத்தால் அதையே நினைக்கும்?

கி. ம. பிரவீணன்
அங்கத்தவர் இல. 22

# மாடப்புறுவும் எறும்பும்

ஒரு சிற்றெறும்பு தாகத்தால் தவித்தது. எனவே அது தண்ணீருக்கு அருகே நீர் பருகச் சென்றது அது தடுமாறி நீரில் விழுந்து விட்டது. தண்ணீரில் தத்தளித்த அந்தச் சிற்றெறும்பு "உதவி உதவி"எனக் கத்தியது அவ்வழியே பறந்து சென்ற மாடப்புறு ஒன்று அதன் அபாயக் குரலைக் கேட்டது. "நான் உனக்கு உதவுகிறேன்" என்று கூறியது. பறந்து சென்று ஒரு செடியிலிருந்து இலை ஒன்றைப் பறித்துக் கொண்டு வந்து அந்த எறும்பு தண்ணீரில் தவித்த இடத்துக்கு அருகே போட்டது. எறும்பு அந்த இலை மீது ஏறிக்கொண்டு கரை சேர்ந்தது. "மிக்க நன்றி" என்றது எறும்பு "என் வாழ்வைக் காப்பாற்றி விட்டாய் ஒரு நாள் நான் உன் உயிரைக் காப்பாற்றுவேன்" என்று கூறியது.

மாடப்புறுவோ சிரித்தது. எவ்வாறு ஒரு சிற்றெறும்பு தனக்கு உதவ முடியும் என்பது புரியவில்லை. ஆனால் வேடன் ஒருவன் ஒருநாள் அவ்வழியே வந்தான். மாடப்புறு அமர்ந்திருந்த மரத்துக்குக் கீழே அவன் தன் பொறியை வைத்து அந்தப் புறுவுக்குக் குறி வைத்துக் கொண்டிருந்தான். அந்தச் சிற்றெறும்பு உதவி செய்வதற்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது அது வேகமாக ஓடி அந்த வேடனின் காலைக் கடித்தது. அவன் அலறிப் பதைத்து குதித்து எழும் போது பொறியை கீழே போட்டு விட்டான் சத்தத்தைக் கேட்ட புறுவோ பறந்து சென்று தப்பித்துக் கொண்டது ஒருவர் ஒருவருக்கு உதவி செய்வதும் எல்லோர்க்கும் அன்பு செய்வதும் உயர்ந்த பண்பு.

செல்வி அமலராசன்

# தண்டனை எதுவோ

பேரரசர் இபுறுகிம் பின் அத்ஹம் மலர்ப் படுக்கையிலே துயிலும்வழக்க முடையவர். மலர்களைப் படுக்கையிற் பரப்புவதற்கென்றே அடிமைப் பெண் ஒருத்தி அமர்த்தப்பட்டாள்.

நெடுநாள் அவ்வேலையைச் செய்த அப்பெண்ணுக்குத் தானும் சற்றுநேரம் அந்த ரோஜா மலர்ப் படுக்கையிற் படுத்தால் என்ன என்று தோன்றியது. அரசரில்லாத வேளையிற் படுத்துத் தன்னை அறியாது துயின்று விட்டாள்.

அடிமைப்பெண் தனது மலர்ப்படுக்கையிற் படுத்துத் துயின்றாள் என்பதை அரசர் அறிந்தார். சினத்தால் அவர்கண்கள் சிவந்தன. சவுக்கால் அவளைத் தாறுமாறாக அடித்தார். இரத்தம் பீறிட்டது. அனால் அந்த அடிமைப்பெண் அலரவில்லை; அழவில்லை,வாய் விட்டுச் சிரித்தாள்.

'பெண்ணே! இரத்தம் சொட்டும் படி நான் அடிக்கிறேன். நீ சிரிக்கிறாயே?: வலிக்கவில்லையா!'

வியப்படைந்த அரசர் வினவினார்.

'பேரரசரே! ஒரு சில நிமிடநேரம் இம்மலர்ப் படுக்கையில் உறங்கியதற்கே எனக்கு இக்கொடிய தண்டனையானல் காலம் முழுதும் படுத்துறங்கும் தங்களுக்கு இறைவன் சந்நிதியில் தரப்படவிருக்கும் தண்டனை எத்தகைய கொடியதாய் இருக்கும் என்று எண்ணினேன்: என்னாற் சிரிப்பை அடக்கவே முடியவில்லை' எனப் பதிலுரைத்தாள் அந்த அடிமைப்பெண்

*

இரண்டாவது உலகப் போர் முடிவடையும் தறுவாயில், சோவியத்யூனியன் தவிர மற்ற, 16 நேச நாடுகளின் பிரதி நிதிகளும் லண்டனிற் கூடி ஐக்கியநாடுகள் சபையில் 'போர்க் குற்றங்கள் கமிஷன்' ஒன்றைஏற்படுத்தினார்கள்.

கதிர் மாணிக்கம்

# பூந்தோட்டம் அங்கத்தவர்

இலக்கம் 456 மாணிக்கவாசகன் துஷ்யா
வயது 12, யாழ் இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

இலக்கம் 457 வரதராஜா வைகுந்தன்
வயது 13, பரி. யோவான் கல்லூரி யாழ்ப்பாணம்.

இலக்கம் 458 கணபதி ஞானசீலன்
வயது 09, கனகாம்பிகை குள கனிட்ட ம. வி கிளிநொச்சி

இலக்கம 459 இராசதுரை நிரோஜினி
வயது 04, தோமஸ் பாலர் பாடசாலை வசாவிளான்

இலக்கம் 460 விஜிதா சற்குணநாதன்
வயது 05. இ. கி. மீ. ந.வேலணை பாரதிமன்றப் பாடசாலை

இலக்கம் 461 நர்மதா சற்குணநாதன்
வயது 10, வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்

இலக்கம் 462 செல்வநாயகம் அருட்குமரன்
வயது 10, நடராஜ இராமலிங்க வித்தியாலயம் ஆவரங்கால்

இலக்கம் 463 சிவகுருநாதன் செந்தூரன்
வயது 07, ட்றிபேர்க் கல்லூரி சாவச்சேரி

இலக்கம் 464 ரஜீந்தா இராஜேந்திரம்
வயது 12, உடுவில் மகளிர் கல்லூரி சுன்னாகம்

இலக்கம் 465 துரை றஞ்சித்குமார்
வயது 12, உரும்பிராய் இந்துக் கல்லூரி

வி. ஐங்கரன் மற்ெருருமுதிரா இளைஞன் (teen-ager); மாணவன். நவீனன், சார்ள்ஸ் என்ற புனை பெயர்களிற் கட்டுரைகளும் எழுதுபவர். கவிதை நூல் ஒன்று வெளியாகி உள்ளது. முரசொலி வாரமலரில் (89. 07. 23) வெளிவந்த சிறையிலும் வாடாத கறுப்பு மலர் என்ற கட்டுரை பலரதும் கவனத்தை ஈர்த்தது. இவர் கண்ணோட்டம் இது.

# மராத்திய இலக்கிய கர்த்தர்

# காண்டேகர்

### வி. ஐங்கரன்

மராத்தி எழுத்தாளர் 'காண்டேகர்' நாவல்களையும், சிறு கதைகளையும் படித்துப் பாராட்டாத தமிழ் வாசகர்கள் இல்லை. அவ்வளவுக்கு மூலத்தின் சுவை குன்றாமல் மொழி பெயர்த்து வாசகர்களின் மனதில் காண்டேகர் நிலைத்து இடம் பெற வைத்தவர் கா. ஸ்ரீ. ஸ்ரீ.

## மராட்டிய இலக்கிய கர்த்தர்

மகாராஷ்டிரத்தில் பிறந்த காண்டேகர் இலக்கியத்துறையில் இளமையிலேயே காலடி வைத்தவர். அவரின் ஆயுள் பூராவும், இலக்கியம் அவருடன் இனிமையாய் இணைந்திருந்தது. சாகாவரம் பெற்ற இலக்கியம்' என்பது காண்டேகரின் இலட்சிய மொழி. இதற்கிணங்க காண்டேகரின் இலக்கியங்கள் 'ஆல்' போல் தழைத்தன. அவற்றின் 'விழுது'கள் கூட இன்று நிழல் பரப்பி நிற்கின்றன.

வி. ஸ. காண்டேகருக்கு கிடைத்த விருதுகள் பல. ஒவ்வொரு விருதும் காண்டேகரின் தூய்மையையும், யதார்த்தப் பார்வையையும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. 1978 ஆம் ஆண்டில் 'பாரதிய ஞான பீடப்' பரிசு காண்டேகருக்குக் கிடைத்தது.

ஞானபீடப் பரிசுஇதுவே முதன் முறையாக மராட்டிக்கு கிடைத்திருப்பது என்றாலும், சிறுகதை நாவல்துறையில் மகாராஷ்டிரத்தில் காண்டேகருக்கு நிகர் காண்டேகரே. காண்டேகர் வளர்த்துவிட்ட இலக்கியத் 'தீ' பெருநெருப்பாய்கொழுந்து விட்டெரிகின்றது.

## தமிழுடன் தொடர்பும்; படைப்புகளும்:

1975ஆம் ஆண்டு கால கட்டத்தில் தி. மு. க. ஆட்சியில் தமிழ் நாட்டுக்கு வந்திருந்த காண்டேகர் சென்னை மகாஜன சபாவில் இலக்கிய நெஞ்சங்களுடன் கலந்துரையாடினுர். அதன் விளைவாக காண்டேகரின் இலக்கியப் புகழ் தமிழகத்தில் மேலோங்கியது!

காண்டேகரின் மராட்டியப்படைப்புக்களை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்ட திரு. கா. ஸ்ரீ. ஸ்ரீ. அவர்கள் காண்டேகரின் படைப்பாற்றலை மிக விரும்பினுர். அவரின் படைப்புக்களை இலகு தமிழ் நடையில் மொழி பெயர்த்தார்.

'கருகிய மொட்டு' 'இரு துருவம்' முதலிய நாவல்களைத் தமிழில்கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழி பெயர்த்து வெளியிட்டதன் மூலம் தமிழ் இலக்கிய உலகமும் காண்டேகரின் படைப்பாற்றலை மெச்சிப் புகழும் வாய்ப் பேற்பட்டது.

## முதல் உருவகக்கதை:

தமிழில் வெளிவந்த காண்டேகரின் முதல் இலக்கியப் படைப்பு 'சகோதரமும் சாதகமும்' என்ற உருவகக் கதை. 1937-ம் ஆண்டு 'தினமணி' ஆண்டு மலரில் இதுவெளி வந்தது. 'கலைமகள்' இதழில் 'வெறும் கோவில்' என்ற காண்டேகரின் படைப்பு வெளியிடப்பட்டது. தமிழில் பெயர்த்தவர் திரு. திரு. கா. ஸ்ரீ: ஸ்ரீ. தான்.

கலைமகள் வெளியீடாகக் 'கருகிய மொட்டு'-நாவல் வெளிவந்தது. இதனை வெளியிட்டபோது கி.வா. ஜகந்நாதன் அவர்கள் ,கருகிய மொட்டு கலைமகள் இதழின் தரத்தை வெகுவாகப் பாதிக்கும் என்று ஐயமுற்ருர். ஆனுல் நூல் வெளியாகி வாசகர்கள் மத்தியில் பெருவரவேற்பைப் பெற்றது. இலக்கிய கர்த்தாக்களும் விமர்சகர்களும் ஒரு மனதாக இந்த நூலைப் பாராட்டினர். ஏன்! கி. வா. ஜகந்நாதனே காண்டேகரை மெச்சிப் புகழ்ந்து கட்டுரை எழுதும் நிலை உருவாகிவிட்டது:

## பிரசித்திபெற்ற கருகியமொட்டு

''கருகிய மொட்டு'' என்ற நாவலின் முன்னுரையில் வி. ஸி. காண்டேகர் கூறியது இது:

''இளம் ஆண் பெண்கள் தம் காதல் வாழ்வில் உடலின்பத்தின் பகுதிக்கு அதிகப் பெருமை தரவேண்டும், ஒருவருக்கு ஒருவர் மகிழ்வூட்டவே நாம் கைகோத்திருக்கிருேம் என்பதை அவர்கள்எப்போதும்மறக்கலாகாது. வாழ்வுப் பயணத்தின் உண்மையான இன்பம் இத்தகைய கூட்டுறவில் தான் இருக்கிறது! என்று இந்த ரீதியில் நான் பல விஷயங்களை இந் நாவலிற் குறிப்பிட்டுள்ளேன்.

வானத்து வெண்மதியை எட்டும் நோக்கில் தரையிலுள்ள மனிதன் கால் நழுவிவிட்டால் அவன் குப்புற வீழ்கிருன். இதனைத் தான் நான் கூறவிரும்புகிறேன். அந்த வெண்மதி உரிய சமயத்தில் பலர்கைக்கு எட்டுகின்றது. இல்லையென்று சொல்லவில்லை. ஆனுல் இல்லறத் தொடக்கத்திலேயே அந்தப் பயன் கிடைக்காது. பதினைந்து இருபது ஆண்டுகள் இணையாகப் பல இன்னல்களையும், இன்பங்களையும் நுகர்ந்தபின்பே அந்தத் 'தேனிலவு' பொழிய ஆரம்பிக்கிறது எனவே இந்த நோக்கோடு பார்த்தால் உயர்ந்த காதல் என்பது வளர்பிறைச் சந்திரனல்ல; தேய்பிறைச் சந்திரனே.''

'கருகிய மொட்டு' இளம் உள்ளங்களையும் இலக்கிய நெஞ்சங்களையும் வெகுவாகக் கவர்ந்த நாவல். வாழ்க்கையைவாழ்வாங்கு வாழ்வதற்கு ஓர் வைத்தியன்கூறும் சிந்தனையாகவும், முத்தி பெற்ற முனிவர் உரைக்கும் உரையாகவும், பேராசான் கூறும் பேருரையாகவும் காண்டேகரின் இந்த நாவல் அமைந்துள்ளது.

## நவ எழுத்தாளர்களுக்கு உதவியாய்

கருகிய மொட்டு இன்றைய நவ எழுத்தாளர்களுக்கும் உதவுகின்றது. உதாரணம் வேண்டுமா? ஆனந்த விகடனில் வெளிவந்த ''குமாரி பிரேமலதா'' வின் 'கவர்ச்சி' எனுந் தொடர்கதையில் ஒரு காட்சி:

''காண்டேகரின் கருகிய மொட்டு புத்தகத்தை அவன் தேடி வைத்திருந்தான். அவள் அதை வாங்கிக் கொண்டபோது அட்டைப் படத்தைக் கவனித்தாள்.

''என்ன கதை இது?''
''கதையைச் சொன்னுல் சுவாரசியம்போய்விடும்!''
''அவ்வளவு சுவாரசயமான கதையா?''

வாழ்க்கையின் சுவாரசியமான விஷயங்களைப் பற்றிய கதை; படித்தபிறகு சொல்லு''

இப்படிப் பிறர் நாவல்களிலும் காண்டேகரின் இலக்கியத் திறன் புகழப்படுவதைக் காணலாம். விமர்சகர்கள் கூட 'கருகிய மொட்டு' நாவலைப் பற்றிச் சிறப்பாகவே எடுத்துக் கூறியுள்ளனர். டாக்டர் மு.வரதராசன்; ஸி. என். அண்ணுதுரை; போன்ருேர் காண்டேகரின் படைப்பாற்றலைப் பெரிதும் நயந்துரைத்துள்ளனர்.

## காண்டேகர் படைப்புக்கள்

காண்டேகர் தமது இலட்சியமிக்க இலக்கிய வாழ்விற் பத்து நாவல்களையும், நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் படைத்துள்ளார். 'கருகியமொட்டு'' 'சுகம் எங்கே?;' 'புயலும் படகும்;' கிரௌஞ்சவதம்;. 'வெண்முகில்'; 'இருதுருவம்'; 'எரிநட்சத்திரம்' என்பவை காண்டேகரின் சிறந்த நாவல்கள்

காண்டேகரின் இலக்கியங்கள் வாசகர்களின் நெஞ்சைக்கொள்ளைகொண்டன: இங்கே காண்டேகர் யுகம் தோன்றியது. வாழ்வைப்போலவே இலக்கிய வரலாறும் சுவை நிரம்பியதுதானே!

# நூற்கடல் அமுதம்

## மனித உள்ளம்

மனிதனுடைய உள்ளத்தை உள்ளபடி வர்ணிக்க வேண்டுமானுல் நான் அதை ஒரு குகை என்பேன்: அதுவும் சாதாரணக் குகையல்ல. அலிபாபா அதிருஷ்டவசத்தால் மட்டுமே நுழைய முடிந்த அந்தத் திருடர்களின் குகைபோன்றது அது.

உள்ளம் ஒரு பிணம் போலும், அதன் விகாரத் தன்மையை லட்சியம் என்ற செயற்கை மலரால் மூடித்தான் வைக்க வேண்டும் போலிருக்கிறது.

மனிதனுடைய மனம் ஆகாய விமானம் போன்றது. விசாலமான திறந்த வெளியிற்ருன் அது பறக்க முடியும் அந்தந் திறந்த வெளி இறந்த காலமாயினும் சரி, எதிர்காலமாயினும் சரி பிடிக்காதது ஏன்?

தெய்வம் மனிதர்களின் துன்பத்துக்குத் துன்பத்தையே கூட்டாளியாகத் தந்திருக்கிறது. இதைப் பார்த்தால்,

சிருஷ்டி நிர்மாணம் செய்யும் தெய்வத்துக்கு இரண்டு மனைவிகள் இருந்திருக்க வேண்டும். ஒருத்தி பிடித்தவள்; மற்ெருருத்தி பிடிக்காதவள் முதல் மனைவியிடமிருந்து இயற்கை உண்டாகியிருந்திருக்கும். மற்ெருருத்தியிடமிருந்து மனிதன் உண்டாகியிருப்பான். அதனுல்தான் அவன் தெய்வத்துக்கு இவ்விதம் பிடிக்காதவனுக இருக்கிருன்.

## விதி ஏமாற்றுகிறது

அடித்துக் கொன்ருலொழியப் பன்றியின் மாமிசத்துக்கு இனிமை வராது என்பர். விதியும் மனிதனை இப்படித்தான் ஏமாற்றுகிறது. அது ஒரே வெட்டு இரண்டு துண்டுகளாகச் செய்து அவனை ஒரேயடியாகச் சாகடிப்பதில்லை. பன்றி மாமிசம் இனிப்பாக இருக்க வேண்டுமென்று வதைத்து வதைத்து அதைக்கொல்லும் சனங்களைப் போலவே அதுவும்.

## பரிசுபெறும் காவியம் பாடப்போகின்றேன்!

எங்கிருந்தோ வந்தாள்என் இதயத்துள் புகுந்தாள்-வாச
எழில்வல்லி இவள்யாரோ நானறியேன் முன்னர்
பங்கயப்பூம் பட்டிதழை ஒட்டிவைத்த மேனி- அதற்குத்
தங்கமுலாம் பூசியது யாரெனவும் தெரியேன்!

அங்கமெலாம் கவிதைசொலும் பருவமலர் ரோஜா-அடி
ஆருக்கும் தெரியாமல் நானும்அறி யாமல்
இங்கிதமாய்த் தாழிட்ட என்னிதயக் கதவை-அவள்
எந்தவிதம் திறந்தாளோ வந்துபுகுந் திட்டாள்!

கானமலர்க் குவியலிலே கடைந்தெடுத்த அழகு-உயர்
ஞானஒளி வட்டத்தில் தேர்ந்தெடுத்த பிரபை
வீணையினைத் துல்லியமாய் விளையாடும் வாணி - பெரு
விந்தையுறத் தீட்டியதோர் ஓவியமே ஆனுள்!

வண்ணுத்திப் பூச்சிஎனத் தரங்குறையும் புலமை!-முல்லை
விண்ணுண முறுவலுக்கு இங்கில்லை உவமை
அண்ணுந்த இடமெல்லாம் அவளாகி நிற்பாள்-அன்னை
அபிராமி ஆகியெனை அரசாளு கின்ருள்!

கோடுகளால் இல்லாத கோலங்கள் போட்டு-மனக்
குமிழிகளால் அழியாத வண்ணம்அவள் பார்த்து
தேடுகிருள் எனக்கென்று ஒருபுனித உலகம்-அந்த
தெய்வீகக் கொழுந்தினது போக்குஒரு புதுமை

கவிதைமொழி அறியாதார் அவளைஅறி யார்கள்-என்
காவியநா யகியாகி நளினவிழி எறிவாள்
பவளஇதழ் ஊறமுதத் தேறலிலே தொட்டு-நோபல்
பரிசு பெறும் காவியம்நான் பாடப்போ கின்றேன்

சந்தனவெண் நிறவண்ணப் பாவாடை தனது-மென்மைச்
சாயலொடு உறவாட சிட்டாகப் பறந்து
அந்தரத்தில் வைத்தென்னைப் பந்தடிப்பாள் பாவம்-பந்து
அவள்பக்கம் அன்றிஎதிர் மறுபக்கம் இல்லை

பேசரிய பெண்மைநலப் பிறைநுதலி பின்னே-திரியும்
பிச்சனென மற்றவர்கள் பேசிடினும் கூசேன்
பாசமலர் மென்கொடிக்குவருத்தம்உண்டு பண்ணும்
-உயர்'
தேசமிகும் செங்கசலத் திர்த்தம் அருந்திடுவேன்

சுகபோகம் இதுவென்று இதமாகப் புல்லி-வாழ்க்கை
சுரியாகும் சேறன்று எனநன்று சொல்லி
அதுபோகம் எவளாலே எனநானும் உணர-எழிலி
எங்கிருந்தோ வந்தாள்என் இதயத்துள் புகுந்தாள்

பழையகணக்கு அத்தனையும் அடித்துவிட்டு எனக்கு-பலே
புதியகணக்கு எழுதுகிருள் புதுப்பாடம் செய்ய
நுழைவதற்கு துடிக்கின்றேன் நூலிடையில் நானும்-
நூலின்
இடைவரிக்குப் புதியவுரை எழுதவிழை கின்றேன்.

கவி

சிறுகதை

# அவர்கள் அப்படித்தான்

ஊரெழு
தர்ஷினி

அந்த உல்லாச ஹோட்டலின் பிரம்மாண்டமான வரவேற்பு அறை. வரும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் சொல்வதும் – குறிப்புக்கள் எடுப்பதுமாய் நான் அவசரப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஒரு 'ரிஷப்ஷனிஸ்ட்'இன் சந்தோசமான வேலைதான்.

ஹோட்டலின் 'ரெஸ்டோரன்ட்' சன நெருக்கத்தில் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கின்றது. ஹோட்டல் முழுவதும் அமர்க்களம். அன்று நகரின் பிரபல்யமான ஒரு சங்கத்தின் அரையாண்டுக் கூட்டம். நகரின் பெரிய மனிதர்கள் என்று பெயர் பெற்ற முக்கிய புள்ளிகள்... அனைவரும் தங்களின் செல்வச் செழிப்பையும், பெரியமனிதத் தனங்களையும் பறைசாற்றும் வண்ணம் தங்களது நாகரிக மனைவிகளுடன்... விலை யுயர்ந்த ஆடம்பரக் கார்களில் வந்து இறங்கிக் கொண்டிருந்தனர்.

உயர்ரக உடைகள்...மேல்நாட்டு நாகரிக அலங்காரங்கள்...பூச்சுக்கள்...உட்பட நுனி நாக்கு ஆங்கிலமும்... போலித்தனமான சிரிப்புக்களுடன் கூடிய 'ஹலோ'க்களுமாக இடம் கலகலத்துப் போயிற்று. அந்த பேச்சுக்களிலும் செயலிலும் அப்பட்டமான வேஷங்கள் அப்பியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

உள்ளுக்குள் ஒருவரை ஒருவர் கறுவிக் கொண்டு...மூர்க்கத்தனமாய் தாக்கிக்கொண்டு ...சாடிக்கொண்டு... எப்படி இவர்களால் வெளியே...ஒன்றுமில்லை என்கின்ற மாதிரி சிரித்துப் பேச முடிகின்றது?...

இப்படி நான் அடிக்கடி வியந்து போயிருக்கிறேன். இப்படிப்பட்ட முகங்களை ஆரம்பத்தில் பார்த்து ஆச்சரியப்பட்டாலும் பிறகு அது பழகிப் போய்.....இப்போது அலுத்தே போய்விட்டது

ஆங்கிலத்தில் அழகாக சொல்லப்போனால்......'கிளப் மெம்பர்ஸ்' முந்நூறு பேராவது அங்கு கூடியிருப்பார்கள்...அவர்களுக்கு மதியநேர உணவாக பலவித மேல்நாட்டு உணவுவகைகளும் சிற்றுண்டி வகைகளும்—குளிர்பான வகைகளும் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

அன்று அவர்களின் அந்த அரையாண்டுக் கூட்டத்தின் முக்கிய நோக்கமே...திக்கற்ற ஏழைகளுக்கும் – அநாதைக் குழந்தைகளுக்கும்... பாதிக்கப்பட்டோரின் எதிர்கால வாழ்வுக்கான...மறுவாழ்வுத்திட்டத்திற்கு...' அவர்களின் புதுவாழ்வு ஆரம்பத்திற்கு நிதி சேகரிப்பதற்கான...செயல் திட்டத்தில் என்ன செய்ய வேண்டும் என்று ஆராய்வதே!

எனக்கிது வேடிக்கையாக இருக்கின்றது. இவர்கள் இப்படிப்பட்ட கூட்டங்களை வேறு இடத்தில்வைத்திருக்கலாமே. இந்த ஹோட்டல் குடிக்கின்ற தண்ணீருக்கும் காசு கேட்கின்ற ஹோட்டல்...இவர்களின் உணவிற்கும், இடத்திற்கும் சேர்ந்து வரும் 'பில்' கணக்குப் போட்டுப் பார்த்தால்...அது பாதி மக்களின் நல்வாழ்வுக்கு போதுமானதாக இருக்கும்.

ஒருவேளை இத்தகைய இடங்களில்தான் இவாகளின் கௌரவம் கட்டிக்காக்கப்படுகிறதோ என்னவோ...

எனது வேலைகளில் இருந்து விடுபட்டு சற்று ஓய்ந்திருந்த போது...அந்த இளைஞனும்– ஓர் வயோதிபரும் என்னை நோக்கி வருவது தெரிந்தது...

கைகளில் அந்த வெள்ளைத் தடியும் – கண்களில் அந்தக் கருப்புக் கண்ணாடியும் இல்லாவிட்டால்...அந்த இளைஞன் கண்பார்வை இல்லாதவன் என்பதை கண்டு பிடித்திருக்கவே முடிந்திருக்காது...

'பிள்ளை...கூட்டம் தொடங்கிட்டுதே...'? வெயிலில் வந்த அவர் முகத்தில் ஏராள வியர்வை களைப்பு, துடைத்தபடி கேட்டார்... அந்த வயோதிபர்.

'இல்லை...ஆனால் தொடங்கப் போகுது...'

'ஓ...சரி பிள்ளை...இவன் என்டமகன். கண்தெரியாது... இந்தக் கூட்டத்திற்கு 'டாக்குத்தர்' ஒருத்தர் வாருராம். ...கண் ஒப்பரேஷனில வலு கெட்டிக்காரராம்...இந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கிற தலைவர் என்ர ஊர்தான்... அவர்தான் சொன்னவர் தம்பியை கூட்டிக் கொண்டு வரச் சொல்லி...அது தான் வந்தனுங்கள்...தம்பி உதிலை இருக்கட்டும்...நான் ஒருக்கா வெளியில போட்டு வாறன்...'...

என் பதிலையும் எதிர்பார்க்காமல் அந்த வயோதிபர் வெளியே போனார்.

நான் சொன்ன குறிப்பை உணர்ந்து அங்கிருந்த கதிரையில் அவன் உட்கார்ந்தான். சின்ன வயது தான்... மாநிறமாக இருந்தாலும் சுருட்டை முடியும்—அரும்பு மீசையுமாக அவன் அழகாக இருந்தான்

நான் அவனுடன் எதுவும் பேசவில்லை...முக்கிய ஓர் கடிதத்தை 'டைப்' அடிக்க வேண்டியிருந்ததால்...நான் என் கடமைகளில் மூழ்குகிறேன். நேரம் நகர்கின்றது... கூட்டம் ஆரம்பித்து உச்சத்தை நெருங்குகின்றது...அந்த பெரியவர் தலைவர்...அநியாயத்திற்கு ஏதோ அடித்தொண்டையில் கத்துவது போல் எனக்கு கேட்டது...வாக்குறுதிகளை காற்றில் நிறையத்தான் மிதக்க விடுகின்றார் போலும்...கரகோஷமும்–சிரிப்புமாக சத்தம் காதை அடைக்கின்றது என் வேலையில் எனக்குக் கவனம் தப்புகின்றது

அடிக்கடி இவர்கள் இப்படிக் கூட்டம் போட்டு பேசுகின்றார்களே...அப்படி என்னதான் பேசுகிறார்களோ...? இவர்களின் சங்கங்கள் மூலம் என்ன சாதிச்சிருப்பார்கள் ...? ஒன்றுமே அறியக் கூடியதாக இல்லையே...கூட்டம் போடுவதும் கதைப்பதும் மட்டும் தானா? இல்லை...எனக்குத் தெரியாமல்...ஏதாவது பெரிதாக செய்திருப்பார்கள்... என்னவோ...

அடிக்கடி இப்படித்தான் நான் தேவையில்லாமல் என்னைப் போட்டுக் குழப்பிக் கொள்வேன். இதுபற்றி... என்னுடன் வேலை செய்யும் மற்றவர்களுடனும் கதைப்பேன். அவர்களோ... 'உனக்கேன் உந்தத் தேவையில்லாத கவலை? பேசாமல் உன்ர வேலையைப் பார்'.. என்ற ரீதியில் சொல்வார்கள்... நானும் வாயை மூடிக் கொள்வதுண்டு.

அந்த இளைஞன் ஏனோ இருப்புக் கொள்ளாமல் தவித்தான். வித்தியாசமான சூழ்நிலை...புதிய இடம்... முன்னால் பார்க்க முடியாத பெண்... சங்கடமாகத்தான் இருக்கும்.

எனக்கு ஏதாவது அவனுடன் கதைக்க வேண்டும் போல் இருந்தது... நானே பேச்சைக் கொடுக்கின்றேன்... ஆனால் நான் எதிர்பார்த்ததை விட அவன் சகசமாக – சரளமாக கதைக்கத் தொடங்கினான்.

அவன் குடும்பம் நிறையவே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது ஐந்து சகோதரிகளுக்கு ஆணாகப் பிறந்து... படித்துக் கொண்டிருக்கும்போது... ஓர் நாள் வந்த திடீர் காய்ச்சலினால்... அவன் பார்வை மெல்ல பாதிக்கப்பட்டு...நாளடைவில் எதுவுமே தெரியாத குருடாகிப் போய்... அதனால் அவன் நிறையவே பாதிக்கப்பட்டுப் போனான். சின்னச் சின்ன எதிர்பார்ப்புகளும்... வண்ணக் கனவுகளும் அழிந்து போயின. அவனையே நம்பியிருந்த குடும்பம் ஆடிப்போய் விட்டது.

குடும்பத்திற்கு எதுவுமே செய்ய முடியாத நிலையில் குடும்பத்திற்கே அவன் பாரமாகி... பிறகு கைதடி குருடர் பாடசாலையில் படித்து .. பாசாகி... இனி என்ன செய்வது என்ற ஏக்கமுமாய்... வாழ்ந்து கொண்டிருக்கும் போதுதான்... 'எட்டாத கனவுகளை இதோ உனக்கு கையில் பிடிச்சுத்தாறேன்... என்கிற மாதிரி இந்த பெரியவர் உதவுவதற்காக முன் வந்தாராம். அதுதான் அந்த நம்பிக்கையில் தொலை தூரத்தில் இருந்து... காலையில் எதுவுமே சாப்பிடாமல்... ஏராளமான எதிர்பார்ப்புகளுடன் வந்திருக்கிறானாம்.

அவன் சொன்னதைக் கேட்டபோது... இனம் புரியாத ஒரு பச்சதாபமும் .. பரிதாபமும் அவன் மேல் எனக்குப் பிறந்தது

...'கடவுளே .. எப்படியெண்டாலும்... அந்த டாக்டர் இவனுக்கு கண் தெரியிறமாதிரி செய்து போடவேண்டும்...'

காரணமில்லாமல்... முன்பின் தெரியாத இந்த இளைஞனுக்கா... மனது வேண்டிக் கொண்டது. அவனுடன் சேர்ந்து ஓர் நல்ல முடிவுக்காக... நானும் ஏங்கத் தொடங்கினேன்...

நேரம் மதியத்தை நெருங்குகின்றது...கூட்டமும் முடிந்த பாடில்லை... அந்தப் பெரியவரும் ஒருமுறைதானும் அந்த இளைஞனை வந்து பார்க்கவில்லை... ஒருவேளை மறந்து விட்டாரோ...? இல்லாவிட்டால்... கண்டும்... காணாத மாதிரி...இருக்காதே...இருக்க முடியாதே அவர் ஒரு பெரிய மனிதர்... சொல் தவறி நடப்பாரா?...அந்தப் பெரியவர் குறுக்கும்– நெடுக்குமாக ஓடுவதும்– கதைப்பதும்... விவாதிப்பதுமாக... இருந்தார்...ஒருமுறைதானும் இந்தப் பக்கம் வரமாட்டாரா...என்று மனது ஏங்கித் தவித்தது...'பெரியவர் ப்ளீஸ்...ஒருமுறை இந்தப் பக்கமாய் வாங்களேன்'... என்று மனது அடிக்கடி வேண்டிக் கொண்டது... கண்ணாடிகளுக்கால் தெரிந்த அந்த பெரியவரை அடிக்கடி நான் பார்த்துக் கொண்டிருந்தேன்

இதற்கிடையில் இளைஞனின் தகப்பன்கூட வந்து விசாரிப்பதும் போவதுமாய்இருந்தார். பாவம் தள்ளாத வயதிலும்... எவ்வளவு கஷ்டம். இந்த இருவரும் சாப்பிடாமல் ஓர்தேநீர் தானும் குடிக்காமல்... அந்த இளைஞன் மட்டும் ஒருமுறை தண்ணீர் வாங்கிக் குடித்தான்.

பிறகு எனக்கென்று வந்த தேநீரை அவனுக்குக் கொடுக்கின்றேன். அவனும்அதை ஆவலுடன் வாங்கிக் குடிக்கின்றான். எனக்கு வந்திருந்த தேநீர் என்று தெரிந்திருந்தால்...நிச்சயமாக அதை அவன் மறுத்திருப்பான்.

இடையில் எங்கள் பேச்சு திசை திரும்புகின்றது. நாட்டு நடப்புகளையும்– பிற விடயங்களைப் பற்றியும் பேசிக் கொள்கின்றோம். இடையிடையே... அந்தப் பெரியவரைக் காணாத சலிப்பில் அலுத்துக் கொள்வான்...எனக்கும் சங்கடமாக இருக்கும்.

'ஏன் நீங்கள் போய் அங்க சந்தியுங்களேன்...'

சீ...அது சரியில்லை... பிறகு அது அவருக்குப் பிடிக்காட்டியும் இவ்வளவு நேரமும் நிண்டுட்டன்... இன்னும் கொஞ்ச நேரம்தானே...சில வேளை கூட்டம் முடிஞ்சா வந்து கதைப் பாராக்கும்...

எனக்குக்கூட அப்படித்தான் பட்டது...

இப்போது கூட்டம் மதிய போசனத்திற்காக இடை நிறுத்தப்பட்டது. எனக்குள் ஒரு எதிர்பார்ப்பு... ஒருவேளை இந்த இடை நேரத்தில் அந்தப் பெரியவர் இவனை வந்து அழைத்துப் போகலாம்.

நான் எதிர்பார்த்த மாதிரியே... அவர்... வரவேற்பு அறையை நோக்கி வந்தார். அவர் அந்த இளைஞனுடன் தான் கதைக்க போகின்றார் என நான் நினைத்துக் கொண்டிருந்தபோது... அவர் நேரடியாக, என்னிடம் வந்து, ஒரு நம்பரைத் தந்து, ஒரு 'டெலிபோன் கோல்' எடுத்துத் தரும்படி கூறினது... சிறிது ஏமாற்றமாக இருந்தது.

'டெலிபோனில்' சில நிமிடம் பேசிவிட்டு... பின் அந்த இளைஞனைப் பார்த்தும்– பாராதமாதிரி சிறிது தயங்கி விட்டுப்போனது எனக்கு மேலும் பலத்த ஏமாற்றமாகி விட்டது...ஏனோ அந்தப் பெரியவர் வந்து போனதை அந்த இளைஞனுக்கு சொல்லப் பிடிக்கவில்லை... ஆனாலும்– எனக்குள் சின்னதாய் ஓர் எதிர்பார்ப்பு... கடைசி அந்த பெரியவர் இந்த இளைஞனை பார்த்து விட்டார்தானே... மறைந்திருந்தாலும் இப்போது அவருக்கு ஞாபகம் வந்திருக்கும்... எப்படியெண்டாலும் பிறகும் வந்து சந்திக்கலாம்...

என் எதிர்பார்ப்பைப் போல்... நேரமும் நீண்டு கொண்டு பேன்ாது.

மதிய உணவிற்காக அவர்கள் கூட்டம் தயாராகிவிட்டது போலும். சிறிது நேரத்தின் பின் நான் எழுந்துபோய் 'ரெஸ்டோரன்டை' ஒரு நோட்டம் விடுகின்றேன். உயர்ரக மதுபானங்கள் அங்கு பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தன. சிலருக்கு ஏற்கனவே போதை தலை நீட்டியிருந்தது. குரல்களில் உச்சமும்-பேச்சுக்களில் அசிங்கமும் ஆங்காங்கே தங்களின் வல்லமையை அறிமுகப் படுத்தத் தொடங்கிவிட்டன. அசிங்கமான வார்த்தைகளை ஆங்கிலத்தில் சொன்னால் அழகாகவா இருக்கும்? அவர்களுக்கு அப்படித்தான் இருந்தது. ஆளுக்கு ஆள் ஏதோ சர்ச்சை செய்வதும் – வாதிடுவதுமாய்... ஒரே காட்டுக் கத்தல்.

இத்தகைய சனம்... இந்த மாதிரிக்கத்தல்... இந்த செயற்கைத் தனங்கள் எல்லாம் எனக்கு எப்பவும் 'அலர்ஜிக்' பிடிப்பதேயில்லை... ஆனால் என்ன செய்வது.. வேலைக்கு என்று வந்து விட்டு இதெல்லாம் பார்த்தால்... ஆகுமா?

மீண்டும் என் இருப்பிடத்திற்குவருகிறேன், ஏதும் நான் சொல்லக் கூடும் என எதுவும் எதிர்பார்த்திருக்காலாம்... நான் எதுவும் கூறுமல்... மௌனமாக இருந்ததைக் கண்டு... அவனும் அதைப் புரிந்து கொண்டு பேசாமல் இருந்தான் என் தொண்டைக்குள் என்னவோ அடைத்து... சமாதானத்திற்கு என்னவோ... சொல்ல வேண்டும் போல்இருந்தது.

'இப்பதான் 'லஞ்ச்' தொடங்கியிருக்கு நான் நினைக்கிறேன் அது முடிஞ்ச கையோட அவர் வந்து உங்களை சந்திப்பார். எண்டு...'

நான் சொன்னதில் எனக்கே நம்பிக்கை இருக்கவில்லை என் தொனியிலும் அது தொக்கி நின்றதை அவன்ஏதும் உணர்ந்தானோ... எதுவும் கூறுமல் வெறுமனே ஓர் பெருமூச்சை விட்டான்.

நேரம் நீளமாக ஓடிக் கொண்டிருந்தது– மாலையைத் தொட இன்னும் சில நொடிகளே...

திடீர் என கூட்டத்தினரிடையே பெரிய சலசலப்பு... தொடர்ந்து கண்ணாடிப் பொருள்கள் உடையும் சத்தம்... எனக்குப் புரிந்து விட்டது... இனி என்ன கைகலப்பு அடிதடி... காயங்கள்... இப்படித்தானே... இப்படி இங்கு நடப்பது ஒன்றும் புதியது இல்லை... ஆனால் இது வித்தியாசமாக... படித்த நாகரிக பெரியமனிதர்களிடையேநடப்பதுபுதிதாக... கஷ்டமாக இருக்கின்றது. போதையில் எல்லோருமே ஒரே மாதிரித் தானே?

'என்ன என்ன நடக்குது... ஏதும் பிரச்சினையே...?' அவன் சிறிது பதட்டமாகக் கேட்டான்...

'சீச்சி... ஒண்டுமல்ல... ஏதோ சின்ன விஷயமாக்கும்... சின்னப்பிரச்சினை நீங்கள்... இருங்கோ... சும்மா தெரியாதே...... இப்படித்தானே... எல்லாம்.

அந்தச் சின்னத் தனங்களை மறைக்கநிறைய 'சின்ன'க்களை போட்டு சமாளிக்க பார்த்து அது முடியாமல் போக... பாதியில் நிறுத்திக் கொள்கின்றேன்.

அவனுக்கு ஏதோ எல்லாம் புரிந்திருக்க வேண்டும்.எதுவும் அவன் கூற முற்படவில்லை. அவன் மனது உடைந்து போயிருக்க வேண்டும் – முகத்தில் அசதி பசிக்களைப்புடன் ஏமாற்றமும் சேர்ந்து கொண்டு அவனது இயலாமையுடன் போட்டி போட்டுக் கொண்டு சண்டை பிடித்தன.

எனக்கு இது பெரிய அவஸ்தையாகிவிடுகின்றது தேவையில்லாத சங்கடத்தை இழுத்துப் போட்டுக் கொண்டு ஏன் நான் அவதிப்படவேண்டும் என்றே தெரியவில்லை...!

அவனைப் போகச் சொல்லலாமோ என நினைத்தேன்... ஆனால் இரு என்று விட்டுப் போன அவன் தகப்பனைக் காணவில்லை தனியாக எப்படி அவனை அனுப்புவது?

இதற்கிடையில் அங்கே 'ரெஸ்டோரன்டில்' பெரிய அமளி அந்தப் பெரியவர் ஏதோ உரத்துச் சத்தமிடுவது தெரிந்தது. ஹோட்டல் மனேஜரிடம் போய் விசாரிக்கிறேன்.

அந்தப் பெரியவரின் பேச்சின் பிறகு முக்கிய புள்ளி ஒருவரின் பேச்சுக்கு இடமளிக்கப்படவில்லையாம். அதனால் கூட்டம் இரண்டாக பிளவுபட்டு ஒருவரை ஒருவர் தாக்கத் தொடங்கிவிட்டார்கள்.

பொருள்கள் உடைப்பு– உணவுகள் கொட்டப்பட்டு. கைகலப்பு கட்டுக் கடங்காமல் போவது தெரிந்தது. ஹோட்டல் உரிமையாளர் என்ன செய்வது என்று தெரியாமல் கைகளைப் பிசைந்து கொண்டிருக்கிறார். போதையில் இருந்து ஒருவர் ஆத்திரம் மிகுதியால் ஓர் கண்ணாடி டம்ளரை கையால் நசுக்க... அது உடைந்து கைகளை வெட்டி விடுகின்றது. அவரின் மனைவி அலறி அடிக்க... இரத்தம் பெருக... அந்த நபரை அவசரமாக சில'நிதானங்கள்' காரில் ஏற்றிச்சென்று விடுகின்றனர் கொந்தளிப்பை சில சமாதான விரும்பிகள் சமாளிக்க பார்க்கின்றனர். இருந்தாலும் நிலைமை இன்னும் மோசமாகிவிடும் என்று நினைத்த சிலர் தப்பினால் போதும் என்று ஹோட்டலை விட்டு வெளியேறினர்.

மிஞ்சியவர்களின் மனைவிமார்கள் தங்களின் கணவர்களை அடக்கமுடியாது அழுது

(13 ஆம் பக்கம் பார்க்க)

# என்னைச் சிஷ்யனாக ஏற்றுக்கொள்

5

எஸ். ஆர். சுந்தரம்



மாதர்சங்கத்தலைவி சென்று சிறிது நேரத்தில் மோட்டார் சயிக்கிளில் வந்த ஒருவர் "தரகர் சின்னத்தம்பியைப் பார்க்க வேண்டும்" என்றார். வீட்டு முன்புறத்தில் இருந்த ரத்தினம் "வாருங்கள்" என அவரை அழைத்தான்.

வந்தவர் ஆங்கில உடை தரித்திருந்தார். நன்றாகக் குடித்திருந்தார். முழு வெறியிலும் மோட்டார் சயிக்கிள் ஓடவும் நிதானமாக நடக்கவும் அவரால் முடிந்தது ஆச்சரியம் தான்.

"ஐயா வெளியில் போயிருக்கிறார். நீங்கள் வந்த அலுவலைச் சொன்னால் அவருக்குத் தெரிவிக்கலாம்" என்றான் ரத்தினம்.

அங்கிருந்த கதிரை யொன்றில் ஆறுதலாக அமர்ந்து கொண்ட அவர் திருமணம் பற்றிய சில விவரங்களைத் தருவதாகவும் தரகர் சின்னத்தம்பியிடம் கொடுக்கும்படியும் கேட்டுக்கொண்டார்

ரத்தினம் விவரங்களை எழுத ஆரம்பித்தார். அந்த நேரத்தில் வசந்தியும் அங்கு வந்தாள்.

"மணமகன் பொறியியலாளன் குறிப்பு, இருக்கிறது. வயது நாற்பத்தைந்து. தாரமிறந்தவர் இவற்றைக் குறித்துக் கொள். வேறு விவரம் தேவையானால் கேள்" என்றார் அவர்.

அந்தப் பொறியியலாளர் நீங்கள்தானா? என்றான் ரத்தினம். பொறியியலாளர் வெறியில் இருந்தபடியால் உரத்த சத்தத்தில் "ஆம் நானே தான்" என்றார்.

வசந்தி மெதுவாக ரத்தினத்தின் காதில் இவர் பொறியியலாளரில்லை; வெறியியலாளர் என்றாள். வசந்தியின் நகைச்சுவைக்கு தான் சிரித்தால் பொறியியலாளருக்குக் கோபம்வரும் என்று அஞ்சி ரத்தினம் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

ரத்தினம் பொறியியலாளர் பற்றிய விவரங்களைச் சேர்க்கத் தொடங்கினான். தாரமிழந்தவரானால் உங்களுக்குக் குழந்தை இருக்கிறதா? இல்லை எவ்வளவு காலம் முதல் மனைவியுடன் வாழ்ந்தீர்கள்? ஒரு வருடம் அது காதல் திருமணமா பேசிச் செய்த திருமணமா? இதெல்லாம்எதுக்கு? முழு விவரங்களையும் தெரிந்து கொண்டால் எங்கள் தொழிலுக்கு வசதியாக இருக்குமென்றான் ரத்தினம்"சரிசொல்லுகிறேன்" பேச்சுத் திருமணமே" என்றார் பொறியியலாளர். "சீதனம் வாங்கினீர்களா?" "ஐந்துலட்சம் தருவதாகப் பேசி இரண்டு லட்சம் தந்துவிட்டு ஏமாற்றிவிட்டார்கள்". "உங்கள் மனைவிஎன்ன நோயால் இறந்தாள்?". அவள் நோயால்இறக்கவில்லை; சமைக்கும் போது குக்கர் வெடித்து இறந்தாள். "சீதனம் பாக்கி உள்ளவர்களைக் குக்கர்கள் கண்டு பிடித்து விடுகின்றன. அவர்கள் சமைக்கும் போது குக்கர்கள் வெடித்து அவர்களைக் கொன்று விடுகின்றன" என்று மெல்ல வசந்தியின் காதைக் கடித்தான் ரத்தினம்.

பின்னர் பொறியியலாளரைப் பார்த்து "இனியும் சீதனம் வாங்கப்போறீர்களா?" என்று கேட்டான். "இனிச் சீதனமே வாங்குவதில்லை. அது பாவம்" என்றார் பொறியியலாளர். "அப்படியானால் இனிக் குக்கர் வெடிக்காது என்று வசந்தியின் காதை மீண்டும் கடித்தான் ரத்தினம். பொறியியலாளரைப்பார்த்து "எத்தனை வயது மணமகள் தேவை" என்று கேட்டான். முப்பதுக்கும் நாற்பதுக்கும் இடைப்பட்ட வயதினளாக இருக்கட்டும் என்றார் பொறியியலாளர். "நீங்கள் சீதனம் வாங்குவதைத்தவிர்த்துக் கொண்டது போல இன்னும் ஒன்றைத் தவிர்த்துக் கொண்டால் எங்கள் தொழிலுக்கு உதவியாக இருக்கும்" என்றான் ரத்தினம். "என்ன அது? சொல்லு?" என்றார் பொறியியலாளர், "நீங்கள் பொறியியலாளர் நல்ல சம்பளம் வாங்குகிறீர்கள் தாரமிழந்தது உங்கள் தகுதியைக் குறைக்காது ஆனால் குடிப்பவருக்குப் பெண் தரப் பெற்றார்கள் விரும்பமாட்டார்களே". "நான் முன்பு குடித்ததில்லை. மனைவி இறந்த துக்கத்தில் குடிக்கத்தொடங்கிவிட்டேன். இனித் திருமணம் நடந்துவிட்டால் திருமணம் நடந்தமகிழ்ச்சியில் குடிக்காமல் விட்டுவிடுவேன்". "அப்படியானால் நாங்கள் திருமணம் பேசும் போது மணமகன் பொறியலாளர் முதல் மனைவி இறந்த துக்கத்தில் குடிக்கிறார். திருமணமானதும் குடியை விட்டு விடுவார் என்று சொல்லலாமா?" "என்ன நீ அநுபவம் இல்லாதவனாய் இருக்கிறாய். அப்படிச் சொல்லக்கூடாது" என்றார் பொறியியலாளர். "அப்படியானால் மணமகன் பொறியியலாளர்.அவர் குடிப்பதே இல்லை என்று சொல்லலாமா?" என்றான் ரத்தினம். "நீ குடியைப் பற்றியே பேச வேண்டாம்" என்றார் பொறியியலாளர். "அப்படியானால் மணமகன் பொறியியலாளர். குடியைப்பற்றி எதுவுமே பேச வேண்டாம் என்று சொல்லி இருக்கிறார் என்று சொல்லலாமா?" என்று கேட்டான் ரத்தினம். வசந்தி சிரிப்பை அடக்கமுடியாமற் 'களுக்' கென்று சிரித்து விட்டாள். பொறியியலாளருக்குக் கோபமே வந்து விட்டது. "ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு திருமணத்தைச் செய் என்பார்கள். நீ இந்தக் குடி ஒன்றை வைத்துக் கொண்டு என்னை ஆயிரம் கேள்வி கேட்கிறாயே" என்றார். வசந்தி குறுக்கிட்டு "ஐயா இவர் தரகர் தொழிலுக்குப் புதிசு. நீங்கள் திருமணத்துக்குப் புதுசல்ல. இவருடைய பேச்சை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். அப்பா தங்களுக்கு நல்ல மணப் பெண் தேடித் தருவார்" என்றாள்.

வசந்தியின் பேச்சுப் பொறியியலாளருக்குப் பிடித்திருந்தது. "சரி அம்மா நான் வருகிறேன்" என்று கூறிப்புறப்பட்டார். பொறியியலாளர் போனதும் வசந்தி ரத்தினத்தைப்பார்த்து "நீங்கள் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களைக் கேள்வி கேட்பது போல கல்லூரியில் மாணவர்களைக் கேள்வி கேட்பது போலத் திருமணவிடயமாக இங்கே வருபவர்களை எல்லாம் கேள்வி கேட்கக்கூடாது" என்றாள் "கேட்டால்" என்றான் ரத்தினம். "கேட்டால் வருகிறவர்களின் தொகை குறையும், அதனால் வருமானம் குறையும், அப்பாவின் சிஷ்யனாக இருக்கும் நீங்கள் தரகுத் தொழிலை முழுமையாகக் கற்காமலே வீடு திரும்பநேரிடும்". "என்னை மன்னித்துக் கொள் வசந்தி இனிமேல் இப்படி அதிகம் கேள்வி கேட்கமாட்டேன்".

"அப்படியென்றால் கொஞ்சமாகக் கேட்பீர்களாக்கும் அப்பாவின் உத்தம சிஷ்யனாக இருந்து கொள்ளுங்கள்" என்றாள் வசந்தி, "வசந்தி ஒரு அபிப்பிராயம்சொல்லலாமா?" "தாராளமாகச் சொல்லுங்கள்" "மாதர்சங்கத் தலைவிக்கும் பொறியலாளருக்கும் திருமணம் செய்து வைத்தால் என்ன?" 'சமூக சீர்திருத்தம் செய்யும் மாதர் சங்கத் தலைவி ஒரு குடிகாரனை மணப்பதா? அதுமட்டுமல்ல தலைவியின் கனவில் வந்த அவளது அப்பா நீ ஒரு குடிகாரனைத் தான் திருமணம் செய் என்று அவளது கனவில் சொல்லவில்லையே" அவளது அப்பா கனவில் சொன்னலட்சணங்களை உடை ஒருவனை அவளுக்குத் திருமணம் செய்து வைப்பதுதான் தரகுத் தொழிலுக்கு லட்சணம்" என்றாள் வசந்தி. வசந்தி நான் நகைச்சுவைக்காக இதனைச் சென்னேன். குருவுக்கு அடங்கிய சிஷ்யனாகவே நான் இருந்து தொலைகிறேன் தொழிலில் தேர்ச்சி பெறுகிறேன்' என்றான் ரத்தினம். அப்போது திடீரென்று ஒரு கார்வந்து வீட்டின் முன் நின்றது. (வளரும்)

# மக்கள் வழக்கில் மருத்துவப் பழமொழிகள்

டாக்டர்
வீ. ரி. இளங்கோவன்

மக்கள் வழக்கிலுள்ள பழமொழிகள் பல தொகுக்கப்பட்டு நூல்களாகவும் வெளிவந்துள்ளன. மருத்துவ அறிவுரை வழங்கும் பழமொழிகள் பலவும் வழக்கிலுள்ளன. அவற்றையும் நம்மக்கள் அறிந்து பயன்பெற வேண்டும். இந்தப் பழமொழிகள் பல மருந்தாகப் பயன்படும் மூலிகைகளின் குணத்தையும், அம்மூலிகைகளைப் பரம்பரையாகக் கையாண்டு பெற்ற அநுபவப் பயன்களையுப் கூறுகின்றன.

முதலுதவிச் சிகிச்சை போன்று நமக்கு அயலிலுள்ள மூலிகைகளின் உதவிகொண்டு செய்யும் சிகிச்சையைச் சொல்லும் மருத்துவப் பழமொழிகள் பல வழக்கிலுள்ளன. மூலிகைகள் பலவும் சித்தர்களாலும், வைத்திய நூலாசிரியர்களாலும் பரிபாஷை முறையில், குழுக் குறிகளால் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் மருத்துவப் பழமொழிகள் மக்கள் நாவில் அன்றாடம் புரண்டு பழக்கப்பட்டனவாகவேஆகிவிட்டன. அவற்றை மக்கள் இலகுவில் புரிந்துகொள்ள முடியும். எனவே வழக்கிலுள்ள சில மருத்துவப் பழமொழிகளை இங்கே பார்க்கலாம்.

**சிகிச்சை சொல்வன**

* 'அறணைக்கடியை நுஞ் சிறுகுறிஞ்சான்' ஆந்

அறணை கடித்தால், சிறு குறிஞ்சான் என்னும் இலையை அரைத்து, அக்கடிவாயிற் பூசி, உள்ளுக்கும் சிறிது குடிக்கக் கொடுக்க விஷம் நீங்கும்.

* அழற்பித்த மாற்றும் பழத்திலநதை.

இலந்தைம் பழங்களைத் தின்னுபவரின் அழற்பித்தம் தணியும்.

* அரவந் தீண்டிடில் அழிஞ்சிவேர்ப் பட்டையிடு.

பாம்பு கடித்தவருக்கு அழிஞ்சிவேர்ப் பட்டையைக் காடிவார்த்தரைத்து, அக்காடியில் கலக்கிக் கொடுக்க விஷம் நீங்கும்.

* ஆலும் வேலும் பல்லுக் குறுதி.

ஆலங்குச்சியும், வேலங்குச்சியும் பல்லுத் தீட்டச் சிறந்தன, அவை பற்களுக்குப் பிரகாசத்தையும், முரசு, ஈறுகளுக்கு உறுதியையும் கொடுக்க வல்லன.

* இலந்தைக் கொழுந்திலேகுங் கண்ணெரி,

இலந்தை மரக் கொழுந்தினை அரைத்துப் பசுப்பாலிற் கலந்து தலையில் வைத்து முழுகி வந்தால் கண்ணெரிச்சல் நீங்கும்.

* உத்தாமணிப் பாலொழிக்கும் புண்ணொடு சிரங்கு

புண், சிரங்கு, கை கால் வீக்கம் முதலியவைகளின் மேல் உத்தாமணிப் பாலைப் பூசிவரின் அவை குணமாகும்.

* ஊதாரிப் பிள்ளைக்கு ஒமந்தான் கதி.

உடற் கேடுற்ற பிள்ளைக்கு ஒமம் கொடுத்து வரின் உடல் நலம்பெற்று வாழும்

* எந்த வீக்கத்திற்கும் எருக்கின் பாலடி

எருக்கின் பாலை வீக்கத்தின் மேலும், பக்கச்சூலை, சுளுக்கு, தேகம்நாக்காடு ஏற்பட்ட இடங்களிலும் தடவிவரச் சுகங் காணும்.

* ஏந்திழைக் கிருள்ளியேற்ற முலைப்பாலே

பால் குறைவாகச் சுரக்கும் பெண்களுக்கு, மூன்று கழஞ்சு உள்ளியை உடைத்து தோல்நீக்கி வறுத்து அதனுடன் பனங்கட்டி சேர்த்துச் சாப்பிடக் கொடுத்துவரப் பால் அதிகம் சுரக்கும்.

* ஓரிதழ்த் தாமரை உண்ணப் பெலனுண்டாம்.

ஓரிதழ்த் தாமரைப் பூவை காலையிற் பிடுங்கி உண்டுவர ஆண்மை பெருகும். பெலனுண்டாகும்.

* கிராணிக் கழிச்சற்கு இரு மாதுளம்பிஞ்சு.

கிராணிக்கழிச்சலுக்கு மாதுளம்பிஞ்சைச் சுட்டரைத்து, தேனில் கலந்து உண்ணக் குணமாகும்.

* கீரைப்பூச்சிக்கு இரு மாமுருங்கைச் சாறு.

முருங்கை இலைச்சாற்றை உப்புடன் சேர்த்துக் குடிக்கக் கொடுத்தால் கீரைப்பூச்சிகள் மலத்துடன் வெளியாகும்.

* காமாலைச் சோகைக்குக் கையாண் சாறேற்றிடு.

கையாந்தகரை இலையோடு (கரிசலாங்கண்ணி) சிறிது மிளகு, உள்ளி வைத்தரைத்து எலுமிச்சம்பழப் பிரமாணம் காலையில் கொடுத்து வரக் கர்மாலை, சோகை, பாண்டு என்பன குணமாகும்,

* கோழையிளக்குங் குப்பைமேனிச்சாறு.

குப்பைமேனிச் சாற்றைச் சிறுவர்களுக்கு 15 துளிகள் வீதம் காலையில் கொடுத்துவர கபலம் வெளியாகும்

* சன்னிக்கு வன்னி தாக்குங் கஸ்தூரி

சன்னி ஏற்பட்டபோது கஸ்தூரி கொடுப்பதால் பலன் உண்டு.

* சீரகம் தின்னச் சீரணம் யாவும்.

அசீரணம் ஏற்பட்டால் சீரகம் கொஞ்சம் சாப்பிடச் சீரணமாகும்.

* திப்பிலி தின்று திடமானால் அப்பாத்தை

பிரசவித்த பெண்கள் திப்பிலி சேர்த்துண்ணுவதால் திடம்பெறலாம்

* தூதுவளையாற் சொல்வதெல்லாம் அறும்

தூதுவளையின் இலை, பூ, காய், வேர் யாவும் உடல் நலத்திற்கு உதவுவன; வியாதிகளைப் போக்கும் தன்மையுள்ளன.

* நிலப்பனை தன்னை நெய்யிலுண்ணின் நண்ணிடுங் கர்ப்பம்

நிலப்பனைக் கிழங்கைச் சூரணம் செய்து சிறிதளவு எடுத்து நெய்யில் நாற்பது நாள்கள் உண்டு வந்தால் உடல் உஷ்ணம் தணிந்து கர்ப்பம் உண்டாக உதவும்

* நெல்லியின் பேரை அல்லினிற் சொல்லாதே

நெல்லிக் கனியை இரவிற் சொல்லாதே–அதாவது இரவில் உண்ணாதே என்பதாகும்

* பெருங்காயத்தைத் தின்று பெலமானாள் அப்பாத்தை

பிரசவித்த பெண்ணிற்குப் பெருங்காயத்தை உணவிற் சேர்ப்பது நன்மை பயக்கும்

* முருங்கைப் பூவுண்ண நொறுங்கும் மாமேகம்

முருங்கைப் பூவை சமைத்துச் சாப்பிட்டுவர மாமேகம் குணமாகும்

* மேகத்தை நீக்கும் மிகவே பறங்கிச் சக்கை

மேகநோயை நீக்க பறங்கிக் கிழங்கு பெரிதும் பயன்படும்

* பத்துமிளகிருக்க பகைவன் வீடுண்ணலாம்

மிளகு நஞ்சை முறிக்கும் தன்மையுடையது.

**பொதுவான அறிவுரை:**

* ஊழி நேரிட்டாலுருக்கினுஞ் சத்தை

வாந்திபேதி நோயானது உடம்பிலுள்ள சத்தையுருக்கி வெளியேற்றிவிடும். நீரிழப்பு

13ஆம் பக்கம் பார்க்க

## காதல்...

( 8ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கிறுன் மான்களின் காதல் விளையாட்டு கணவனின் நித்திரையைக் குழப்பி விடுமே, என நினைத்து அந்த மான் சோடியைக் கலைக்க நினைக்கிருள். ஆனுல் கலைத்தால் காட்டிலிருந்து வந்த கலைமான் ஓடிவிடும். தான் வளர்க்கும் பெண்மானின் உள்ளம் வேதனையுறும். காதல் இன்பத்தில் திளைத்திருக்கும் மான்களின் இன்பத்திற்கு இடையூருக இருப்பது பாவம், என்றும் நினைக்கிருள்.

இப்படி இரு சிந்தனை ஒட்டத்திலும் தீர்வு காணுது தத்தளித்து மௌனமா இருக்கிருள். முற்றத்திலே மான் தோலில் பரப்பப்பட்டு உலர்ந்து கொண்டிருந்த தினையைக் காட்டுக் கோழியும், இதற்பறவையும் வந்து உண்டு பொறியிலே மாட்டிக் கொள்கின்றன. சந்தனக் கட்டையாலாகிய நெருப்பில் கோழி இறைச்சியையும், இதற் பறவையின் இறைச்சியையும் அரிந்து சுட்டு ஆரல் மீனின் மணமும் சேர தமது சுற்றத்தாரோடு உணவுண்டு மகிழ்வான் அந்த வேடுவன்.

அந்த வேடுவனின் வீட்டிலே நீயும் சென்று தங்கி அந்த விருந்தையுண்டு சென்று தலைவனிடம் பரிசில் பெறுவாயாக என்று பாணனுக்கு உரைக்கின்றுர் புலவர்.

முன்றின் முஞ்ஞையோடு
முசுண்டை பம்பிப்
பந்தர் வேண்டாப் பலாத்
தூங்கு நீழற்
கைம்மான் வேட்டுவன் கனை-
துயின் மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழீஇப்
பிறிதோர்
திர்தொழிற் றனிக்கலை
திளைத்து விளையாட
இன்புறு புணர்நிலை கண்ட
மனையோள்
கணவ னெழுதலு மஞ்சிக்
கலையே
பிணவயிற் றீர்தலு மஞ்சி
யாவதும்
இல்வழங் காமையிற் கல்லென
ஒலித்து
மானதட் பெய்த வுணங்கு-
தினை வல்சி
கானக் கோழியொ டிதல்-
கவர்ந் துண்டென
ஆர நெருப்பி ணர ணறத்
தடிவார்ந் திட்ட முழுவள்
ளூரம்
இரும்பே ரொக்கலொ
டொருங்கினி தருந்தித்
தங்கினை சென்மோ பாண
தங்காது
வேந்து தரு விழுக்கூழ் பரிசி-
லர்க் கென்றும்
அருகா தீயும் வண்மை
உரைசா னெடுந்தகை
யோம்பு மூரே

இந் நிகழ்ச்சி அந்த வேடுவனின் வீட்டிலே தினமும் நடைபெறுகிறது. வேடுவப் பெண்ணின் மனப்பண்பு, நாகரிகம் எத்தனை உயர்ந்த நிலையில் இருந்திருக்கின்றது.

காதற் களிவண்டுகளின் காதல்லீலை கண்ட நள வெண்பாப் பெண்ணின் மனநிலையும் நாகரிகமும் அக்காவியத்தில் கண்டோம். புறநானூற்றுப் பெண்ணை அடுத்துக கண்டோம். பறவைகள், மிருகங்களின் சந்தோஷத்தைக் கூடக் குழப்பக் கூடாது என்ற உயர்ந்த நோக்கம் அந்தப் பெண்களுக்கு இருந்திருக்கிறது. ஒரு காட்டு வேட்டுவப் பெண்ணுக்கே அத்தனை நாகரிகம் இருக்கிறதென்றுல் மற்றையோர் நிலை எப்படி இருக்கும்.

காதற் காட்சி மூலமாக நல்ல நாகரிகத்தைக் காட்டுகின்றனர்; இவ்விரு புலவர்கள்

---

## புதியதோர்...

(12ஆம் பக்கத்தொடர்ச்சி)

வர் கண்ணன், பொருத்தமான இசையமைப்பு, கோபியின் வயலின் கொஞ்சுகிறது. துரை ராஜாவின் லய மேடையிற் காணும் லயத்தோடுஇழைந்து விடுகின்றது.

மொத்தத்தில், 'புதியதொரு வீடு' நமக்கு தருவது புதியதோர் அநுபவம்!

---

## அவர்கள் அப்படித்தான்...

(11-ம்பக்கத்தொடர்ச்சி)

கொண்டு வரவேற்பறைக்குள் வந்து விடுகின்றனர். பயமும், பீதியும், வெட்கமுமாய் அவர்கள் அல்லாடிக்கொண்டிருந்தனர். கண்ணீரை எவ்வளவோ சிரமப்பட்டு அடக்கிக் கொள்ள முயற்சி எடுத்துக் கொண்டிருந்தனர். அவமானத்தால் எல்லோரும் குறுகிப்போய்... நாகரிக போர்வைகள் இப்படி அசிங்கமாகக் கலைந்து போய் விட்டதே என்ற ஆதங்கத்தில்... அவர்கள் பார்க்கப் பரிதாபமாக இருந்தார்கள்... நல்லவேளை இந்த இளைஞனுக்கு கண்கள் இல்லாமல் போய் விட்டது. இருந்திருந்தால் இந்தக் கண்ராவிகளைப் பார்த்து எப்படி எல்லாம் துடித்துப்போயிருப்பான்.

இன்னமும் எவ்வளவு நேரத்திற்கு அவன் பொறுப்பது? யாரோ சொன்ன சொல்லை நம்பி வந்து.. சே... சாதாரண மனிதனை இப்படி அலைக் கழித்து ஏமாற்றினுலும் பரவாயில்லை... ஒரு கண் இல்லாத இளைஞனை... மனதும், உடம்பும் காயப்பட்ட ஒருத்தனை... கூடவே அவன் வயோதிபத் தந்தையை... ஏன் இப்படி இழுத்தடிக்க வேண்டும்?

உதவி செய்கிறேன் என்ற பேரில்... வெறுமனே தம்பட்டம் அடித்துவிட்டு... தங்களின் பெயருக்கும், புகழுக்கும் ஏன் இப்படிப்பட்டவர்களை ஆளாக்க வேண்டும்?

ஏதோ பேச்சோடு பேச்சாக... தன் ஊரைச் சார்ந்தவர் தன்னைப் பெரிய மனிதனுக மதிக்கட்டுமே ... என்ற நினைப்பில்... இவர்களை அழைத்துவிட்டு... பார்த்தும்... இவர்கள் "யாரோ" என்ற ரீதியில் சின்னத் தனமாக நடந்து கொண்ட அந்தத் 'தலைவர்' 'பெரியவர்' அவசர அவசரமாகத் தனது காரைக் கிளப்பிக் கொண்டு போவது தெரிந்தது. இழுபறியால் கசங்கிய வெள்ளை உடையும், கலைந்த தலைமுடியுமாக... கிழிந்து தொங்கிய சால்வையைத் தோளில் போட்டபடி போனது பார்ப்பதற்கு அசிங்கமாக இருந்தது.

ஐயோ... பாவமே ... உடைந்து போகின்ற கோதுகளை நம்பியா நீ உன் கோட்டையைக் கட்ட வந்தாய்...? அகக் கண்கள் இல்லாமல்... பகலிலும், இருட்டினைத் துழாவும் இவர்களை நம்பியா... உன் புறக் கண்களுக்கு ஒளி தேட வந்தாய் இளைஞனே...?

அந்த பரிதாபத்திற்குரிய இளைஞனைப் பார்க்கின்றேன்.

நீ தேடிவந்தும் உதவி செய்யாத இவர்களா எல்லோர்க்கும் தேடித் தேடி உதவி செய்யம் போகின்றுர்கள்? இவர்களுக்கெல்லாம்... ஒரு சங்கம்... ஒரு கூட்டம்... இந்தப் பெரிய மனிதர்கள் எப்பவும் இப்படித்தானு? மனதுக்குள் போட்டுக் குழப்பிய ஆத்திரத்தை வெறுப்போடு விழுங்கிக்கொள்கிறேன்.

அவனருகே போய் மெதுவாக... அவனுக்குப் புரியாத மாதிரி எல்லாவற்றையும் எடுத்துச் சொல்கின்றேன்...

அவனுக்குள் நிச்சயமாக எனனவோ... உடைந்து போயிருக்க வேண்டும்...கண்களின் ஓரத்தில் வேர்த்துப் போகின்றது.

அவனுக்கு இது எவ்வளவு பெரிய ஏமாற்றம்! எதிர்பார்ப்புகள் எல்லாம் ஏமாற்றங்களாகி எப்படியெல்லாம் இவனைப் போட்டு சித்திரவதை செய்யும்... ஒருவேளை... இது ஏமாற்றமாக இல்லையோ... இப்படி எத்தனையோ... ஏமாற்றங்களைப் பார்த்துப் பார்த்துப் பழகிப்போய்... ஏமாறுவதே ஒரு விளையாட்டாகி விட்டதா இவனுக்கு?...இந்த ஏமாற்றமும் என்ன பெரிய பிரமாதம் என்றிருக்குமா இவனுக்கு?...

எனக்குத்தான் பலமாக ஏதோ அடித்துக் கொள்கிறது! எல்லாவித உணர்ச்சிகளையும் சுருட்டி பந்தாக உருட்டி விழுங்கிவிட்டேன். என்பது போல்...உதடுகளை அழுத்தினுன். உணர்ச்சிகளையும் அமர்த்திப் பார்க்கிறுன். ஆனுலும் அவனை மீறி கண்களில் பளபளப்பு எட்டிப் பார்த்தது.

சம்பந்தமில்லாமல்...நான்தான்...எதற்கோ ஏமாந்த மாதிரி இருந்தது.

"அப்பா வரட்டும்...நான் போகின்றேன்..." அவன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே...அவன் தகப்பன் வந்தார்... சூழலைப் பார்த்து நடந்ததை ஊகித்திருப்பார்... கண்களால் நடந்ததைக் கண்டுபிடித்திருப்பார்...

தம்பி வா...மோனைபோவம் ...நல்லா நேரம் போட்டுது... பஸ் பிடிச்சுப் போக இருளப் போகுது...

எல்லாமேஇருளாகிப்போன அவர்களுக்கு இருட்டென்ன வெளிச்சம் என்ன எல்லாம் ஒன்றுதானே...!

என்னிடம் சொல்லிக் கொண்டு அவர்கள் போகின்றுர்கள்...

அவர்கள் புள்ளியாக மறையும் வரை அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்...! பிறகு.

நீண்ட நாட்களாக...ஏதோ இனம்புரியாத சோகத்தில் மனம் கிடந்து தவித்துக் கொண்டிருந்தது... கொஞ்ச நாளாக என்னுல் அந்த இளைஞனை மறக்க முடியாது இருந்தது. அந்தக் கறுப்புக் கண்ணுடியும்...வெள்ளைத் தாடியும்...ஞாபகத்தில் அடிக்கடி வந்து ஏதோ...சொல்லி விட்டு போவதாய்...ஒரு பிரேமை!

---

## தமிழ் நாட்டில்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கி வருகின்றது என்பதற்கு இது நல்ல உதாரணமாக விளங்குகின்றது.

### மதுரையில் கேட்ட தமிழ்

மதுரையில் ஒரு இந்திய நண்பருடன் கதைத்துக் கொண்டிருந்தபோது தங்கம் தியேட்டர் எங்கு இருக்கின்றதுஎனஒருவரைக்கேட்டேன். அவர் ஏன் என்று கேட்டார். சும்மா அறிந்து வைத்திருக்கத்தான் எனப்பதில் சொன்னேன். அவர் சிரி சிரி என்று சிரித்தார், அறிந்து வைத்திருப்பது பிழை சார் புரிந்து வைத்திருக்கின்றது எனப் பேசுங்க என்று ஒரு போடு போட்டார். அத்துடன் நிற்கவில்லை. நீங்க சிலோன் ஆட்கள் எண்டு உங்க பேச்சிலேயே தெரியுது எனமீண்டும் ஒரு போடுபோட்டார்.

### ஆங்கில அறிஞர் பேசுகிருர்!

அமெரிக்கன் மிக்சிக்கன் பல்கலைக்கழகத் தமிழ்த்தத்துவத்துறைத் தலைவர் ஜான் பீல்ட் 1968-ம் ஆண்டில் பேசிய தமிழ்ப்பேச்சு ஒன்று தமிழர்கள் தமிழை வளர்காமல் இருக்கும் நிலையை நினைத்தால் நினைவு வருகின்றது.

அவர் பேசுகிருர்.

"நான் இருபது ஆண்டுகளாக இந்தத் தமிழகத்தில் இருக்கவில்லை. அதனுல் நான் தப்புச் செய்தேன்; மன்னிக்கவும் நான் பத்தாயிரம் மைல் தூரத்தில் இருந்து தமிழ் படிக்க வந்தேன்!!

எனது சொந்தச் செலவிலேயே தமிழ் கேட்கக் கூட்டத்திற்குப்போனேன்! தமிழ்ப் பேச்சே அங்கு கேட்கவில்லை! அவர்கள் எல்லோரும் என்னிடம் ஆங்கிலத்திலேயே பேசினுர்கள். தமிழிலே நான் பேசுவேன் நீங்களும் பேசுங்கள் என்று கேட்டேன். அவர்கட்கு நல்ல தமிழ் பேசவே வரவில்லை.

உங்கள் பாசையில்தான் ஞானம் இருக்கின்றது. வேறு எந்தப் பாசையில் தான் இந்த ஞானம் இருக்கின்றது?

கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்பது பழமொழி!

அதற்கு உள்ளே எவ்வளவு ஞானம் இருக்கின்றது. நான் இந்தத் தேசத்திலே இருந்தால் ஒருநாளைக்கு ஒரு மணித்தியாலமாவது தமிழ் ஞானத்தைப் பெறப்படிப்பேன் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், அருட்பா, திருக்குறள், மாணிக்கவாசகர் கவிதைகளை எலலாம் படித்து விட்டேன் தமிழர்களாக இருந்தும் தமிழை அபிவிருத்தி செய்யாத தமிழர்களை எண்ணி நான் வெட்கமடைகிறேன்.

(ஆதாரம் தினகரன்)

ஜனவரி 10.1968ஆம்! 1 தமிழுக்கு ஆராய்ச்சி தேவைஅத்துடன் அது சிதைவடையாது தடுக்கவும் ஆராய்ச்சிகள் தேவை.

(தொடரும்)

---

## நம்மைச் சுற்றி நடப்பவை

என்னதான் இருந்தாலும் கொழும்பிலுள்ள சைவக் ஹோட்டல்களின் சாப்பாட்டுத்தரம் யாழ்ப்பாணச் சைவக் ஹோட்டல்களைவிட எவ்வளவோ திறம் என்று கூறலாம்.

பருப்புச்சாம்பார் என்னுல் சாம்பாரில் பருப்பைக் காணலாம் அங்கே. இங்குள்ள ஹோட்டல்களில் சாம்பார் என்றுலே வயிற்றைக்குமட்டுகிறது.

அத்தோடு யாழ்ப்பாணத்திலுள்ள சைவக் ஹோட்டல்களில் சாப்பிடச் சென்றுல் அங்குள்ள முதலாளி தொடக்கம் சப்ளை செய்பவர்கள் வரை அலட்சியமாகவே நடந்து கொள்கின்றனர். சாப்பாட்டின் விலையும் அதிகம்.

கொழும்பில் மத்தியானச் சைவச்சாப்பாடு பதின் மூன்று ரூபாவிலிருந்து ஆகக்கூடியது பதினைந்து ரூபா வரை தான் போகிறது. இங்கு ஆகக்கூடியது பதினேழு ரூபா ஐம்பது சதம் வரை போகிறது.

இங்குள்ள எல்லாக் ஹோட்டல்களிலும் ஓர் கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட வேண்டும் இது இப்போது அவசியமுமாகிறது.

எப். சி. ஆர்.


SPOKEN ENGLISH

(தபால் மூலம் கல்வி)

90 நாட்களில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க கற்றுக்கொடுக்கப்படும். மிக மிக புதுமையான உளவியல் அடிப்படையில் அமைந்த பாடத் தொகுப்பினை அடிப்படையாகக் கொண்டது. ஆங்கிலத்தில் London Diploma பெற்ற ஆசிரியரினால் தயாரிக்கப்பட்ட பாடத் தொகுப்பு.

எமது நிறுவனத்தில் இன்றுவரை நூற்றுக் கணக்கானோர் கற்றுத் தேறி நற்சான்றிதழ் பெற்று உள்ளனர்.

எமது நிறுவனம் இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தபால் மூலம் கல்வி நிறுவனமாகும்.

மேலதிக விபரங்கட்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை யொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

BRIGHT TRAINING CENTRE

P.O BOX 162 COLOMBO

09007


---

## மக்கள்...

(5ஆம்பக்கத்தொடர்ச்சி)

ஏற்பட்டு, உடன் மரணத்தையேற்படுத்தும்.

* நைவினையோர்க்கு நாளென்பதில்லை

தீராத நோயாளிகட்கு-கடும் நோயாளிகட்கு மருந்து கொடுக்கவும், உதவவும் நாள், கிழமை, நட்சத்திரம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

* நொந்த உடம்பிற்கு வெந்த அமுதிடு.

நொந்த உடம்புடைய (கடும் நோயளிகளுக்கு) நன்ருக வெந்தசோறு (இலகுவில் சீரணமாகும்) உண்ணக் கொடுக்க வேண்டும்,

* 'நோய் கொண்டால் பார்ப்பாரும் தின்பர் உடும்பு'

விலக்கப்பட்ட பொருளாயினும் அதனை நோய்க்கு மருந்தாக உண்ணலாம்.

* மருந்துகால் மதிமுக்கால்

மருந்து உட்கொள்ளும் போது குறிப்பிட்ட அளவுக் கணக்கோடும், பத்தியப்பாகுபாடுகளை அநுசரித்தும்உண்ண வேண்டும்.

* அளவுக்கு மிஞ்சிநும் அமுதமும் நஞ்சாம்.

அமுதமேயானுலும் (சிறந்த உணவாகிலும்) குறிப்பிட்ட அளவோடு, உடலுக்கு ஏற்ற அளவிற் தான் உண்ண வேண்டும்.

* ஆயிரம் வேரைக்கண்டவன் அரைப்பரிஹாரி

குறைந்தது ஆயிரம்மூலிகைகளைப்பற்றி, அவற்றின் குணங்களை, பயன்பாடுகளைப் பற்றித் தெரிந்துகொண்டவன் பரிஹாரி என்று சொல்லுமளவிற்குத் தகுதி பெறுகிருன்.

## சில மனப்பதிவுகள்...

(12ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஆனால் அவரது முகத்தில் இயல்பாகத் தெரியும். 'பாவம்' போன்ற ஒரு தன்மையும் குழந்தைத் தனமும் மகாகவி படைத்த கண்ணுத்தையுடன் நெருக்கமாய்ப் பொருந்தி வரவில்லை. மகாகவியின் கண்ணுத்தைக்கு நன்ருக ஊர்வம்பு பேசவரும். அவளது நடத்தையில் ஒழுக்கம் இல்லை. குள்ளக் குணங்கள் உண்டு. அதே சமயம் அவள் மயிலியிடம் அந்தக் குடும்பத்திடம் அன்புள்ளவள். அடிப்படையில் நல்லவள்! ஒரு 'சாம்பார்ப்' பாத்திரம் அது. அந்தத்தன்மையை ஹேமாவால் முழுமையாய்க் கொண்டுவர முடியவில்லை. அது ஹேமாவின் பிழை அல்ல. நடிகர் தெரிவில் ஏற்பட்ட பிழை என்றும் கூறலாம். உண்மையில் இந்த நாடகத்தில் நடிப்பதற்குக் கஷ்டமான பாத்திரம் கண்ணுத்தை தான்!

''செய்யுங்கோ நீங்கள்...... உங்கள் செயல்களை......'' என்று கண்ணுத்தை சொல்லுமிடம் ஒரு நடிகைக்குச் சவாலாக அமையும் இடம்.

''உன்னுணைச் சொல் நீ...... ஏதேனும் இன்றுவரை நடந்திருந்தால்...... ஏதோ அவன் செயலால் ஏதும் பிடித்திருந்தால்...... நீதில்லைச் சொல்லுறிம் மருந்து நான் தருவேன்......'' என்று, தன்னைப் போல் மயிலியையும் நினைத்து, ஆனால் மயிலிக்கு உதவும் நோக்கத்துடனேயே அவள் கேட்குமிடம்...... மிகத் தேர்ந்த நடிகருக்கும் கஷ்டமான இடம்!

அந்த இடங்களில் ஹேமா... போதாது! ,'பல்கலைக்கழகத்தரம்' என்று பார்க்கிற போது...... போதாது!

மறைக்காடர் பாத்திரத்தை பாலசுப்பிரமணியம் ஒரு நகைச்சுவைப் பாத்திரமாய் மாற்ற முயன்று தோல்வி கண்டது போல் இருக்கிறது. மறைக்காடர் கூறுகிற ஆழமான கருத்துக்களுக்கும் அன்பு நிறைந்த அவரது செயல்களுக்கும்...... நகைச்சுவைத்தனம் நிறைந்த அந்த நிலையும் பொல்லும் ஒத்துப்போகாதது போல் ஒரு உணர்வு. ஆனால்நிச்சயமாய் பாலசுப்பிரமணியம் ஒரு நல்ல நடிகர். 'சிறுபொழுது அமைதி வேண்டும்' என்று அவர் கண்ணுத்தையைப் பார்க்கிருரே ஒரு பார்வை! அது ஒரு முத்திரை!

ஒற்றைச்சதுர அடியும் ஒழியாமல் தேடல் புரிந்து திரிந்த விமானங்களை அவர் காட்டிய முறையை ரசிக்க முடிந்தது. 'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்?' என்று கூறிய முறையில் ஒரு அழகு மிளிர்ந்தது

எடுத்துரைஞர்களில் மனதில் நிற்பவர் ஸ்ரீ கணேசன்! அவரது ஆட்டங்களும் பாட்டும் மிக இலேசாய்...... நேர்த்தியாய் பிசிறின்றி இருந்தன.

கொழுத்திக் கொண்டிருக்கும் வெயில்...! நாடகம் முடிந்த நேரம் பன்னிரண்டு மணியல்லவா? நாடகம் முடிந்த பிறகு... நடிகர்கள் எல்லாம் மேடையில் அரை வட்ட வடிவில் வந்து வணக்கம் கூறிவிட்டு... அப்படியே நின்று கொண்டிருந்தார்கள்.

பிரமுகர்கள், பெரியவர்கள் மேடையில் ஏறி... நடிகர்களைப் பாராட்டி......

நடிகர்களுக்குத் தங்கமோதிரங்களும், சால்வைகளும், பொன்னுடைகளும் கொடுக்கப்படாவிட்டாலும்...... வெறும் வாய் வாழ்த்தாவது...!

அது நல்ல பழக்கம்!

கட்டாயம் 'மரபு முறை' போலப் பேணப்பட வேண்டியது! அதுவும் முடிய அரங்குக்கு வெளியே வந்தால்......

ஆங்காங்கே... கூட்டம் கூட்டமாய்ச் சிலர்?

என்ன விஷயம் என்று எட்டிப் பார்த்தால், 'நாடக விமர்சனம்' தான் நடந்து கொண்டிருந்தது.

இரண்டு மூன்று குழுக்களில் தலையை ஓட்டிப் பார்த்ததில் சில சங்கதிகளைப் பொறுக்க முடிந்தது.

'தாசீசியஸ்செய்தநெறியாள்கையில் இருந்து அதிக மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை...' என்பது ஒருவரின் கருத்து.

'பரத நாட்டியமும் நாடகமும் கலப்பது இரண்டுக்கும் நல்லதல்ல' என்பது இன்னெருவர் எண்ணம்.

'சக்தி பிறக்குதுவில் நடனங்கள் நாடகத்தோடு இணைந்து போயின. இங்கு அந்தப் பரிசோதனை தோல்வி கண்டு விட்டது' என்று ஒரு குரல்.

'நடனங்கள் அதிகமாய் இடையீடு செய்ததில் நாடகத் தொடர் அறுந்து... அறுந்து... மீண்டது...' என்று ஒரு சிந்தனை.

''நாடகத்தில் எப்போதும் நடிகர்கள் பாடி நடிக்கவேண்டும் பின்னணிப் பாட்டும், மேடை ஆட்டமும்... பரத நாட்டியத்திற்குச் சரி... நாடகத்திற்குச் சரியில்லை...'' என்று ஒரு விமர்சனம்.

''மகாகவியும்... தாசீசியசும் மீனவர் குடும்பங்கள் பலவற்றைத் தேடி அலைந்து, அவர்களோடு வாழ்ந்து...அவர்களின் பாடல்களை ஒலிப்பதிவு செய்து... மிகச் சிரமப்பட்டு... எடுத்த மெட்டுகள் இவை...'' என்ருரு இரைமீட்டல்.

இவை எல்லாவற்றையும் உள் வாங்கிய நிலையில், புதியதொரு வீட்டின் நெறியாள்கைச் சிறப்புகளைச் சிந்திக்க முடிந்தது.

நாடக ஆரம்பத்தில் வரும் மீனவப் பாடலுக்கு, படகு வடிவத்தில் அமையும் நடனம் அந்த அசைவுகள்– மிகுந்த சிந்தனையின் வெளிப்பாடுகளாய்த் தெரிந்தன

பெண்கள் மீன்களைப் பிடித்தலும்– மற்றவருக்கு மாற்றலும்... சிறப்பாய் அமைந்திருந்தன.

''வெடுக்கென்று... மின்னல்...மின்னல்... மின்னல்...'' என்ற பாடலுக்கான அசைவுகள் உச்சம்!

அதிலும்' ஏற்றிச் சுழற்றி எறியும் பெருஞ்சூறை'' எனும் போது மேடையில் வீசும் புயல்... அந்த உணர்வை ஆட்டத்தில் கொணர்ந்த முறை 'ரொப்'!

முதலில் ஒருமுறை கடலில் புயல் வீசுகிறது!

மீண்டும் ஒருமுறை மாயனின் மனதில் புயல் வீசுகிறது! பொருத்தமான அந்த இடத்தில்... மீண்டும் வந்த''வெடுக்கென்று மின்னல்...'' ஆட்டம்... நெறியாள்கையின் சிறப்புக்கு ஒரு இடம்!

மயிலியைக் காணும் ஆர்வத்துடன் வீட்டுக்கு வருகிருன் மாயன். அவள் அவனைக்கண்டு, திகைத்து ''நீங்களா?'' என்று மட்டும் கேட்டுவிட்டு...த் தொட்டிலைப் பார்க்கிருள். மாயன் தொட்டிலைப் பார்த்துவிட்டு ''எவன் குழந்தை?'' என்று கேட்க, எங்கிருந்தோ வரும் மாசிலன் ''என் குழந்தை அண்ணை'' என்கிருன். ஒரு வாழ்வில் ஜீரணிக்க மிகக் கஷ்டமான இடம்! மாசிலன் DR இலும் மயிலி CC யிலும், மாயன் UL இலும் ஒரே நேர்கோட்டில் திகைத்து நிற்பார்களே! அது பார்வையாளனை ஈர்க்கும் மற்ருெரு இடம்!

'மாசிலன் உன்னை மனைவியைப்போல் பார்க்கிருன்...'' என்ற கண்ணுத்தையின் செய்தி... ஊரில் பரவும்முறை நன்ருக இருந்தது. ஊருக்குள் புதிதாக வரும் மாயனுக்கு... சங்கக்கடையும், பள்ளியும், கோயிலும் காட்டப்பட்ட முறை ரசிக்கும்படி இருந்தது.

சிறு நண்டு 'பாடல் 'சிலோ மூவ்மென்ற்' இல் நல்லமுறையில் அமைந்தது.

மறைக்காடர் கண்ணுத்தையை மறைத்துக்கொண்டு நின்ற ஒரு இடம் தவிர–மற்றைய சந்தர்ப்பங்களில் எல்லாம் மேடை நல்லமுறையில் பாவிக்கப்பட்டது.

காட்சியமைப்பு என்று சிந்திக்கும்போது...' கோயில்' அமைக்கப்பட்ட குறியீட்டு முறை போற்றும்படி இருந்தது.

நடன அமைப்பில் பாராட்டுப்பெறுவது திருமண ஏற்பாட்டுக் காட்சிதான்!

மாயன், மாசிலன், மயிலி, கண்ணுத்தை, மறைக்காடர், மன்னவன் ஆகிய பாத்திரங்கள் இயல்பான உடையுடன் இருக்க... எடுத்துரைஞர்களும் ஏனைய மீனவர்களும்... ஆடவேண்டும் என்பதற்காக மட்டும்... அலங்காரமான உடைகளுடன் வருவதில் ஒரு பொருத்தக்குறைவு இருப்பதாய்த் தோன்றியது.

அவர்கள் மீனவர்களுக்கான எளிமையான உடையில் வந்திருந்தால் என்ன?

பரத நாட்டியமும் நாடகமும் ஒட்டாமல் போகின்ற அந்த இடம் உடையிலும் ஒட்டாமல் போகிறதா?

'அரசர்' ஐயாவின் ஒப்பனை அருமை. ஹேமாவை அசல் கிழவியாகவேமாற்றிவிட்டார். இடி மின்னல் ஆட்டக்காரருக்கு முகத்தில் போடும் மின்னல் குறி...' அவர்களின் ஏனைய ஆட்டங்களுக்குப் பொருத்தமற்றுப் போகிறதே? எடுத்துரைஞர்களின் கண்களின் கீழே காணப்பட்ட வெள்ளை வளையங்கள் அலைகளை நினைவுபடுத்தவா? அது பார்வையாளர்களில் எத்தனை பேருக்குப் புரிந்திருக்கும் என்பது...சந்தேகமானது.

கண்ணனின் இசையைக் கேட்டால், சோகப்பாசி பூத்த முகங்களில் கூட புன்னகை அரும்பு கட்டிவிடும். மாயன் தனித்துக் கதைக்கும்போது கொடுக்கப்பட்ட மியூசிக்...... அவரது நடிப்பை மிகவும் தூக்கிவிட்டது என்று சொன்னல் அது மிகையில்லை.

இசை 'செவி' வழி ரசிக்கப்படுவதுதான் என்ருலும்... நாடகம் நடந்துகொண்டிருக்கும்போது... பார்வையாளர்கள் பார்க்கக்கூடிய ஒரு இடத்தில் (தெளிவாக) அவர்கள் அமர்ந்திருந்தால் நன்ருக இருக்கும் என்பதுபோல ஓர் அங்கலாய்ப்பு!

பாடகர் குழு பாடல்களை நன்ருகத்தான் பாடினுர்கள். அவர்கள் கைகளில் 'ஸ்கிரிப்ற்' இல்லாமல்...இன்னும் கொஞ்சம் ஒழுங்காக நின்று...பாடியிருந்தால் நன்ருய் இருந்திருக்குமோ இல்லையோ?

பாடகர் குழுவுக்கும், எடுத்துரைஞர்களுக்கும் வழங்கப்பட்ட இடம் போதுமானதாய் இல்லை. அவர்கள் இன்னும் கொஞ்சம் வசதியாய் நெருக்குப்படாமல், ஒழுங்காய் நின்று பாட...ஏதும் மாற்ருெழுங்கு செய்யலாம்.

முருகையன் அவர்கள் சொல்வது போல், 'நாடகம் ஓர் அரங்கக் கலை என்ற முறையிலே அதனை நிகழ்த்திக் காட்டும் ஒவ்வொரு மேடையேற்றமும் சுவைப்புக்கும் நயப்புக்கும் விமரிசனத்துக்கும் உரிய கலைப்படையல்களே.

புதியதொரு வீடும் இன்னும் பலமுறை, பல இடங்களில் மேடையேற்றப்படும். அவை ஒவ்வொன்றுமே வித்தியாசமாயும் இருக்கும்.

நாடகம் ஒரு கூட்டுக்கலை. நெறியாளன் நாடகத்தின் சர்வாதிகாரி என்று கூறப்படுகிற போதிலும், மற்றவர்கள் எல்லாம் ஒத்துழைக்கா விட்டால் நெறியாளன் ஒன்றும் செய்ய முடியாது.

'மண்சுமந்த மேனியரை' எழுதி யாழ்ப்பாணத்தையே ஒரு கலக்குக் கலக்கியவர் குழந்தை ம. சண்முகலிங்கம்.

பேராசிரியர் வித்தியானந்தன் செப்பனிட்டு மேடையேற்றிய 'கர்ணன் போர்' போன்ற கூத்துக்களில் தோன்றிய போதே...தனது எதிர்காலம் பிரகாசமாய் இருக்கும் என்று ஊகிக்கச் செய்தார் கலாநிதி சி. மௌனகுரு.

இவர்கள் இருவரது கூட்டு நெறியாள்கை – புதியதொரு வீட்டுக்குப் புது மெருகைக் கொடுத்திருக்கிறது என்பதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது.

தூங்கிப்போய்க் கிடக்கும் அறையில், குபீரென்று ஒரு மல்லிகைப்பூமணம் நுழைந்து அறையையே தூக்கி விடுமே! அது போலச் சோர்ந்து போய்க் கிடந்த எமது மனங்களில் புதியதொரு வீடு...ஒரு வானவில்லாய்...ஒளி நிறைந்திருக்கிறது. மொத்தத்தில் இது ஒரு வெற்றிப் படையல்-யாழ்ப்பாணத்தைப்பொறுத்தவரை!

ஆனால் உலக நாடகங்களுடன் ஒப்பிடுகையில் – அதிகம் ஏன் சிங்கள நாடகங்கள் பலவற்றுடன் ஒப்பிடுகையில்கூட– நாங்கள் இன்னும 'தவழ் நிலையிலே யே' இருக்கிருேம் என்பதும் இந்த நேரத்தில் மனங்கொள்ளத்தக்கது!

---

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

## 17-09-1989 — 23-09-1989

**மேடம்** பெண்களால் பகை, வெளியூர் போனவர் வருகை, புதுத்தொழில், வாகன மாற்றம்,இராஜபயம், வாக்குக் கலகம், கடற்ருெழில், வணிகர்கள், வைத்தியர்கள் சமபலன், மனைபூமிச் சேர்க்கை, திடீர் பிரயாணம், தேடியவர் வருகை.

**இடபம்** வீண் விரயம், வாகன மாற்றம், பெரியோருதவி, புகழ் தேடி வரும், உத்தியோக உயர்வு, இளைய சகோதரவழி நன்மை, பிரிந்த காதலர் ஒன்று சேருவர், வணிகர்கள், கடற்ருெழில் செய்வோர் இலாபம்.

**மிதுனம்** உயர்பதவி, பெரியோராசி, தூரதேச பிரயாணம், மாமன்வழியுதவி, வாக்கு வசிகரம். விவாக நிச்சயம், உத்தமர் உறவு, இராஜ மரியாதை, கலைஞர்கள், கடற்ருெழில், வணிகத் தொழில் செய்வோர் இலாபம்.

**கடகம்** விவாக நிச்சயம், புகழ் தேடிவரும், இருவருமானம், இலக்சுமி கடாச்சம், பணவரவு, மாதாவழியுதவி, தூரதேசம் போனவர்கள் வருகை,மனையலங்காரம், கலைஞர்கள் கௌரவிக்கப்படல்.

**சிங்கம்** பெரியோர் பகை, தொழில் மாற்றம், வாகன சுகம், வாணிகர்கள், கடல் தொழில் செய்வோர் இலாபம், வெளியூர் போனவர்கள் வருகை, இளைய சகோதர வழியுதவி, மாமன்வழி சுகம்.

**கன்னி** உயர்பதவி, கல்வியால் புகழ், காதலர் மகிழ்ச்சி, இராஜ மரியாதை, இனசன வருகை விருந்துபசாரம், எண்ணியது நடக்கும், கலைஞர்கள் சோதிடர் வைத்தியம் பார்ப்போர் இலாபம் புதுத்தொழில்.

**துலாம்** வாகன சுகம்,உயர்பதவி, வாக்குவசிகரம், பெரியோராசி, இரு தொழில், எண்ணியது நடக்கும், வெளியூர்ப் பிரயாணம், தூரத்துச் செய்தியால் நன்மை, வணிகர்கள், கடல்தொழில், இயந்திர தொழில் மூலம் சமபலன்.

**விருச்சிகம்** பெரியோராசி, விவாக நிச்சயம், உயர்பதவி, உத்தமர்கள் வருகை, புகழ் தேடி வரும், புதுத் தொழில், திடீர் பிரயாணம், இளைய சகோதர வழியில் நன்மை, பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள், இராஜ மரியாதை, பணவரவு.

**தனுசு** பொருள் நஷ்டம் இனசன பகை, இராஜ பயம், உடல் ரோகம்,பெரியோராசி, தேடியவர் வருகை, புதுத் தொழில், வாகனசுகம், வணிகர்கள், கடல் தொழில் செய்வோர் இலாபம், தூரதேசம் போனவர்கள் வருகை.

**மகரம்** வாக்கு வசிகரம், இருதொழில்,புதுமனைச் சேர்க்கை, பணவரவு, புத்திர சுகம், உயர்பதவி மூலம் இடமாற்றம், பிரிந்த காதலர் ஒன்று சேருதல், கலைஞர்கள் வைத்தியர்கள் கௌரவிக்கப்படல்.

**கும்பம்** உயர் பதவி, வாகன சுகம், வாக்கு வல்லமை, பணப்புழக்கம், பெரியோராசி, நினைத்த காதல் ஜெயம், வெளியூர் போனவர் வருகை, பொன்னுபரண சேர்க்கை, புகழ்தேடி வரும்.

**மீனம்** பணப்புழக்கம்,பெரியோராசி, புகழ் தேடிவரும், வாகன சுகம், வணிகர்கள் கடல் தொழில் இயந்திரத் தொழில் செய்வோர் அக மகிழ்ச்சி, புதுத் தொழில், வெளிநாடு போனவர்கள் வருகை, லக்சுமி கடாட்சம்

---


## SPOKEN ENGLISH

90 நாட்களில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க நவீன உளவியல் ரீதியில் கற்றுக் கொடுக்கப்படும். எம்மிடம் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப்பயிற்சியில் தபால் மூலம் படித்து பயனடைந்துள்ளனர். ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பவர் எவ்வாறு இலகுவில் ஆங்கிலம் அதனை கற்றுக் கொள்ளலாம் எனும் துறையில் London Diploma பெற்றவரின் அனுசரணையுடனே பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும்.

மேலதிக விபரங்கட்கு முத்திரை யொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**

P. O. BOX 162 COLOMBO.

09041

### யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் விடுத்துள்ள அறிக்கை

# பல்கலைக்கழக காணியில் குடியிருப்பவர்கள் வெளியேறி அபிவிருத்திக்கு ஒத்துழைக்கவும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் அமைந்துள்ள வளவுக்குத் தெற்கேயுள்ள 10 ஏக்கர் பரப்புள்ள நிலம், பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமானது. கொக்குவில் மயான வீதியை ஓர் எல்லையாக உடைய இக் காணியில் ஏறத்தாழ 80 குடும்பத்தினர் வசிப்பிடங்களை அமைத்துக் கொண்டு குடியமர்ந்துள்ளனர். 1987 மே மாதம் தொடக்கம் சட்டவிரோதமான இந்தக் குடியிருப்புகள் மேற்படி காணியில் இருந்துவருவதாலும், இவை நாளுக்குநாள் அதிகரிப்பதாலும், பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி பெரிதும் தடைப்பட நேர்ந்துள்ளது.

மேற்படி காணியில், முக்கியமாக அபிவிருத்தித் திட்டங்கள் பல இடம்பெறவுள்ளன. இத்திட்டத்தின்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வேண்டிய போதனு வைத்திய சாலையும் உடற்கல்வி/விளையாட்டுத் தொகுதியும் பாரிய அளவிலே நிறுவப்படவுள்ளன நமது பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கும் மருத்துவக் கல்வியின் முன்னேற்றத்துக்கும் சகல வசதிகளும் உபகரண நிறைவும் கொண்ட போதனு வைத்திய சாலையொன்று மிகமிக அவசியமாகும்.

விளையாட்டிடத் தொகுதியொன்று நவீன பல்கலைக்கழகத்துக்கு உயிர்நிலை போன்றதாகும். திட்டமிடப்பட்டுள்ள விளையாட்டிடத் தொகுதியில் உதைபந்து, ஹொக்கி, கிரிக்கெட், வலைப்பந்து, கூடைப்பந்து, ரெனிஸ் முதலான விளையாட்டுக்குரியவசதிகளும், நீச்சற் குளமும், அமையவுள்ளன. அத்துடன் மெய்வன்மைப் பயிற்சிகளும், தடகள விளையாட்டுப் போட்டிகளும் நடத்துவதற்குரிய பரிபூரணமான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளும் தேவையும்உண்டு. பல்கலைக்கழகத் தரத்துக்கு இயைந்த விதத்திலே பயிலியன் ஒன்று அமைக்கும் திட்டமும் உண்டு இவை யாவற்றையும் நிறைவேற்றுவதற்கு, காணி நிலப்பரப்பு வசதி முதலாவது முன் தேவையாக உள்ளது. பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான காணியில் வெளியார் குடியிருப்புகள் வலிந்து மேற்கொள்ளப்பட்டிருப்பது பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியையும் நமது சமூகத்தின் முன்னேற்றத்தையும் தடுத்து நிறுத்துவதாயுள்ளது

போதனு வைத்திய சாலை, விளையாட்டிடத் தொகுதி என்பவை தவிர, வேறும் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். எடுத்துக்காட்டாக, மாணவர் தங்கியிருந்து படிப்பதற்கு ஏற்ற விடுதி வசதிகளைத் திருப்திகரமான வகையில் நாம் இன்னும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. நமது மாணவர்களுக்கு ஒரு கணிசமான தொகையினர் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவராவர். இவர்களுக்கு வதிவிட வசதி மிகவும் இன்றியமையாதது. இவற்றுக்கும், இவை போன்ற வேறு பல திட்டங்களுக்கும் காணி நிலங்கள் தேவைப்படுகின்றன. இத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டுத் தகுந்த உதவியை வழங்குவதற்கு, நல்லெண்ணம் படைத்த உபகாரிகள் முன்வரல் வேண்டும். அவ்வாறு முன்வந்தாலொழிய நமது நிறுவனத்தினை மேம்பாடடையச் செய்வது மிகவும் சிரமமாகும்.

நமது சமூகத்தின் உயர் கல்வியை மேம்படுத்தும் சீரிய பணியில் முதற்கட்டமாக, பல்கலைக்கழகக் காணியிற் குடியமர்ந்துள்ள 80 குடும்பங்களையும் அங்கிருந்து வேறிடத்திற்கு மாற்றுவதற்குரிய வழிவகைகளைக் காணுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட சகலருக்கும் உரிய கடமைப் பொறுப்பாக இது உள்ளது ஆகையால், இந்தச் சீரிய பணியில் ஒத்துழைக்குமாறு யாவரையும் வேண்டிக்கொள்வதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் விடுத்துள்ள அறிக்கையிற் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 55 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

# வேலையற்ற இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்புகள்

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த இளைஞர் விவகார அமைச்சினுல் ஐம்பத்தைந்து மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் பதினெராயிரம் இளைஞர்கள் சுயதொழில்வேலைவாய்ப்பைப் பெறுவர்.

இத்திட்டத்தின் கீழ் எழுநூறு ரூபாவிற்குக் குறைந்த வருமானம் உடையவேலைவாய்புகள் எதுவுமற்ற குடும்பத்தில் ஒருவருக்கு ஆகக் கூடுதலாக ஐயாயிரம் ரூபா கடனுக வழங்கப்படும் இக்கடன் குறைந்த வட்டிவீதம் உடையதாகவும், நீண்டகாலத்தவணை அடிப்படையில் செலுத்தக் கூடியதாகவும் இருக்கும்

உத்தேசிக்கப்பட்ட சுயதொழில் முயற்சித் திட்டத்தினைத் தயாரித்து அனுப்பிவைக்கப்படும் பட்சத்தில அது பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படின் இக்கடன் வழங்கதபடும். இத்திட்டத்தின் எத்தகைய சுயதொழில் முயற்சியையும் ஆரம்பிக்கலாம். இந்தக் கடனைப் பெறுவதற்கு தனியாகவோ அல்லது பலர் சேர்ந்த குழுவாகவோ விண்ணப்பிக்கலாம்.

### வடமராட்சிக் கோட்டப் பிரிவு

# பாடசாலைகள் பற்றிய பூரண விபரங்கள் திரட்டப்படுகின்றன

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கோட்டக் கல்விப் பிரிவுக்குட்பட்ட எட்டு கொத்தணி அமைப்புப் பாடசாலைகளினதும் பாடசாலைச் சூழல் பெளதீக வசதிகள் ஆளணி நிலைமைகள் பற்றிய விபரங்களைத்திரட்டுவதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி மேற்கொண்டுள்ளார்.

இதற்கிணங்க வடமராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட உடுத்துறை, நாகர்கோவில்,பருத்தித்துறை புலோலி, கரவெட்டி, நெல்லியடி,உடுப்பிட்டி,வல்வெட்டித்துறை ஆகிய எட்டு கொத்தணிகளுக்கும் கோட்டக் கல்வி அதிகாரி, தனித்தனியே கூட்டங்களை நடாத்தி இவ் விபரங்களைத் திரட்டி வருகின்றார்.

ஒவ்வொரு பாடசாலைகளின் விபரங்களையும் சரியாகத் திரட்டுவதற்கென அவ்வப் பாடசாலை அதிபர்களுக்குப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. அப்படிவங்களை ஒவ்வொரு அதிபர்களும் பூரணப்படுத்தி கொத்தணி அதிபர்களுடாக கோட்டக்கல்வி அதிகாரியிடம் சமர்ப்பித்து வருகின்றனர்.

## திருத்தவேலை பாதிப்பு

(சுன்னுகம்)

புகையிரதப் பாதைப் புனரமைப்புக்குத் தேவையான சிலிப்பர் கட்டைகள் அனுப்பி வைக்கப்படாததால் புனரமைப்பு வேலைகள் நின்றுவிட்டன, கடந்த மாதம் இருபதாம் திகதி வரையில் காங்கேசன்துறை வரை ரயில் சேவை நடைபெறுமென முன்னர் எதிர்பார்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 'விருட்சம்' வெளியீட்டு விழா

யாழ் பல்கலைக்கழக வணிக மாணவ மன்றத்தின் 'விருட்சம்' மலர் வெளியீட்டுவிழா நாளை 18-ம் திகதி திங்களன்று பிற்பகல் மூன்று மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது

மலரின் முதல் பிரதியை யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் அ துரைராஜா அவர்கள் பெற்றுக்கொள்வார்.

## சகாய அன்னை உற்சவம்

(பருத்தித்துறை)

துன்னுலை வடக்கு சதா சகாய அன்னை ஆலய வருடாந்த திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. கடந்த 13-ம் திகதி இவ்வாலயத்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது இன்று காலை திருநாள் திருப்பலியும் திருச்சுரூபபவனியும் நடைபெறவுள்ளது.

## வீதி திருத்த நிதி ஒதுக்கீடு

(முள்ளியான்)

வடமராட்சி கிழக்குப்பகுதியை கிளிநொச்சி மாவட்டத்துடன் இணைக்கும் ஆழியவளை-மாவிலங்கை வீதி விரைவில் திருத்தியமைக்கப்படவுள்ளது. இதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை மூன்று இலட்சம் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

## சர்வோதயம் உதவி

(கைதடி)

சர்வோதய இயக்குநர் திரு. கி.சிவசுப்பிரமணியத்தின் உத்தரவின் பேரில் வடமராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து வேலணை, மண்கும்பான் பகுதியில் குடியேறிய 70 குடும்பங்களுக்கும்,சுன்னுகத்தில் குடியேறிய 45 குடும்பங்களுக்கும், தச்சந்தோப்பில் குடியேறிய 35 குடும்பங்களுக்கும் அரிசி, மா,சீனி,பருப்பு போன்ற நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

## நாடுதிரும்பினுர்

(சுன்னுகம்)

தாய்வான் நாட்டின் தலைநகரான தைப்பேயில் நடைபெற்ற சாரணியப் பயிற்சி வகுப்பிற் கலந்து கொள்ளச் சென்ற திரு.நா.போஜன் பயிற்சியை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளார். இந்த சாரணியப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளச் சென்ற மூவரில் திரு.போஜன் மட்டுமே தமிழராவர்.

# வரிக்குவரி உயரம் குறையும் ஒரு அலுவலகக் கட்டிடம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்காகப் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுவரும் கட்டிடத்தின் உயரம் நாளுக்குநாள், வரிக்குவரி குறைந்து வருகின்றதாம்.

இந்த விடயம் அலுவலக அதிகாரிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. முதல்நாள் பகலில் காணப்படும் சுவரின் உயரம் மறுநாள் காலையில் இருப்பதில்லையாம்.

இரவில் இப்பகுதியைச் சேர்ந்த சிலர் சுவரிலுள்ள கொங்கிரீட் கற்களை தமது தேவைகளுக்காகத் திருட்டுத்தனமாக கழற்றிச் செல்லும் படலம் இங்கு தினமும் தொடர்ந்து வருவதே இதற்குக் காரணமாம்.

சாண்ஏற முழம் இறங்கும் இந்த நிலை தொடர்ந்தால் இறுதியில் கட்டிட அத்திவாரமும் மிஞ்சுமோ என இப்பகுதி மக்கள் அங்கலாய்க்கிறுர்கள்.

# கோமாரி தோற்று அதிகரிப்பு: கால்நடைகள் அதிகளவில் பலி

(முள்ளியான்)

வடமராட்சிக் கிழக்குப்பகுதியில் "கோமாரி" நோயினுல் பல கால்நடைகள் இறந்துள்ளன. முள்ளியான்,மண்டலாய், ஆழியவளை ஆகிய இடங்களிலேயே கூடுதலான கால்நடைகள் இறந்துள்ளன பல கால்நடைகள் கோமாரி நோயினுல் பீடிக்கப்பட்டு அவதிப்படுவதாகவும் தெரியவருகின்றது.

வடமராட்சிக் கிழக்குப்பகுதிக்கு கோமாரித் தடுப்பூசி போடப்பட்ட போதிலும் முள்ளியான், மண்டலாய், ஆழியவளை போன்ற பகுதிகளுக்கு கோமாரித் தடுப்பூசி போடப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றுர்கள்.

கோமாரித் தடுப்பூசி போடுவதற்கு அதிகாரிகள் வருவதாக அறிவித்திருந்தும் இது வரை அவர்கள் வராமையினுல் கால்நடைச் சொந்தக்காரர்கள் கலக்கமடைகின்றுர்கள்.

### அதிபராக இராஜதுரை நியமனம்

# வவுனியா விவசாயக் கல்லூரி 27-ம் திகதி முதல் இயங்கும்

வடக்குக்கிழக்கு மாகாண அரசினுல் எதிர்வரும் 27-ம் திகதி வவுனியாவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் விவசாயக் கல்லூரிக்கு திரு.எஸ் இராஜதுரை அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். குண்டசாலை விவசாயப்பயிற்சிக்கல்லூரியின் முன்னுள் உப அதிபரான இவர் கோயம்புத்தூர் பல்கலைக்கழக விவசாயத்துறை முதுமாணிப்பட்டதாரியாவார்.

விரிவுரையாளர்களாக திருவாளர்கள். பொ.ஆழ்வாப்பிள்ளை, எஸ்.விக்னேஸ்வரன் கே. செல்வநாதன், என். கேதாரநாதன், செல்விகள் கலையரசி சின்னையா, ஜெயக்குமாரி சிவலிங்கம், லலிதகுமாரி நல்லதம்பி, சசிப்பிரபா கந்தசாமி, ஆனந்தினி கணபதிப்பிள்ளை, அன்பழகி ஜெயபாலசிங்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இவர்களை எதிர்வரும் 15-ம் திகதி மாகாண காணி, விவசாய அமைச்சில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர் திரு.எஸ்.சிவதாசன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கடிதங்கள் விரைவில் அனுப்பப்படுமென்றும் தெரிவு செய்யப்பட்ட சகல மாணவர்களும் இம்மாதம் 23ம் திகதி வவுனியா விவசாயக் கல்லூரி விடுதிக்குச்சமுகமளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## கண்காட்சி ஒத்திவைப்பு

(காங்கேசன்துறை)

நேற்று நடைபெறவிருந்த முறைசாரா மாணவர்களின் கல்விக் கண்காட்சி ஒக்டோபர் 4-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இக் கண்காட்சி யாழ். கல்வித்திணைக்களத்தில் இடம்பெறும்.

# காலமானுர்

## இசபெல் கோமர் வன்னியசிங்கம்

இசபெல் காலமானுர். இவர் காலஞ்சென்ற வழக்கறிஞர் அல்பிறட் கோமர்-வன்னியசிங்கம் அவர்களின் அருமைமனைவியும்,சுமுத்திரா,பாலா,சித்திரா, டாக்டர் நிமால், யோகா, சந்திரன்(பொறியியலாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்திச்சபை) அவர்களின் அன்புத் தாயாரும், ரவி வனிஜசூரியர், பிறின்செஸ், எஸ் எக்ஸ். ஞானசேகரம் (கணக்காளர், சுகாதார சேவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்) பிறிடா, அனேஜா அவர்களின் மாமியாரும், காலஞ்சென்ற வழக்கறிஞர் ஜே. ஏ பி. செறுபிம் அவர்களின் சகோதரியும், சுசெயின், நிரஞ்சலி, சாமளி. நறென் லக்சுமி, இந்திரன், ஈஸ்வரன், நடேன், யோகான், பெறின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவாார். அன்னுரின் பூதவுடல் ஞாயிற்றுக் கிழமை 17-09-1989 மாலை 3 15 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து புனித மரியாள் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

"செறுபிம் கவுஸ்"
100 பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

09200

# வடபகுதி அரச திணைக்கள அலுவலக விடுதிகள் பல பராமரிப்பின்றி பாதிப்பு

வடபகுதியில் உள்ள அரசாங்கத்திணைக்களங்களில்பணிபுரியும் அலுவலர்களுக்காக கட்டப்பட்ட விடுதிகள் பராமரிப்பு இன்றி அழிந்து வருவதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடுதிகளில் உள்ள கட்டிடப் பொருள்கள் தனிப்பட்டவர் வீடுகளில் பொருத்தப்பட்டு வருகின்றன. ஜன்னல்கள் கதவுகள், தீராந்திகள், ஓடுகள், கற்கள் போன்ற பொருள்களே இவ்வாறு இடம் மாறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்திவு போன்ற பகுதிகளிலே இந்த மோசடி அதிகமாக இடம்பெற்று வருகின்றது. சில இடங்களில் இந்த அரச அலுவலகர்களின் விடுதிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிகளில் கடமையாற்றிவரும் அரச அலுவலகர்கள் தனிப்பட்ட வீடுகளையே வாடகைக்கு எடுத்து பயன்படுத்தி வருகின்றார்கள். ஆனால் இவர்களின் மாதாந்த சம்பளத்தில் வாடகைப் பணம் கழிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## பிடிக்கப்படும் மீன்கள் மீண்டும் கடலுக்குள் வீசப்படுகிறது

தென்பகுதிக் கடற்கரையோரங்களில் துர்நாற்றம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றார்கள். இத்துர்நாற்றம் மனித சடலங்களால் மட்டும் ஏற்படவில்லை பிடிக்கப்படும் மீன்கள் விற்பனையாகாமல் கடலில் எறியப்படுவதனாலே இத்துர்நாற்றம்ஏற்பட்டுள்ளது.

மனிதனின் விரல்கள் போன்ற சிறிய உடல் உறுப்புகள் மீன்களின் உடலில் காணப்படுவதனாலே மக்கள் மீன்களை வாங்க மறுக்கின்றார்கள். கருவாடு போடுவதற்கும் வியாபாரிகள் தயங்குகின்றார்கள்.

## அரச திணைக்களங்களுக்கு விடுமுறை தினத்தில் வழங்கும் மின்சாரம் வீணடிக்கப்படுகிறது

சனி, ஞாயிறு, போயா தினங்களில் அரச திணைக்களங்களுக்கு வழங்கப்படும் சுழற்சிமுறையிலான மின்விநியோகம் வீணடிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அலுவலகங்கள் இயங்காத போதும் அப்பகுதி மக்களுக்கு சுழற்சி முறை மின் வழங்கப்படுவது வழக்கம். ஓய்வுநாட்களில் மின்சார சுவிட்சுகள்' நிறுத்தப்படாததால் இந்த மின்சாரம் வீணாக்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## சீனியின் விலை அதிகரிப்பு

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் ஒரு கிலோ சீனியின் மொத்த விலை 22-30 சதத்திலிருந்து 22-70 சதமாக செவ்வாய் முதல் அதிகரிக்கப்படவுள்ளது

கூட்டுறவுச் சங்கங்களில் சீனியின் சில்லறை விலை 24 ரூபாவிலிருந்து 24 ரூபா 20 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் ரூபாவின் பெறுமதி குறைந்ததே இவ் விலை அதிகரிப்பிற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டது. வெளிச்சந்தையில் சீனியின் விலை 24 ரூபாவிற்கும் 25 ரூபாவிற்கும் இடையில் விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

### 19-ம் திகதி...

பட்டுள்ளன.

ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி, ரெலோ இம் மாதம் இருபத்தெட்டாம் திகதியும் அகிலஇலங்கைத்தமிழ்க்காங்கிரஸ், ஈழவர் ஜனநாயக முன்னணி(ஈரோஸ்) ஆகியோர் அக்டோபர் 3 ஆம் திகதியும். தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லிம்லீக் ஆகியன அக்டோபர் 5 ஆம் திகதியும்அழைக்கப்பட்டுள்ளன.

ஏனைய கட்சிகளின் சந்திக்கும் கால அட்டவணை பற்றி ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

### பயிற்சிக்கு...

சங்க பிரதிநிதிகள் குறிப்பிட்ட சில பெற்றோர்கள் அடங்கிய குழுவினரிடமே இவர்கள் ஒப்படைக்கப்படவுள்ளார்கள். இரண்டாம் கட்டமாக தென்மராட்சிப்பகுதியில் இருந்து மாணவர்கள் விடுவிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகின்றது.

### சுவிஸ...

வருடத்திற்கு முன் வடமராட்சி அசம்பாவிதங்களைத் தொடர்ந்து வேலை தேடி சுவிஸ்லாந்து சென்றவர் என்றும் ரயிலில் சென்றுகொண்டிருந்த போது தவறுதலாக தரையில் விழுந்து மரணமான தாகவும் தெரியவருகின்றது.

### தெற்கில்...

கட்டிடங்கள் தீ வைத்து பாரிய சேதத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது இவற்றில் அதிகமான கட்டிடங்கள் தரைமட்டமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### மின்தடையால்...

''என்ன ஐயா இப்படிக் கேக்கிறீங்க'' கறண்ட் இல்லாததாலை எங்கடை வருமானம் குறைஞ்சு போச்சுது. வருமானமே இல்லை எண்டு சொல்லலாம். கறண்ட் இல்லாததாலை யாழ்ப்பாணத்துக் கடைக்காரர் தங்களுக்கு வருமானம் இல்லையெண்டு பிச்சை போடுகினமில்லை. கூல்பார் கிறீம் ஹவுஸ் எல்லாம் வெறிச்சோடியிருக்கு. அங்கை வாற சோடிகள்தான் முன்னை எங்களுக்கு பிச்சையாகக் கனகாசு போடுறவை. இப்ப ஆதுகும் இல்லை'' என்று மின்சாரத்தடையால் தமக்கு ஏற்பட்டுள்ள உழைப்பு வீழ்ச்சியைத் தெரிவித்தனர். இவர்களுக்காகவாவது மின்சாரம் வராதா?

## கொழும்பு செல்லும் காரைநகர் பஸ்

காரைநகர் மேற்கு வீதி மக்களின் வேண்டுகோளின் பேரில் கொழும்பு செல்லும் பஸ் வண்டிகள் இன்று முதல் காரைநகர் மேற்கு வீதி சென்று கொழும்பு செல்லும் என்றும் வரும்போது அவ்வாறு சேவையில் ஈடுபடும் என்றும் காரைநகர் இ. போ. ச. சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கிளிநொச்சியில் பாரிய வரட்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாரிய வரட்சியின் காரணமாக அப்பகுதியில் வசிக்கும் மக்கள் குடிநீருக்கு அவதிப்படுவதாகவும் நீண்ட தூரம் அலைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம் மாவட்டத்தில் உள்ளவர்களின் முக்கிய தொழில் விவசாயமாக உள்ளதால் மக்கள் பொருளாதார ரீதியிலும் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றார்கள். பல வருடங்களின் பின்னரே இந்த மோசமான வரட்சி இப்பகுதியில் ஏற்பட்டுள்ளது.

## பாதிக்கப்பட்ட சோப் தொழிலக ஊழியரின் நஷ்ட ஈடு கிடைத்தது

பல வருடங்களாக மில்க்வைற் சோப் தொழிற்சாலையில் கடமை ஆற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. க திருநாவுக்கரசு என்னும் தொழிலாளியை போதிய முன்னறிவிப்பின்றி வேலைநீக்கம் செய்தமையையும், ஊழியர் சேமலாபநிதி ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றை வழங்காமையையும் எதிர்த்து ஈழப் பொதுத்தொழிலாளர் சங்கத்தில் முறையீடு செய்து கொண்டமைக்கிணங்க, ஈழத தொழிற்சங்க சம்மேளனம் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு தொடர்ச்சியாக பல தடவை பேச்சுவார்த்தை நடாத்தியமையின் பெறுபேறாக சுமுகமான தீர்வு காணப்பட்டதாக சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

மில்க்வைற் தொழிற்சாலை நிர்வாகிகள் குறிப்பிட்ட தொழிலாளிக்கு அவர் கடமை புரிந்த காலத்திலிருந்து அவர் வேலை நீக்கம் செய்யப்பட்ட காலம் வரை வழங்கப்பட வேண்டிய சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, சேவைக்கான பணம், திடீர் வேலை நீக்கம் செய்வதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாமையை ஈழத்தொழிற் சங்க சம்மேளனம் சுட்டிக்காட்டி அவை சட்டப்படி அத்தொழிலாளிக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டமையை நிர்வாகம் ஏற்றுக்கொண்டு அவருக்கு ரூபா 28696 வழங்கியதன் மூலம் இணக்கமான தீர்வு காணப்பட்டது.

இப் பேச்சுவார்த்தைகளில் ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் திரு. அ. இராஜலிங்கம், திரு. எஸ். சிவதாசன் ஆகியோரும்,மில்க்வைற் சோப் தொழிற்சாலையின் சார்பில் அதன் பொது முகாமையாளர் திரு. எம். பாலசிங்கமும் கலந்துகொண்டனர்.

### தமிழ்...

மக்களைப் புண்படுத்துவதாக அமைகிறது என பாராளுமன்ற துணைக்கொரடா ஜனாப் அஷ்வர் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்ததை யடுத்தே இப்பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

### வீடு..

குடும்பப் பதிவு அட்டையில் இரண்டாம், மூன்றும், நான்காம் சின்னங்கள் நீக்கப்படாதவர்கள் மட்டுமே மேற்படி நிவாரண உதவி பெறத் தகுதியுடையவர்களாகும்.

இந்த நிவாரண உதவிகள் நன்கொடையாகவும் நீண்டகாலக் கடனாகவும் வழங்கப்படவுள்ளன தகுதியானவர்கள் தத்தம் கிராம சேவை அலுவலர்களிடம் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

### நிறுத்திவைக்கப்பட்ட...

வீதத்தை கடனுதவியாக வழங்கவும் என கொழும்பிலுள்ள சமூகசேவைத் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளது

இதே சமயம், யாழ்ப்பாணத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் உணவு முத்திரையாளர்களுக்கு பொருள்களை வழங்கியதன் நிமித்தம் யாழ். செயலகம் பல லட்சம் ரூபாய்களை மேற்படி சங்கங்களுக்கு வழங்க வேண்டிய நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# பொடிச் செய்திகள்

## டாலர் பவுண் பெறுமதி அதிகரிப்பு

இலங்கை நாணயத்தின் பெறுமதிப்படி ஒரு அமெரிக்க டாலர் நாற்பது ரூபாவாகவும் ஸ்ரேலிங்பவுண் அறுபத்திரண்டு ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

## கிளிநொச்சியில் வீடமைப்பு வேலை ஸ்தம்பிதம்

கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வோதய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவந்த வீடமைப்புத்திட்டங்கள் சிமெந்துத் தட்டுப்பாட்டால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் இத்திட்டத்தின் கீழ் வேலைசெய்துவந்த பல தொழிலாளர்கள் வேலையை இழந்துள்ளனர்.

## அன்னை தெரேசா தேறிவருகிறார்

கல்கத்தா நகர வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அன்னை தெரேசாவின் உடல் நிலை தேறிவருவதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். அவரது உடல் நிலை குறித்து பல இடங்களிலும் வேண்டுதல் ஆராதனைகள் நடத்தப்பட்டன.

## தமிழ்நாட்டில் குழுச்சண்டை மூவர் மரணம்

தமிழ் நாட்டில் மதுரையில் போடிநாயக்கனூரில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் மூவர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பிரதமர் பயணம்

ஜமேக்காவில் நடைபெறும் பொதுநல அமைப்புகள் நாடுகளின் நிதியமைச்சர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ள நிதியமைச்சரும் பிரதமருமான டி. பி. விஜயதுங்க இன்று பயணமாகிறார்.

## வடமராட்சியில் துப்பாக்கி வேட்டுகள்

(உடுப்பிட்டி)

வடமராட்சியின் சில பாகங்களில் நேற்று துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டன.

பருத்தித்துறை வியாபாரிமூலை, நாவலடி, பொலிகண்டி, திக்கம் போன்ற பகுதிகளிலேயே மேற்படி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

## பொலிஸ் அதிகாரியின் மகன் கடத்தல்

(புதுடில்லி)

பஞ்சாபில் நேற்று பொலிஸ் அதிகாரி ஒருவரின் மகனை சீக்கிய தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர். தனது சகோதரியுடன் இச்சிறுவன் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது கார் ஒன்றில் வந்த தீவிரவாதிகள் இவரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

## இந்திய அதிகாரி வெளியேற்றம்

பாகிஸ்தானிலுள்ள இந்தியத்தூதரக அதிகாரி ஒருவர் பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். அண்மையில் இந்தியாவில் உள்ள பாக். தூதரகத்திலுள்ள அதிகாரி ஒருவரை இந்தியா வெளியேற்றியதற்கு பதில் நடவடிக்கையாகவே இது நடைபெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

### இலக்கியப் போட்டி...

பாடு செய்யவில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகின்றது இதனால் தமிழ் ஆசிரியர்கள் கவலையும் வருத்தமும் அடைந்துள்ளார்கள்.

### அரச திணைக்கள..

என அஞ்சப்படுகிறது.

முன்பும் இதுபோல பலர் (தமிழர்கள் உட்பட) வெளிநாடுகளுக்கு புலமைப் பரிசில் பெற்றுச் சென்று அங்கேயே தங்கிவிட்டதாகவும் விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

### இந்திய..

அமையவேண்டும் என்பதற்காகவே டிசெம்பர் இறுதிக்குள் படையை விலக்க ராஜீவ் சம்மதம் தெரிவித்துள்ளார் என்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

முதலில் அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்திற்கு முன்பே படை விலக்கப்படும் என்று ராஜீவ் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இலங்கைப் பிரச்சினையில் ஓர் நல்ல பெயர் எடுக்கவே அவர் டிசெம்பர் இறுதிக்குள் படைவிலக ஒப்புக் கொண்டதாக அரசியல் அவதானிகள் கருதுவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்(பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கிராஞ்சி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகம் பிரிவில் 17.09.89 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது